பக்கங்கள்: 24
விலை:20 ரூபா
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 14, ஞாயிற்றுக்கிழமை 30.07.2017 கதிர் 266

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

# கூட்டமைப்புத் தலைவர்கள் – விக்கி சந்திப்பு அடுத்த வாரம் நடக்காது

## இனி இரண்டு வாரம் கழித்துத்தான்

**யாழ்ப்பாணம், ஜூலை 30**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களையும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனையும் ஒன்றிணைத்து எதிர்வரும் 5 ஆம் திகதிய ளவில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்ட கலந்துரையா டல் அச்சமயத்தில் நடைபெறாது என இப்போது அறிய வருகிறது.

அச்சந்திப்பு அடுத்த இரு வாரங்களுக்குள் நடைபெறு வதற்கான சாத்தியமும் மிகக் குறைவு என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து அறிய வருகின்றது.

பக்கம் 22

## வடக்கில் யுத்தப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஜேர்மன் அரசு உதவும்

### அந்த நாட்டுத் தூதுவர் வடக்கு முதல்வருக்கு உறுதி



யாழ்ப்பாணம், ஜூலை 30

வடக்கில் யுத்தத்தினால் பின் தங்கிய நிலையில் உள்ள மக்களின் பொரு ளாதாரக் கட்டமைப்புக் களை வலுப்படுத்த ஜேர் மன் அரசாங்கம் உதவும் என அந்த நாட்டின் இலங் கைக்கான தூதுவர் தம்மி டம் உறுதியளித்துள்ளார் என வடக்கு மாகாண முத

பக்கம் 22

## பொலிஸ் இன்ஸ்பெக்டரானார் ஆளுநர் ரெஜினோல்ட் குரே!



வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே பொலிஸ் உடையில் தோன்றி நேற்றுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். பக்கம் 22

## 2 ஆம் திகதி வேலை நிறுத்தம்

அரசாங்கத்துக்கு எதி ராக சகல தொழிற்சங்கங் களையும் ஒன்றிணைத்து எதிர்வரும் 2 ஆம் திகதி நாடளாவியரீதியில் வேலை நிறுத்தம் ஒன்றை முன் னெடுக்கக் கூட்டு எதிரணி தீர்மானித்திருக்கிறது. இது தொடர்பில் மஹிந்த ராஜ பக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணிக் குழு தொழிற்சங்கங்களுடன் பேசி வருகிறது.

## போனஸ் ஆசனம் புளொட்டுக்கு இப்போதைக்குக் கிடையாதாம்!

### உள்ளூராட்சித் தேர்தல் வரை காத்திருக்க வேண்டும்

கொழும்பு, ஜூலை 30


வடக்கு மாகாண சபை யின் போனஸ் ஆசனம் சுழற்சிமுறையில் இப்போது தனது கட்சிக்கு வழங்கப் படவேண்டும் என புளொட் எதிர்பார்த்திருக்கின்ற போதிலும் – அது இப்போதைக்கு அக்கட்சிக்கு வழங்கப்பட மாட்டாது என்று விடய மறிந்த வட்டாரங்கள் தக வல் வெளியிட்டன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான உத்தி யோகபூர்வ அறிவிப்பு வரும் வரை அந்த நியம னத்துக்காக புளொட் காத் திருக்க வேண்டும் என இப்போது தெரிய வருகின் றது.

வடக்கு மாகாண சபை யில் ஒரு போனஸ் உறுப்

பக்கம் 22

அளப்பு அருணாசலம்



அப்ப... கூட்டுக்கு வேட்டு எண்டு சொல்லுங்கோ...!

## மாற்றுத் தலைமைத் திட்டம் கைவிடப்பட்டதால் இனிக் கூட்டுத் தலைமை குறித்தே முயற்சியாம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு மாற்றுத் தலைமை ஒன்றை அமைக்கும் திட்டம் பெரும்பாலும் சரிவராது என்ற சூழல் தோன்றியி ருப்பதால், இனிக் கூட்டுத் தலைமை ஒன்று குறித்து முயற்சி எடுப்பது என சம்பந்தப்பட்ட தரப்புகள் தீர்மானித்துக் காய் நகர்த்தி வருகின்றன என்று அறியவருகின்றது.

வடக்கு முதல்வர் சி.வீ. விக்னேஸ்வரனை முன் னிறுத்தி மாற்றுத் தலைமை ஒன்றை உரு வாக்குவதற்கு இது வரை காலமும் சில தரப்புகள் தீவிரமாக முயன்று வந் தன.

ஆனால் அதற்குத் தம் சரிபட்டு வரார் என் பதை வடக்கு முதல்வர்

பக்கம் 22

## புதிய வெளியுறவுச் செயலராக பிரசாத் காரியவாசம் நியமனம்



கொழும்பு, ஜூலை 30

நீண்ட காலம் இலங்கையின் வெளியுறவுச் சேவையில் பணியாற் றிய பிரசாத் காரிய வாசம், வெளியு றவு அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை அவர் அமெரிக்கா வுக்கான பக்கம் 22

## விடுவிக்கப்பட்ட 77 மீனவரும் தமிழகம் திரும்புகின்றார்கள்



யாழ்ப்பாணம் சிறையில் இருந்த 66 மீனவர்களை யும், வவுனியா சிறையில் இருந்த

பக்கம் 22

## சங்கத்தானை பாதுகாப்பற்ற கடவையில் ரயிலுடன் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு



நேற்று சனிக்கிழமை மதியம் 2 மணிக்கு யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண் டிருந்த இன்ரசிற்றி ரயி லுடன் சாவகச்சேரி சங் கத்தானைப் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ஒருவர்

பக்கம் 22

## இன்னும் சு.க. தலைவராக தானே என்கிறார் மஹிந்தர்!

### புதிய சர்ச்சையைக் கிளப்புகிறார்



கொழும்பு, ஜூலை 30

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலை வராகத் தானே இன்னமும் இருக்கிறார் என்று கூறி புதிய சர்ச்சை ஒன்றைக் கிளப்பியிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ.

வேறு யார் பக்கம் 22

## கொழும்பில் சவப்பெட்டி எரித்து துறைமுக ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



அம்பாந்தோட்டை துறை முகத்தை சீன நிறுவனம் ஒன்றுக்கு நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் வழங்கும் ஒப்பந்தம் ஒன்றை இலங்கை அரசு நேற்று செய்து கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும் புத் துறைமுக ஊழியர்கள், சவப் பெட்டி ஒன்றை ஊர் வலமாக எடுத்துச் சென்று அதனை எரித்து ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர். (ஒப்பந்தம் பற்றிய செய்தி 02 ஆம் பக்கத்தில்)

# அம்பாந்தோட்டைத் துறைமுகம் குத்தகைக்கு; நேற்று கைச்சாத்திடப்பட்டது ஒப்பந்தம்!

கொழும்பு, ஜூலை 30

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீன நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தம் நேற்று மதியம் துறைமுக அமைச்சில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த சமரசிங்க மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீன நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தம், நேற்றைய தினம் கைச்சாத்திடப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.



இது தொடர்பாக, ஊடக வியலாளர் மாநாடொன்றில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கும் போது-

கடந்த 2011ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட தடுமாற்றம் காரணமாக, 4 ஆயிரத்து 600 கோடி ரூபாயை இழந்துள்ளது.

இந்தத் தொகையை நாம் இழந்திருக்காவிடின், நாட்டிலுள்ள 25 லட்சம் மக்களுக்கு, இலவசமாக மருந்துகளையும், சிகிச்சைகளையும் அளித்திருக்க முடியும்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்திட்டம் தொடர்பாக, விவாதிப்பதற்கு நேற்று முன்தினம் ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும், அது தொடர்பாக விவாதிக்க, அவர்கள் முன்வரவில்லை. காரணம், விவாதிப்பதற்கு சரியான காரணம் அவர்களிடம் இல்லை.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்திட்டத்துக்கான பாதுகாப்புப் பணிகள் அனைத்தும், சிவில் மற்றும் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்படும் என்றும், நிலப்பரப்புத் தொடர்பான விடயங்களை, அரசே கையாளும் என்றும் கூறியிருந்தார்.

(க)

## ராஜபக்ஷ சகோதரர்களுக்குள் குழப்பம்; தனிமைப்படுத்தப்பட்டார் கோட்டா!



கொழும்பு, ஜூலை 30

அரசின் தன்னிச்சையான செயற்பாடுகளுக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியின் எதிர்கால வேலைத்திட்டங்களை திட்டமிடுவதற்காக விசேட கலந்துரையாடல்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் அடுத்த வாரம் நடைபெறவுள்ளன.

பணிப்புறக்கணிப்புகளை அடக்க அரசு முன்னெடுக்கும் அடக்குமுறைக் கொள்கை, புதிய அரசமைப்புச் சட்டத்தைத் தன்னிச்சையாக நிறைவேற்ற அரசுமேற்கொள்ளும் முயற்சி, கடந்த அரசின் செயற்பாட்டாளர்களை அரசியல் ரீதியாக பழிவாங்கும் திட்டம் போன்றவை குறித்து இதில் கலந்துரையாடப்பட உள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கூட்டு எதிர்க்கட்சியினர் நடத்தும் கலந்துரையாடலில் கலந்துகொள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷ, கூட்டு எதிர்க்கட்சியினர் நடத்தும் கலந்துரையாடல் பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனக் கூறியுள்ளார்.

## மதுபானங்களுடன் வெளிநாட்டவர் கைது!

அனுமதிப்பத்திரம் இன்றி அரச மதுபானத்தை தம்வசம் வைத்திருந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் பொத்துவில் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கார் ஒன்றில் மதுபானத்தை எடுத்துச் சென்றுக் கொண்டிருந்த எகிப்து நாட்டைச்சேர்ந்த சந்தேக நபரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேக நபரை பொத்துவில் பொலிஸாரிடம் அதிரடிப் படையினர் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபரிடம் இருந்து 18 மதுபானப் போத்தல்கள் மற்றும் ரின்களில் அடைக்கப்பட்ட மேலும் 48 மதுபானங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தம் செய்தாலும் நடைமுறைப்படுத்த விடமாட்டோம் என்கிறது ஜே.வி.பி.



கொழும்பு, ஜூலை 30

அம்பாந்தோட்டை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த இடமளிக்கப்படமாட்டாது எனவும், இதற்கு எதிராக சகலரையும் ஒன்றிணைத்துப் பெரிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுப்போம்எனவும் ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்க எந்தவிதத்தில் ஒப்பந்தங்கள் செய்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிக்கப்படாதெனவும், அது வெறும் ஒப்பந்தமாகக் கடதாசியிலேயே இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என அரசு உறுதியளித்திருந்த போதும், சபையை அவசர அவசரமாக ஒத்திவைத்து விவாதிப்பதற்குக் காணப்பட்ட சந்தர்ப்பத்தையும் அரசு இல்லாமல் செய்துள்ளது.

இவ்வாறான நிலையில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 வருடங்கள் சீனாவுக்கு வழங்கும் ஒப்பந்தம் இன்று (நேற்று) கைச்சாத்திடப்படவிருப்பதாக பிரதமர் கூறியுள்ளார். ஒப்பந்தம் கடதாசியில் இருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்த இடமளிக்கப் போவதில்லை எனவும் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீன நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தம் நேற்று மதியம் துறைமுக அமைச்சில் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




யாழ்ப்பாணம், ஜூலை 30

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் திருமுறை அரங்கு: பாட்டு வர்ஜிகன் கமலநாதன், வயலின்: து.ஜெயராமன், மிருதங்கம்: க.ஜனன், கெஞ்சிரா: எஸ்.சண்முகப்பிரியன்.

★★★

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று சைவநெறிச் சன்மார்க்கர் க.ஈஸ்வரன் 'சைவசமய தத்துவம்' என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

(ச)

## பிணை முறி ஆணைக்குழுவின் ஆயுட்காலத்தை நீடிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை!

கொழும்பு, ஜூலை 30

மத்திய வங்கியின் பிணை முறி விநியோகம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆயுட்காலத்தை நீடிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லையென பேர்பெச்சுவல் ட்ரெசரிஸ் நிறுவனத்தின் சார்பான சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆணைக்குழு விசாரணைகளின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 25ஆம் திகதி வரை ஜனாதிபதி ஆணைக்குழுவால் பெறப்பட்ட வாக்கு மூலங்கள் சட்டவிரோதமானவை எனவும் பேர்பெச்சுவல்ட்ரெசரிஸ் நிறுவனத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கூறியுள்ளார்.

இந்தக் காலப் பகுதியில் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதி வர்த்தமானியின் மூலம் அனுமதியை பெற்றுக்கொடுத்திருக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், பிணைமுறி விசாரணை அறிக்கையைத் தயாரிப்பதற்காகக் காலத்தை நீடிக்கலாமே தவிர, சாட்சியங்களைப் பதிவு செய்வதற்காக ஆணைக்குழுவின் காலத்தை நீடிப்பதற்கான சட்டரீதியான அதிகாரம் இல்லை என்றும் பேர்பெச்சுவல் ட்ரெசரிஸ் நிறுவனத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கூறினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இரத்மலானையிலுள்ள காணியை களவாக விற்ற பெண் கைது!

போலி காணி உறுதிப்பத்திரத்தைத் தயாரித்து இரத்மலானை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றை 90 லட்சம் ரூபாவிற்கு வேறு ஒருவருக்கு விற்பனை செய்த பெண்ணொருவரைக் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய இந்தப் பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர். பிலியந்தலைப் பிரதேசத் தைச் சேர்ந்த 34 வயதான பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட பெண் இன்று மொறட்டுவை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# சைவத் தமிழ் மக்களின் வாழ்வியலை மீளமைக்கவே சைவ இளைஞர் மாநாடு

## மாநாட்டுப் பிரகடனத்தில் சைவ மகா சபை விளக்கம்



யாழ்ப்பாணம், ஜூலை 30

சைவத்தமிழர்களின் வாழ்வியல் நெறிமுறைகளை உறுதிப்படுத்துவதற்கும் வீழ்ச்சியடையும் சைவத் தமிழ்ப் பண்பாடுகளை மீட்சி பெறச் செய்வதற்கும், "சைவத் தமிழ் மறுமலர்ச்சியில் இளைஞர்களின் பங்கும் பணியும்" என்ற தொனிப்பொருளில் அகில இலங்கை சைவ மகா சபை யாழ்ப்பாணத்தில் சைவ இளைஞர் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 11,12,13 ஆம் திகதிகள் யாழ். இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இந்த மாநாடு இடம் பெறும்.

மாநாட்டுப் பிரகடனம் வெளியிடுவதற்கான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று (29.07.2017) இணுவில் ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றது.

சிவருசி சசிகுமார் ஐயா தலைமையில் இடம்பெற்ற இந்த வெளியீட்டு நிகழ்விலும் ஊடகவியலாளர் சந்திப்பிலும் சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.நந்தகுமார் மற்றும் சைவ மகா சபையின் சகோதர சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இணைந்திருந்தனர்.

மாநாடு தொடர்பாக வெளியிடப்பட்ட பிரகடனத்தில், சைவத் தமிழர்களின் இளைஞர் அமைப்புக்களை ஆதீனங்களின் வழிகாட்டலுடன் ஒருங்கிணைத்து வினைத்திறன் வாய்ந்த சமய, சமூகப் பணிகளை முன்னெடுத்தல், சைவத் தமிழ் மக்கள் குழுமத்தினரின் இருப்பை உறுதி செய்தல்,

தெய்வத் தமிழ்த் திருமுறைகள், சைவ சித்தாந்த மெய்யியல், திருக்குறள் என்பவற்றை இளையோர் கவரும் விதத்தில் எடுத்துச் செல்லல், குழந்தைகளின் சமூக விழுமியங்களுடன் கூடிய அற நெறிக் கல்வியை வலுப்படுத்தல், ஆலயங்களை பண்டைய தமிழர்களின் பாணியில் முழுமையான சமூக மையங்களாக மிளிரச் செய்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கை சுதந்திரமடையும் போது நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 24 வீதமாக இருந்த சைவத் தமிழ் மக்கள் குழுமம் இன்று 12.5 வீதமாக, அதாவது சரி அரைப்பங்கிற்கு குறைந்துள்ளமை தொடர்பாக இந்தப் பிரகடனத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், இலங்கையிலுள்ள நான்கு மதக் குழுமங்களிலும் அதிகுறைந்த வளர்ச்சியிலுள்ள மதக் குழுமமாக சைவத் தமிழ் மக்கள் மாறியமை, சைவத் தமிழர்கள் பெரும்பான்மையாக இருந்த திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் இன்று அவர்கள் 2ஆம், 3ஆம் நிலைக்குத் தள்ளப்பட்டமை, யாழ்ப்பாணம் முல்லைத்தீவு மாவட்டங்கள் இலங்கையிலேயே பிறப்பு வீதம் குறைந்த மாவட்டங்களாக உள்ளமை குறித்தும் அந்தப் பிரகடனத்தில் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி நிலைகளை மாற்றுவதற்கு சைவத் தமிழர்கள் அதிக பிள்ளைகளைப் பெற ஊக்குவித்து, அவர்களுக்கு பொருளாதார ரீதியில் உதவ முன்வருவதுடன், தக்க பருவத்தில் திருமணத்திற்கு தடையாக இருக்கும் கடுமையான சாத்திரம், சீதனம் போன்றவற்றில் இருந்து விடுபட இளைஞர்களுக்கு அழைப்பு விடுப்பதாக இந்த மாநாடு அமையும் எனவும் மாநாட்டு பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், தென்கயிலை ஆதீன குருமகா சந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளார், தமிழக பேரூர் ஆதீன இளைய பட்டம் தவத்திரு மருத்தாசலம் அடிகளார் ஆகியோரின் வழிகாட்டலில் அகில இலங்கை சைவ மகா சபையால் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நல்லூர் றோட்டறிக் கழகத்தால் நவாலியில் மருத்துவ முகாம்




நவாலி, ஜூலை 30

நல்லூர் றோட்டரிக் கழகத்தின் "வாரம் ஒரு செயற்றிட்டத்தின்" கீழ் நவாலி வடக்கு முதியோர் சங்கக் கட்டடத்தில் முதியோருக்கான இலவச மருத்துவ முகாம் கழகத் தலைவர் லயன் க.சதீபன் தலைமையில் நேற்று இடம் பெற்றது

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பதில் பொறுப்பு வைத்திய அதிகாரி எஸ். பிரதீபன் தலைமையிலான மருத்துவர் குழாம் நீரிழிவு மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதனைகளை மேற்கொண்டது. இலவசமாக மருந்துகளும் வழங்கப்பட்டன.

இந்த இலவச மருத்துவ முகாமில் 100 இற்கும் மேற்பட்ட முதியோர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)

# உரும்பிராயில் விபத்து; இரு கடைகள் சேதம்



உரும்பிராய், ஜூலை 30

உடுவிலில் இருந்து புன்னாலைக்கட்டுவன் நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறிய படிவாகனம் ஒன்று உரும்பிராய் காளி கோயிலுக்கு அருகில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. எனினும், தெய்வாதீனமாக எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

நேற்று சனிக்கிழமை பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது அங்கிருந்த இரு வர்த்தக நிலையங்கள் சேதமடைந்தமையுடன் அங்கு நிறுத்தப்பட்டிருந்த துவிக்கக்கரவண்டி ஒன்றும் சேதமடைந்தது.

இரும்புக் கம்பிகள் உள்ளிட்ட பாரமான பொருள்களை ஏற்றிச் சென்ற மேற்படி வாகனத்தின் அடிச் சட்டகப் பாகம் ஒன்று திடீரென உடைந்ததால் இந்த விபத்து ஏற்பட்டது எனக் கூறப்படுகின்றது. (ம)

# மன்னார் - பரப்புக்கடந்தானில் 800 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பு

## நபர்கள் சிலர் அட்டகாசம்



மன்னார், ஜூலை 30

மன்னார் - மாந்தை பரப்புக் கடந்தானில் பொது மக்களின் 800 ஏக்கர் காணியை தனி நபர்கள் சிலர் ஆக்கிரமித்து வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியுள்ளனர் என மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறித்த தனியார் நிறுவனம் அந்தக் காணியில் தற்போது அன்னாசி செய்கையை மேற்கொண்டு வருகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்களுக்குச் சொந்தமான மேற்படிக் காணியை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீளப் பெற்று மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மாந்தை மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோதே பிரதேச செயலாளர் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

இணைத் தலைவர்களான அமைச்சர் றிஷாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோரின் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது மேற்படி காணி ஆக்கிரமிப்புத் தொடர்பாக பிரதேச செயலாளர் மேலும் கூறுகையில் –

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரப்புக்கடந்தான் பகுதியில் 1989 ஆம் ஆண்டு 287 ஏக்கர் காணி 650 பேருக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரித்துக் கொடுக்கப்பட்டது. பின்னர் நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக 1990 ஆம் ஆண்டு மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர்.

இந்த நிலையில் தற்போது சில தனி நபர்கள் அந்தக் காணிகளுக்கான ஆவணங்கள் தங்களிடம் உள்ளன எனக்கூறி அப்பகுதியில் உள்ள சுமார் 800 ஏக்கர் காணியை புதிய அனுமதிப்பத்திரங்கள் தயாரித்து கையகப்படுத்தியுள்ளனர்.

1972 ஆம் ஆண்டின் காணி சீர் திருத்தச் சட்டத்தில் 50 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை தனியார் வைத்திருக்க முடியாது எனக்கூறப்பட்டுள்ளது. இதனால் மேற்படி 800 ஏக்கர் காணியை அவர்கள் புதிய ஆவணங்கள் மூலம் ஆட்சிப்படுத்த முனைகின்றனர்.

மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளை எல்லையிட்டுள்ள வன வள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், அப்பகுதியில் தனியார் சிலர் புதிய ஆவணங்கள் மூலம் காணி அபகரிப்பில் ஈடுபட்டுள்ள போதும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால், வன வள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தனியாருக்குத் துணை நிற்கின்றனர் என நான் கருதுகின்றேன்.

எனவே, அந்தக் காணிகளை உடனடியாக மக்களிடம் கையளிக்க வனவளத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பிரதேச செயலாளர் மேலும் கூறினார். (ம)

நல்லூர்க் கந்தனுக்கு இன்று மூன்றாம் திருவிழா
30.07.2017



வள்ளியை மணம் முடித்த மணவாளா - எமக்கு
வருந்துன்பம் கண்டு நீ இரங்காயா
பிள்ளை மனம் கொண்டவனே பெருமானே - உன்
பேரொளி இருள் நீக்க இன்றே எழுவாயே!
- அலெக்ஸ் பரந்தாமன், புதுக்குடியிருப்பு.

யாழ். நகரில்.....
அசல் 22 கரட் தங்க நகைகள்
விற்பனையாளர்
விஷ்ணு ஜுவல்லறி
தங்கப் பவுன் நகை வியாபாரம்
இல:- 181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(வின்சர் தியேட்டர் முன்பாக)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## அரசியல் நோக்கங்களுக்கான தொழிற்சங்க நடவடிக்கைகள்

எரிபொருள் ஊழியர் வேலைநிறுத்தத்தை அடுத்து எழுந்த பதற்றநிலை, நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற அமர்வு அமளி, துமளியில் முடிவடையும் அளவுக்கு விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது.

எரிபொருள் விநியோகத்துடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள் நடத்திய திடீர் வேலைநிறுத்தத்தால் முழு நாடுமே செயலிழக்கும் ஆபத்து ஏற்பட்டது.

உடனடியாக அரசு பதிலடி நடவடிக்கையில் ஈடுபட்டது. எரிபொருள் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான பணிகளை அவசர - அத்தியாவசிய - சேவையாகப் பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி கையொப்பமிட்டார்.

அத்தியாவசிய சேவையை தங்கு தடையின்றி நடத்துவதற்காக கொலன்னாவை மற்றும் முத்துராஜவெலப் பகுதிகளில் இருந்த எரிபொருள் களஞ்சியசாலைகளுக்குள் இராணுவம் புகுந்தது. அத்தியாவசியப் பணிகளை அரச ஊழியர்கள் செய்ய மறுத்தமையால் அதனை இராணுவத்திடம் ஒப்படைக்கின்றோம் என்று தெரிவிக்கப்படும் நியாயப்படுத்தலுடன்தான் படைகள் களமிறக்கப்பட்டன.

அதனை பெற்றோலிய ஊழியர்கள் ஆட்சேபித்தனர். தங்களின் வேலைக்குள் புகுந்த படைத்தரப்புடன் அவர்கள் முரண்பட்டனர். அதனையடுத்து பதினைந்துக்கும் அதிகமான பெற்றோலிய ஊழியர்களும், ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையில் அப்பகுதியில் அரசு சார்புக் குண்டர் குழுக்களும் களத்தில் இறக்கப்பட்டனர் என்றும் -

அந்தக் குண்டர் குழு நடத்திய தாக்குதலில் பெற்றோலிய ஊழியர்கள் பலர் டசின் கணக்கில் படுகாயமடைந்தனர் என்றும் - கூறப்பட்டது.

இதையடுத்தே விவகாரம் சூடுபிடித்திருக்கின்றது. அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின் கீழ் எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் சட்டமூலத்தை வாக்கெடுப்புக்கு விடுவதற்காக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் எடுத்தபோது அதனைப் பெரிய விவகாரமாக்கி, சர்ச்சையைக் கிளப்பினர் எதிரணியினர்.

பிரதான - உத்தியோகபூர்வ - எதிரணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசின் செயலைக் கண்டிக்கவில்லை. ஆனால், ஆளும் சு.க. தரப்பின் மாற்றுக் குழுவான கூட்டு எதிரணியும், ஜே.வி.பியும் அரசின் செயற்போக்கைக் கண்டித்தன. பெற்றோலிய ஊழியர்களை குண்டர் குழுக்கள் தாக்குகின்றமையைக் காட்டும் பெரிய புகைப்படங்களைத் தாங்கியவாறு அவர்கள் நாடாளுமன்ற மையத்தில் நின்று களேபரப்பட்டனர். அதனால் பெரும் இழுபறியுடன் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. ஆனால், மேற்படி வாக்கெடுப்பு அரசுக்குச் சார்பாக குரல்வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது என சபாநாயகர் பின்னர் தாம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்திருக்கின்றார்.

தொழிற்சங்கங்கள் பிரச்சினை ஒன்று, இராணுவத்தினரைக் களத்தில் இறக்கி, குண்டர் குழுக்கள் மூலம் தாக்குதல் நடத்திக் கையாளப்பட்டமை ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல; தவறான செயற்போக்கே.

ஆனாலும், தொழிற்சங்கங்கள் முன்னெடுத்தமை தொழிற்சங்கப் போராட்டமா என்பதுதான் இங்கு பிரதான கேள்வி.

தொழிலாளர்களின் நேரடி நலன், சம்பளம், ஊதியப் பிரச்சினைகள், தொழிற்பிரச்சினைகள் போன்றவற்றை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட போராட்டம் அல்ல இது.

அரசியல் பின்புலத்தோடு, அரசியல் நோக்கங்களுக்காக தொழிற்சங்கங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதே இந்தப் போராட்டத்தின் பின்னால் இருக்கும் இரகசியமாகும்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனம் ஒன்றுக்குக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு எடுத்த நடவடிக்கையை ஆட்சேபித்தும், அதைத் தடுத்து நிறுத்தும் நோக்குடனுமே இந்த எரிபொருள் ஊழியர்களின் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதுதான் பிரதான இலக்கு; நோக்கம்.

இந்த விடயம் ஏற்கனவே பெரிய அரசியற் சர்ச்சையாக நாட்டில் உருவெடுத்திருக்கின்றது. அந்த அரசியல் சர்ச்சையை முன்னெடுத்த தரப்புகள், தொழிற் சங்க நடவடிக்கை வரை அதனை விஸ்தரித்தன.

அதனாலேயே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையை அடியோடு அடக்குவதற்கு அரசு எடுத்த பதிலடிச் செயற்பாடுகளுக்கு எதி ரணித் தரப்பில் உள்ள பிரதான அரசியல் கட்சிகள் இவ்வளவு தீவிரமாக எதிர்ப்புக் காட்டின.

அரசியல் கட்சிகள் தமது அரசியல் செயற்பாடுகளை - நோக்கங்களை - இலக்குகளை - எட்டுவதற்கு தொழிற்சங்கங்களைத் தூண்டி, போராட்டங்களுக்குள் இறங்க வைத்து, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துகின்றபோது, அதனை அதற்குரிய பாணியில் அரசு கையாளவே செய்யும்.

முதலில் தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளின் குறுகிய இலக்குகளுக்குத் துணைபோகும் கைத்தடிகளாக தாம் மாறுகின்றமையை விலக்கிக் கொண்டு செயற்பட வேண்டும்.

முன்னைய அரசின் காலத்தில் இருந்தமை போல, இத்தகைய விடயங்களைப் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் அவசர காலச் சட்ட விதிகள் ஆகியவற்றின் கீழ் இந்த அரசும் கையாள முயன்றால், விடயம் மிக மோசமாகும் என்பதையும் அரசியல் கட்சிகளின் கைப்பாவையாகச் செயற்படும் தொழிற்சங்கங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

# யுத்தம் முடிவடைந்த பின்னரும் நாங்கள் வலுவிழந்துவிடவில்லை!

## அபிவிருத்தியை நோக்கியே பயணிக்கிறோம் என்கிறார் பிரதமர் ரணில்



இந்த நாட்டில் யுத்தம் முடிவடைந்ததும் நாங்கள் வலுவிழந்துவிடவில்லை. அபிவிருத்திகளையும் சவால்களையும் நோக்கியே சென்றுகொண்டிருக்கின்றோம்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் நடைபெற்ற கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

மூவின மக்களும் வாழும் பிரதேசமாக கிழக்கு மாகாணம் உள்ளது. இங்கு அதிகளவான வளங்கள் உள்ளன. அவற்றில் முழுமையான பிரயோசனங்கள் அடையப்படவில்லை. அந்த வளங்களைப் பயன்படுத்தி எவ்வாறு பயன் பெறலாம் எனச் சிந்திக்க வேண்டும். மூவின மக்களும் ஒன்றிணைந்து எவ்வாறு இந்தத் திட்டங்களை முன்னெடுக்கலாம் என்பது தொடர்பில் ஆராய வேண்டும்.

யுத்தின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பெருமளவான நிதிகள் வழங்கப்பட்டுள்ளன. சர்வதேசத்தின் ஊடாகவே அந்த நிதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதனைச் சரியாக பயன்படுத்த வேண்டும். அதனை நாங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.பேசிக்கொண்டிருக்கின்றனரே தவிர எந்தவித முன்னேற்றத்தையும் இதுவரை காணமுடியவில்லை.

திருகோணமலையிலும் சிங்கப்பூர் அரசால் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், மட்டக்களப்பில் உள்ள விமான நிலையத்தை இலங்கையில் உள்ள ஏனைய விமான நிலையங்களுடன் ஒருங்கிணைத்து அதன் மூலம் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யமுடியும் என எதிர்பார்க்கின்றோம். இதன் மூலம் குறைந்த நேரத்தில் மாத்தறையில் இருந்து மட்டக்களப்புக்கு வந்து செல்ல முடியும். அதேபோன்று பாதை புனரமைப்புக்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட உள்ளன. இதனைச் சவாலாக எடுத்து செய்துபார்க்கவேண்டிய தேவையுள்ளது. குறுகிய காலத்துக்குள் தீர்மானிக்கப்படும் வேலைத்திட்டங்கள் வெற்றியடைவதில்லை எனக் கூறுகின்றனர். அதனைச்செய்து பார்ப்போம்.-என்றார். (ச)

# தாயகம் திரும்புகின்ற அகதிகளுடைய எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பு!

## ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகம் தெரிவிப்பு

இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்கள், சுய விருப்பத்தின் அடிப்படையில் நாடு திரும்பும் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது என ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாத்திரம் இந்தியாவில் இருந்து 57 பேர் தாயகம் திரும்பி உள்ளனர்.

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் உள்ள அகதி முகாம்களில் இலங்கைத் தமிழர்கள் வசித்து வருகின்றனர். இந்த நிலையில், திருச்சி மற்றும் சென்னை நகரங்களில் வசித்து வந்த 57 பேரே கடந்த வாரம் நாடு திரும்பியுள்ளனர். அத்துடன் கடந்த 27 ஆம் திகதி 36 அகதிகள் நாடு திரும்பி உள்ளனர்.

மேலும், கடந்த 2014 ஆம் ஆண்டு சுமார் 396 பேரும் 2015 ஆம் ஆண்டில் 452 பேரும் 2016 ஆம் ஆண்டில் 852 பேரும் தாயகம் திரும்பினர். இந்த வருடத்தில் மாத்திரம் இதுவரை 809 பேர் நாடு திரும்பி உள்ளனர்.

இந்த நிலையில், தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு அழைத்துவர இரு நாடுகளுக்கும் இடையில் கப்பல் சேவைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகம் வலியுறுத்தி உள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதிவரை தமிழகத்தில் உள்ள 107 அகதி முகாம்களில் 19 ஆயிரத்து 248 குடும்பங்களை சேர்ந்த 62 ஆயிரத்து 629 பேர் தங்கியிருக்கின்றனர் என அதிகாரபூர்வ அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, அகதி முகாம்களுக்கு வெளியிலும் ஆயிரக்கணக்கானோர் வசித்து வருகின்றனர். போர்நடைபெற்ற காலத்தில் இலங்கையில் இருந்து மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# நீரில் மூழ்கியது கண்டி நகரம்!

கொழும்பு, ஜூலை 30

கண்டியின் பல பகுதிகளில் திடீரென பெய்த அடைமழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மத்திய கால்வாயில் நீர் நிரம்பியமையால் கண்டி, சுதுஹும்பல பிரதேசத்திலுள்ள பல வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

நேற்று 6.30 மணியளவில் பெய்த அடைமழையைத் தொடர்ந்து சில பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன என குறிப்பிடப்படுகின்றது.

எப்படியிருப்பினும் தற்போது நீர் குறைந்து வருகிறது எனக் கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இரவு முதல் அடைமழை பெய்திருந்தால் பெரியளவில் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கும் என பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(க)

## இனிப்பூட்டிய பானங்கள் ஆரோக்கியமற்றவை

இனிப்பூட்டிய பானங்களுக்குப் பதிலாகச் சுத்தமான நீர், இயற்கையான பழச்சாறு (சீனி போடாதது), இளநீர் போன்றவை சிறந்தவை. பாடசாலைகள், வேலைத்தளங்கள் மற்றும் பொது இடங்களில் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதனை உறுதி செய்தல் வேண்டும்.



பாதுகாப்பான குடிநீரை எம்முடன் எடுத்துச் செல்லப் பழகிடுவோம்

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

31.07.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம் : சுவாதி பி.ப. 01.07 வரை
திதி : அட்டமி பி.ப. 12.48 வரை

சுபநேரம் : 12.03 – 01.33வரை
இராகுகாலம் : 07.33 – 09.03 வரை

# வடக்கு கிழக்கில் சமஷ்டி தீர்வை அரசு தர மறுத்தால் பிரிந்து வாழும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்!

## மட்டு. நகரில் நடந்த கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வில் செல்வம் எம்.பி

மட்டக்களப்பு, ஜூலை 30

வடக்கு கிழக்கில் சமஷ்டி முறையிலான தீர்வினை இந்த அரசாங்கம் தர மறுக்குமானால் நாங்கள் பிரிந்து வாழும் சந்தர்ப்பத்தைத் தர வேண்டும் என சர்வதேசத்திடம் நாங்கள் கேட்கும் நிலையேற்படும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு அமெரிக்க மிஷனில் நடைபெற்ற வெலிக்கடை சிறைப்படுகொலை மற்றும் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் அகிம்ஷைப் போராட்டம் தேவையற்றது. அது புதைக்கப்பட வேண்டும் என்ற போது தான் தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி போன்றவர்கள் ஆயுதம் மூலமே இவற்றை வெல்ல முடியும் என நினைத்தனர். அதன் காரணத்தினால் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இன்று இந்த ஆயுதப் போராட்டத்தை பலர் கொச்சைப்படுத்துகின்றனர். இந்த ஆயுதப் போராட்டம் மூலமே இலங்கையில் உள்ள இனப் பிரச்சினையை சர்வதேச சமூகத்துக்கு தெளிவாக வெளிக்காட்ட முடிந்துள்ளது.

தமிழர்கள் ஒற்றுமையாக நீண்டகாலத்திற்கு செயற்படுபவர்கள் அல்லர். எங்களுக்குள் காட்டிக் கொடுப்போர் அதிகளவில் இருந்ததன் காரணமாக அகிம்ஷைப் போராட்டமோ ஆயுதப்போராட்டமோ வெற்றி பெற்றதான சரித்திரம் இருக்கவில்லை.

ஆயுதப் போராட்டத்தின் பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலையில் போடப்பட்டுள்ளது. தமிழர் களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு முக்கியமானவராக இருந்தவர் மறைந்த ஊடகவியலாளர் சிவராம் ஆவார்.

அதனை இங்கு நான் நினைவு கூருகின்றேன். ஏனென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்தில் இணைந்து பணியாற்றியவன் என்ற காரணத்தால் அது தொடர்பான விடயம் எனக்கு தெரியும்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மீதும் பல்வேறு விமர்சனங்கள் வருகின்றன. புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எல்லாவற்றையும் அடமானம் வைத்து விட்டதாக சிலர் பிரசாரம் செய்து வருகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் என்னுடைய பதவியும் இருப்பதனால் அரசாங்கத்திற்கு அடிபணிந்து விட்டோம் என சிலர் கருதுகின்றனர்.

சிறுபான்மை மக்களால் எந்த மாற்றத்தினையும் ஏற்படுத்த முடியாது எனக் கருதிய தென்னிலங்கைக்கு ஜனாதிபதித் தேர்தல் மூலம் மாற்றத்தினை ஏற்படுத்திக் காட்டியவர்கள் இந்த தமிழ் பேசும் மக்கள் ஆவர்.

வடக்கு,கிழக்கில் எமது இளைஞர்கள் இரத்தத்தினை சிந்தினார்கள். இணைந்த வடக்கு , கிழக்கினை பிரிப்பதற்கு யாராலும் முடியாது.

வடக்கு,கிழக்கு இணைக்கப்பட வேண்டும். சமஷ்டி முறையிலான தீர்வு கிடைக்க வேண்டும். இதுதான் எங்களது கொள்கையாகும்.

இதில் எந்த விடயத்தினையும் விட்டுக்கொடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்லாது என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எங்களுக்குள் ஒற்றுமை வேண்டும். எங்களுக்குள் பிரிவுகள் இருந்தால் எமது இனத்தை நாங்கள் காப்பாற்ற முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# புதிய அரசு ஒன்றை உடனடியாக ஏற்படுத்த என்னால் முடியும்!

### ஜனாதிபதி மைத்திரி எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 30

அவசியம் ஏற்பட்டால் உடனடியாக புதிய அரசு ஒன்றை உருவாக்க தன்னால் முடியும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



எனினும், தூய்மையற்ற அரசு ஒன்றை உருவாக்க நாம் தாயாரில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு மற்றும் அனைத்து இலங்கை செயற்குழுக் கூட்டம் என்பன பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றன.

இதன்போதே கட்சி உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தூய்மையற்ற அரசாக இருந்ததன் காரணமாகவே, கடந்த அரசிலிருந்து நாம் வெளியேறினோம். தற்போது இருக்கும் இடமும் தூய்மையற்றது என்றால், நம்மால் அங்கும் இருக்க முடியாது.

புதிய அரசொன்றை நாம் நிறுவினால், அது தூய்மையான அரசாக இருக்குமே தவிர, தூய்மையற்ற அரசாக இருக்க மாட்டாது என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுச் செயலாளர் பதவியிலிருந்து துமிந்த திஸாநாயக்கவை நீக்க வேண்டும்!

### அமைச்சர் டிலான் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து துமிந்த திஸாநாயக்கவை ஜனாதிபதி நீக்க வேண்டும் என அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.



பதுளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் 2020 ஆம் ஆண்டில் புதிய அரசு ஒன்றை நிறுவ, இந்தநடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

கட்சியின் பொதுச் செயலாளரான துமிந்த திஸாநாயக்கவை அந்தப் பதவியிலிருந்து ஜனாதிபதி நீக்க வேண்டும்.

அது ஜனாதிபதி கட்சிக்குச் செய்யும் நல்லதொரு விடயமாகும். இதே வேளை, கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்துள்ளார்.

# முல்லைத்தீவில் வறட்சி; மக்கள் குற்றச்சாட்டு!

முல்லைத்தீவு, ஜூலை 30

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இதுவரையில் எவ்வித உதவித் திட்டங்களும் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்டுள்ள மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின், பல மாவட்டங்கள் தொடரும் வறட்சி காலநிலையால் பாதிக்கப் பட்டுள்ளன.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டமும் அதிகளவில் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதுடன், விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பொது மக்களும் அன்றாடம் குடிதண்ணீர் இன்றி சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், வறட்சியான கால நிலை தொடர்வதால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு வறட்சி நிவாரணம் வழங்கியுள்ளது தென்கொரியா!

கொழும்பு, ஜூலை 30

இலங்கையின் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு தென் கொரியா எட்டு தண்ணீர் பவுஸர்கள் உள்ளிட்ட நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இந்த நிவாரண பொருள்கள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டுள்ளன.

தென்கொரிய நாடாளுமன்ற தூதுக் குழுவின் தலைவர்களான கொரிய தேசிய பேரவையின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஹாங் மூன் - ஜோங் மற்றும் யூ கி - ஜூன் ஆகியோர் இந்தப் பொருள் களை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா, கொரியத் தூதுவர் ஒன் - சாம் சாங் ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றுள்ளனர்.

வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன் வந்தமைக்காக தென்கொரிய அரசுக்கும் மக்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நன்றி தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவால் வழங்கப்பட்ட இந்த பவுஸர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா இதன் போது தெரிவித்துள்ளார்.



# திருவாசகத் தேன் தந்த பெருவள்ளல் மாணிக்கவாசகரின் குருபூசைத் தினம்!

பாண்டிய நாட்டின் திருவாதவூரில் பிறந்தவர் மாணிக்கவாசகர். இவர் சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவராக போற்றப்படுகிறார். இவரது இயற்பெயர் வாதவூரார் என்பதாகும். இவருக்குத் தன்னுடைய அரசவையில் அமைச்சர் பதவி வழங்கினான் அரிமர்த்தன பாண்டிய மன்னன்.

இவர் உயர்ந்த பதவி, செல்வம் அனைத்தும் இருந்தும், இவை வாழ்வின் இறுதி நோக்கமல்ல என்பதை உணர்ந்தார். சைவ சித்தாந்தத்தை ஆராய்ந்து சிவ வழிபாட்டை பின்பற்றினார்.

மாணிக்கவாசகர் அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்க மறுத்து சிதம்பரம் சென்றார் மாணிக்கவாசகர். தில்லையம்பதியானை நினைத்து அவர் திருவாசகம் பாட, அதனை அங்கிருந்த வேதியர் ஒருவர் சுவடியில் எழுதினார்.

இறுதிப் பாடலின் அடியில் திருவாதஊரார் கூற திருச்சிற்றம்பலமுடையான் எழுதியது என்று கையெழுத்திட்டு, அந்த வேதியர் மறைந்தார். அப்போதுதான் தான் பாடிய திருவாசகத்தை எழுதியது சிவபெருமான் என்பதை அவர் அறிந்தார்.

பன்னிரு திருமுறைகளில் 8 ஆம் திருமுறையாக உள்ள திருவாசகமும், திருக்கோவையாரும் மாணிக்கவாசகரால் பாடப்பட்டதாகும். 32 ஆண்டுகள் வாழ்ந்த மாணிக்கவாசகர், ஆனி மாதம் மக நட்சத்திரத்தில் இறைவனடி சேர்ந்தார்.

இன்று ஆனி மாதம் மக நட்சத்திரம். இறைவனுக்கும், தமிழுக்கும் அருந்தொண்டாற்றிய மாணிக்கவாசகரை வாழ்த்தி வணங்குவோம்.

# பட்டதாரிகளின் சேவைக்கான வயதெல்லை 45 ஆக வேண்டும்

## கிழக்கு மாகாண உறுப்பினர் துரைரெட்ணம்

பட்டதாரிகளை சேவையில் இணைத்துக் கொள்வதற்கான வயதெல்லை 45 ஆக உயர்த்தப்பட வேண்டும்.

-இவ்வாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் குறிப்பிட்டார்.

பட்டதாரிகள் நியமனம் தொடர்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வேலையற்ற பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வதற்காக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் போட்டிப்பரீட்சை நடத்தப்பட்டுநியமனம் வழங்கப்பட உள்ளது. இதற்காக 40 வயது வரையான பட்டதாரிகளை மட்டுமே நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுச்சேவை ஆணைக்குழு கல்வி அமைச்சுக்கு ஆளுநர் அறிவித்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அறிவிப்பால் 70 இற்கும் மேற்பட்ட 45 வயது வரையான வேலையற்ற பட்டதாரிகள் பாதிப்பை எதிர்கொள்கின்றனர். இவர்கள் அரச நியமன வயது எல்லையை 45 ஆக உயர்த்த வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களது கோரிக்கை நியாயமானது. -என்றார். (ச)

### காணாமற்போனோர் விடயத்தில் தீர்வு காண

# சர்வதேசத்துடன் இணைந்து நாம் செயற்பட வேண்டும்!

நாட்டில் காணாமற்போனோர் தொடர்பில் தீர்வு காண்பதற்கு நாம் சர்வதேசத்துடன் இணைந்து செயற்பட வேண்டும்.

- இவ்வாறு அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காணாமற்போனோர் எனக் கூறப்படுகின்றவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா?



என்பது தொடர்பில் உறுதியாக எதுவும் தெரியவில்லை. இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் நாட்டில் பல பிரச்சினைகள் உருவெடுத்துள்ளன.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமெனில் காணாமற்

## அமைச்சர் துமிந்த தெரிவிப்பு

போனோரின் குடும்ப உறுப்பினர்களின் குடும்ப நலன்புரி நடவடிக்கைகளுக்காக புதிய வேலைத்திட்டம் ஒன்றைச் சர்வதேசத்தின் ஆதரவுடன் முன்னெடுக்க வேண்டும். இதன் ஊடாகப் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வை வளப்படுத்த முடியும். -என்றார். (ச)

# ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் தமிழ் மக்கள் ஒருபோதும் தோற்கவில்லை!

## ரெலோ சர்வதேச விவகார பொறுப்பாளர் கீரன்

ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டு விட்டது. ஆனாலும் தமிழ் மக்கள் ஒருபோதும் தோற்கவில்லை. இந்த ஆயுதப் போராட்டத்தின் முடிவு என்பது தமிழ் மக்களின் போராட்டத்தின் முடிவல்ல.

-இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) சர்வதேச விவகார பொறுப்பாளர் மா.கீரன் தெரிவித்தார்

வெலிக்கடைச் சிறையில் 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் உட்பட 53 அரசியல் கைதிகள் மற்றும் பொது மக்களின் 34 ஆவது ஆண்டு தியாகிகள் நினைவஞ்சலி நிகழ்வு மட்டக்களப்பு அமெரிக்கன் மிஷன் தேவாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த வன்முறை என்பது நாம் விரும்பி ஏற்றுக் கொண்டதல்ல. சிங்களபேரினவாத அரசால் தொடர்ச்சியாக அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட தமிழ் மக்கள் நீண்ட காலமாகச் செய்யப்பட்ட சாத்வீகப் போராட்டங்கள் வன்முறையால் அடக்கப்பட்டன. அந்தச் சாத்வீகப் போராட்டத்தின் தோல்வியின் பின்னே ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பண்டாரநாயக்கா 1956 இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வந்தார். அதனை எதிர்த்து வடக்கு, கிழக்கில் இருந்த மக்கள் மற்றும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டம் செய்தனர். அவர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இரத்தம் வழிந்த நிலையில் அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தார் அப்போது அவரைப் பார்த்து 'போர்க்களத்தில் இருந்து வருகிறார்' என பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

1974 ஆம் ஆண்டு கலவரம் இடம் பெற்றபோது இப்போதைய பிரதமரின் மாமனாரும் அப்போதைய ஜனாதிபதியுமான ஜே.ஆர். ஜெயவர்த்தன, 'இது சிங்கள மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கிறது. எனவே சிங்கள மக்களின் உணர்வுகளை மதிக்கின்றேன்' என்று அன்று வானொலிகளில் தெரிவித்தார்.

இவ்வாறான நிலைமை தான் ஒரு வன்முறை போராட்டத்துக்குள் தமிழரைத் தள்ளியது. எனவே, தமிழ் மக்கள் ஒரு வன்முறைப் போராட்டத்துக்குள் சென்றமை தற்செயலாக நடந்தது அல்ல. நீண்ட காலமாகத் தமிழர்களுடைய கோரிக்கைகள் மறுக்கப்பட்டன. அதன் பின்புதான் வன்முறை போராட்டத்துக்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டார்கள். அந்த நேரம் இவ்வாறான சர்வதேச அழுத்தம் இருக்கவில்லை.

இதேவேளை, நீதிமன்றத்தில் தலைவர் தங்கத் துரைக்கு ஆயுள் தண்டனை விதித்தபோது அங்கு அவர் 'தமிழ் மக்கள் விடுதலை அடைவதன் ஊடாகத்தான், சிங்கள மக்கள் விடுதலை அடைவார்கள்.

அதுமட்டுமன்றி, உலகில் எங்கெல்லாம் ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்களின் விடுதலைக்கான உணர்வு கொண்டவர்கள் நாங்கள்' என்றும், தளபதி குட்டிமணிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டபோது, 'எனது கண்ணை கண் இழந்த தமிழ் மகனுக்கு வழங்குங்கள். எதிர்காலத்தில் மலரப் போகும் தமிழீழத்தை நான் பார்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்' -என்றனர். இது வரலாறு.

யுத்தம் முடிவதற்கு முன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இரண்டாகப் பிரித்தார்கள். அதன் பின் யுத்தத்தில் தோற்றோம். ஆகவே தமிழர்களாகிய நாங்கள் 40 ஆண்டுகள் அல்ல, அது நீண்டு சென்றாலும் இந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கான புதிய வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதன் ஊடாக நாங்கள் அனைத்து விதமான அரசியல் போராட்டங்களையும் தொடர்ந்தும் செய்ய வேண்டும். இந்த இலக்கை அடைவதற்கு சர்வதேச ரீதியிலும் அரசியல் ரீதியாகவும் தொடர்ந்தும் உயிர்த் துடிப்போடு போராடுவதன் மூலமே எமது எதிர்கால இருப்பையும் அரசியல் இலக்கையும் அடையலாம்.- என்றார். (ச)

## அம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு வழங்குவதன் மூலம்

# செலவிடப்பட்ட தொகையைப் போன்று நான்கு மடங்கு நிதியை பெற முடியும்!




அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன முதலீட்டுக்காக குத்தகைக்கு வழங்குவதன் மூலம் நிர்மாணப் பணிக்காக செலவிடப்பட்ட தொகையைப் போன்று நான்கு மடங்கு நிதியை பெற்றுக்கொள்ள முடியும் என சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் கடனையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த வருடாந்தம் 920 கோடி ரூபா அரச வருமானம் செலவிடப்படுகிறது.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டளவில் வருடாந்தம் 1520 கோடி ரூபாவைச் செலுத்த நேரிடும். இந்த நஷ்டத்தை ஈடுசெய்வதற்காக இந்துமுறைமையைத் தயாரித்து வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீனாவுடன் கைச்சாத்திடப்படும் ஒப்பந்தத்திற்கு அமைய துறைமுகத்தின் உரிமை இலங்கை அரசிடம் இருக்கும். சீன அரசுக்கு குத்தகையில் மாத்திரமே துறைமுகம் வழங்கப்படும்.

இதன் மூலம் வெளிநாட்டு ஒதுக்கம் அதிகரிப்பதோடு, டொலரின் பெறுமதியும் அதிகரிக்கும். வாழ்க்கைச் செலவும் இதன் மூலம் குறைவடையும். சீன நிறுவனத்திற்கு 21 வருடங்கள் பூர்த்தியாகும் வரை இந்த முதலீட்டின் மூலம் லாபம் கிடைக்காது.

இந்த முதலீட்டை இடைநிறுத்துவதற்கான சதிகளும் இடம்பெறுகின்றன. நல்லாட்சி அரசை ஸ்தாபிப்பதற்காக வாக்களித்த பெரும்பாலான மக்களின் தீர்மானத்திற்கு அமைய அரசு இதனை முன்னெடுத்துச் செல்ல இருக்கிறது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு விடுவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் விவாதம் இடம்பெறவிருந்தது. இந்த விவாதத்தில் தாம் தோல்வியுறப் போகிறோம் என்பதை உணர்ந்துகொண்ட கூட்டு எதிர்க்கட்சியினர் சபையில் இருக்கவில்லை என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவதற்கான வாய்ப்பு கூட்டு எதிர்க்கட்சியினருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கூறியுள்ளார்.

அத்துடன், நாட்டுக்கு முன்மாதிரியாகச் செயற்பட வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று தவறான முறையில் நடந்து கொள்கிறார்கள் என்று விவாதத்தில் கருத்து வெளியிட்டார் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆஸுமார சிங்க.

(க)

## இந்தியாவுடனான ஆழமான பொருளாதார உறவுகள் இலங்கைக்கு பாதகமல்ல என்கிறார் பிரதமர் ரணில்!




இந்தியாவுடன் ஆழமான பொருளாதார உறவுகள் இலங்கைக்கு மிகவும் முக்கியமானது. இது இலங்கைக்கு பாதகமாக இருக்காது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

திருகோணமலை துறைமுக எண்ணெய்க் களஞ்சியத்தை இந்திய- இலங்கை கூட்டுக் குழு ஆய்வு செய்யும். தொழிற்சங்கங்களுடனும் கூட ஆலோசிக்கப்படும்.

இந்தியாவுடன் ஆழமான பொருளாதார உறவுகள் இலங்கைக்கு மிகவும் முக்கியமானது. இது இலங்கைக்கு பாதகமாக இருக்காது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு திட்டங்களையும் அரசு மேற்கொள்ளவுள்ளது.

இதற்காக, 200 கோடி ரூபா முதல் 300 கோடி ரூபாவரையான முதலீடுகள் அடுத்த இரண்டு ஆண்டுகளில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 8 ஆண்டுகளுக்குப் பின்னரும் நீதியைத் தேடும் தமிழ்ப் பெண்கள்!

சர்வதேச அமைப்பு அறிக்கை




கொழும்பு, ஜூலை 30

போர் முடிவுக்கு வந்த எட்டு ஆண்டுகளுக்குப் பின்னரும், வடக்கு கிழக்கில் வாழும் தமிழ்ப் பெண்கள் போர்க்கால மீறல்கள் பற்றிய உண்மை மற்றும் நீதியைத் தேடி அலைந்து கொண்டிருக்கின்றனர் என சர்வதேச முரண்பாட்டுக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த 2015 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இலங்கை அரசு தோல்வியடைந்துள்ளது.

மோதல்களால் பாதிக்கப்பட்ட குழுக்களுக்கான அவசர பொருளாதார மற்றும் உளவியல் தேவைகள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

போரின் வழி வந்த துன்பங்கள் தொடர்கின்றன. குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் இதனை அதிகளவில் அனுபவித்து வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட பெண்களின் மிக அவசரமான கோரிக்கையாக இருப்பது, காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் தலைவிதியை அறிவது தான்.

அவர்கள் உண்மை மற்றும் நீதியைத் தேடுகின்றனர். பொருளாதார, சமூக, உளவியல் மற்றும் அவர்களது பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு பரந்த அணுகுமுறையின் பாகமாக நிலைமாறுகால நீதிப் பொறிமுறை அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

சுதந்திரமான அதிகாரிகள், பணியகங்கள் மற்றும் தேவையான வளங்களுடன், இலங்கை அரசு உடனடியாக காணாமற் போனோர் பணியகத்தை இயங்கச் செய்ய வேண்டும்.

இதன் கிளைகள் வடக்கு கிழக்கிலும் அமைக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிராந்தி ராஜபக்ஷவும், யோசிதவும் விசாரணைக்குச் செல்லாமல் நழுவினர்!

கொழும்பு, ஜூலை 30

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் கொலை வழக்குத் தொடர்பான விசாரணைக்காக நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அழைக்கப்பட்டிருந்த சிராந்தி ராஜபக்ஷவும், யோசித ராஜபக்ஷவும் அங்கு முன்னிலையாகவில்லை.

வசீம் தாஜுதீன் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டது என கூறப்படும் சிரிலிய சவிய அமைப்பின் வாகனத்தை சிராந்தி ராஜபக்ஷ பயன்படுத்தியமை தொடர்பான விசாரணைக்காக இலங்கையின் முன்னாள் ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியான சிராந்தி ராஜபக்ஷவும், மகன் யோசித ராஜபக்ஷவும் நேற்று முன்தினம் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை சிராந்தி ராஜபக்ஷவுக்கு



அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும், அவர் முன்னிலையாகவில்லை.

அதேவேளை, யோசித ராஜபக்ஷவும் விசாரணைக்கு சமுகமளிக்கவில்லை.

இதனால், இவர்களுக்கான விசாரணையை வேறொரு நாளில் மேற்கொள்ள அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

காலைக்கதிர் Kalaikkathir



# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**30.07.2017 - 05.08.2017**

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆடித் திங்கள் 15 ஆம் நாள் ஸப்தமித் திதி பகல் 08.06 மணி வரை. பின்னர் அஷ்டமி. நட்சத்திரம்: சித்திரை. காலை 07.22 மணி வரை. பின்னர் சுவாதி. சித்தயோகம் முழுதும். பிறந்த நட்சத்திர வழிபாடு: சுவாதி

ராகுகாலம்:- மாலை 4.58 மணி முதல் 6.32 மணி வரை.

சுபநேரம்:- காலை 9.04 மணி முதல் 10.34 மணி வரை.

திவசம் செய்ய வேண்டிய திதி:- ஆடி மாத வளர்பிறை அஷ்டமி.

**சந்திராட்டமநாள்:** பூரட்டாதி 4 ஆம் கால் உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் ஆரம்பிப்பதை இன்று தவிர்க்கவும்.

**கணிப்பு:** 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரக்குருக்கள் ஜே.பி.

## மேஷம்:

இவ்வாரம் சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். தேவையற்ற செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் ஓரளவு அமைதி பேணப்படும். தேக நலக்குறைவால் வைத்தியச் செலவுகள் உண்டாகும். வீட்டைத் திருத்தி நவீனப்படுத்தவும் செலவுகள் உண்டாகும். பிள்ளைகளின் கல்வியால் செலவுகள் அதிகரிக்கும். பயணங்களைத் தவிர்க்கவும். உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் தாமதமாகும். வழக்குகள் இழுபறி நிலையில் இருக்கும். வியாபாரத்தில் கடும் உழைப்பின் மேல் ஓரளவு லாபம் பெறுவார்கள். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

## ரிஷபம்:

ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பஉறவு அன்புடையதாக இருக்கும். வெளிநாட்டு வர்த்தகத்தால் ஆதாயம் கிடைக்கும். அலுவலகம் தொடர்பான பயணம் மேற்கொள்ள வேண்டி வரும். செய்யும் சுயதொழில்கள் ஆக்கபூர்வ முன்னேற்றத்தைத் தரும். மாணவர்கள் கல்வியில் மேம்பாடடைவார்கள். சிலருக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். பெண்களுக்கு அரசு வழியால் தொழில் பயிற்சிகளுக்கு நிதி உதவிகள் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் அதிகரிப்பால் வாழ்க்கைத் தரம் உயரும்.

## மிதுனம்:

இன்பமான வாரம் ஆகும். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். எண்ணிய கருமங்கள் துல்லியமாய் நிறைவேறும். நண்பர்கள், உறவினர்களின் அனுசரணை கிடைக்கும். சிலர் குடும்பத்துடன் சேர்ந்து சுற்றுலாப் பயணம் ஒன்றை மேற்கொள்வார்கள். ஆடை, அணிகலன்கள் சேர்க்கை உண்டாகும். விவாக முயற்சிகள் பலிதமாகும். பிரிந்திருந்த குடும்பங்கள் ஒன்று சேரும் வாய்ப்பு உண்டாகும். வியாபாரம் சுறுசுறுப்பாக நடந்து போதிய வருமானத்தைத் தரும். வெளி வட்டாரப் பழக்க வழக்கங்கள் அதிக நன்மையைத் தரும்.

## கடகம்:

கவலையான வாரம் ஆகும். தன வரவு குறையும். குடும்பத்தில் உறவினர்கள் வரவால் செலவுகள் அதிகரிக்கும். உடலில் ரோகங்கள் உண்டாகி மருத்துவச் செலவுகள் உண்டாகும். செய்தொழில் விருத்தி குன்றும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச் சுமையுடன் அலைச்சல்களும் அதிகமாகும். நண்பர்கள் பகைவர்களாக மாறும் சூழ்நிலை உண்டாகும். வியாபாரிகளுக்கு அயல் வியாபாரிகளுடன் வீண் சச்சரவுகள் உண்டாகும். கலைஞர்களுக்கு போட்டிகள் அதிகரிப்பால் பட வாய்ப்புகள் குறையும். பெண்களின் ஆசைகள் நிராசையாகிவிடும்.

## சிம்மம்:

மத்திமபலன்கள்காணப்படுகின்றன. வரவுக்கு மீறிய செலவுகள்உண்டாகும்.உடல், உபாதைகளால் அவதிப்பட நேரும். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுவது நன்று. குடும்ப நிலை ஓரளவு சீராக இருக்கும். தொழிலில் பிரயாசை, அலைச்சல்கள் அதிகரிக்கும்.

வேலை தேடுவோருக்கு வேலை கிடைப்பது கடினம். உத்தியோகத்தர்களால் இடையூறு உண்டாகும். வியாபாரிகளுக்கு மத்திம லாபம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் மத்திம முன்னேற்றம் அடைவார்கள். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

## கன்னி:

சுபீட்சமான வாரம் ஆகும். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். வீடு, வாகன வசதிகள் பெருகும். சிலர் பழைய வீட்டை விற்று விட்டு புது வீடு வாங்கிக் குடிபோவார்கள். பெண்களின் திருமண காரியங்கள் மளமளவென்று நடந்தேறும். வீட்டுக்கு அலங்கார பொருள்கள் வந்து சேரும். வியாபாரம் 'ஓஹோ' என்று நடக்கும். விவசாயத்தில் விளைச்சல்கள் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் மதிப்பு மரியாதை உயரும். நண்பர்கள், உறவினர்கள் பக்க பலமாக இருப்பார்கள். கொடுக்கல், வாங்கலில் சுமுக நிலை உண்டாகும்.

## துலாம்:

உயர்வான வாரம் ஆகும். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். வியாபாரம் நன்கு செழிப்படையும். உத்தியோகத்தில் உயர்வுகள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள். சகோதர உறவு வலுவடையும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள்.

ஆடை, ஆபரணச் சேர்க்கையும், புதிய தொழில் வாய்ப்புகளும் அமையும். புதிய வாகனம் வாங்குபவர்களுக்கு சமூகத்தில் உயரிய அந்தஸ்து கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் புரிந்துணர்வு அதிகரிக்கும்.

## விருச்சிகம்:

சலனம் மிகுந்த வாரம் ஆகும். வருமானம் குறைவடையும். குடும்பத்தில் குழப்பம் நிறைந்து காணப்படும். உறவினர்கள், நண்பர்கள் பாராமுகமாக நடந்து கொள்வார்கள். வியாபாரத் தொழில் மந்த கதியில் நடக்கும். மாணவர்களுக்கு உயர் கல்வியில் குழப்பமேற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் வேலைச் சுமையும், பொறுப்புகளும் அதிகரிக்கும். சக உத்தியோகத்தர்களின் உதவிகள் குறையும். திருமணப் பேச்சுகள் குழப்ப நிலையில் இருக்கும். வெளிநாட்டுப் பயணம் கானல் நீர் போலாகி விடும். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினைகள் உண்டாகும்.

## தனுசு:

உயர்வான வாரம் ஆகும். வருமானம் உயர்வடையும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி மேலோங்கும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

அரசாங்க வேலை செய்பவர்களுக்கு பதவி உயர்வுகள் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து நற்செய்தி கிடைக்கும். படித்து முடித்த மாணவர்களுக்கு வேலை கிடைக்கும். பெண்கள் சுயதொழிலில் முன்னேற்றமடைவார்கள். புதிய தொலைக்காட்சியில் தொடர் வாய்ப்புகள் கிடைக்கும்.

## மகரம்:

அனுகூலமான வாரம் ஆகும். பணப்புழக்கம் அனுகூலமாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமையுணர்வு அதிகரிக்கும். இதுவரை இருந்த வியாதிகள் நீங்கி ஆரோக்கியம் அதிகரிக்கும். தொழிலில் இருந்த தேக்கநிலை நீங்கி, முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகளுக்கும், தொழில் நிறுவனத்தாருக்கும் முன்னேற்றம் உண்டாகும்.

கடன் தொல்லை நீங்கும். மாணவர்கள் நன்கு படித்து முன்னேறும் நிலை உண்டாகும். அரசுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும். சகோ தரர்களுடன் இருந்த பகை நீங்கி இணக்கம் உண்டாகும்.

## கும்பம்:

யோகமான வாரம் ஆகும். தனலாபம் பெருகும். நினைத்த காரியங்கள் நிறைவேறும். வீடு,வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். படித்த மாணவர்கள் சிலருக்கு வெளிநாட்டில் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். மாணவர்களுக்கு உயர் கல்வி கற்கும் பொருட்டு வெளிநாடு செல்லும் யோகம் உள்ளது. பெண்களுக்கு திருமண யோகம் உண்டாகும். ஆடை, அணிகலன்கள் சேர்க்கை உண்டாகும். சுயதொழிலில் வருமானம் பெருகும். கலைஞர்களுக்கு வெளியூர்ப்பட வாய்ப்புகளால் வருவாய் அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிடைத்த வண்ணம் இருக்கும்.

## மீனம்:

அலைச்சல் மிகுந்த வாரம் ஆகும். தொழில் சம்பந்தமான அலைச்சல்கள் அதிகரிக்கும். பெற்றோர் சிலர் தம் பிள்ளைகளை ஆரம்பப் பள்ளியில் சேர்ப்பதற்கு அலைவார்கள். தொழிலாளர்கள் வேலை வாய்ப்புகளைத் தேடித் திரிவார்கள். விவசாயிகள் தமது கமச் செய்கையை விரிவுபடுத்துவதற்கு வங்கிகளின் உதவியை நாடுவார்கள். சிலர் தொழில் இடமாற்றத்தால் குடியிருக்க வாடகை வீடு தேடித் திரிவார்கள். சிலர் சொந்த வீடு வாங்கும் எண்ணத்தில் தரகரின் உதவியை நாடுவார்கள். சிலரின் வீட்டுப் பொருள்கள் களவு போனமையால் காவல் நிலையத்தின் உதவியை நாடுவார்கள்.


இந்தக் கட்டுரை தொடர்பில் ஆர்வலர்களின் தகுதியுள்ள எதிர் வினைகள் வரவேற்கப்படுகின்றன. அதிகம் நீளமில்லாமல் இரத்தினச் சுருக்கமாக விடயங்களை வரைந்து அனுப்பலாம். **- ஆசிரியர்.**

# பிழையான பஞ்சாங்கத்திலிருந்து சமயத்தை காப்பாற்றுங்கள்!

கனடாவில் இருந்து **கௌசிகர்**

சுப முகூர்த்தங்கள், விரத நாள்கள், விழாக்கள், பண்டிகைகள், ஜாதகம் கணித்தல்.. போன்ற சகலதிற்கும் சைவத் தமிழர்கள் பஞ்சாங்கத்தையே நம்பியிருக்கின்றனர். அந்தளவு முக்கியத்துவம் வாய்ந்த பஞ்சாங்கம் பிழையானதாக இருக்கலாமா?

இலங்கையில் வாக்கியம், திருக்கணிதம் என இரு முறந்திலும் வேறுபட்ட கணிப்பு முறைப் பஞ்சாங்கங்கள் வெளி வருகின்றன. கிட்டத்தட்ட 80 சதவீதம் மக்கள் வாக்கியத்தையும் ஏனையோர் திருக்கணிதத்தையும் பின்பற்றுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் தாம் பின்பற்றும் பஞ்சாங்கமே சரியென நம்புகின்றனர். ஜனநாயகப்படி பார்த்தால், வாக்கியம் சரியானது. ஆனால் அவ்வாறு தீர்மானிப்பதற்கு இதுவொரு தேர்தல் அல்ல. 4ஐயும் 5ஐயும் கூட்ட வருவது 9 என்று 20 சதவீதத்தினரும் 7 என்று 80 சதவீதத்தினரும் சொன்னால் 7 சரியாகிவிடுமா? இல்லை! இதே போன்று கணித, வானசாஸ்திர முறைப்படியே சரியான பஞ்சாங்கம் எது என்று தீர்மானிக்க வேண்டும்.




நிறையை அளக்க இறாத்தல் - கிலோ கிராம், உயரத்தைச் சொல்ல அடி - மீற்றர், தூரத்தைக் குறிப்பிட மைல் - கிலோ மீற்றர் என்று வித்தியாசமான அளவுமுறைகள் உள்ளன. இவை வேறுபட்டவையாக இருந்தாலும் பிழையானவையல்ல. 1 இறாத்தல் 2.2 கிலோகிராம், 1 மீற்றர் 3.28 அடி, 1 மைல் 1.6 கிலோ மீற்றர் என்று ஒன்றிலிருந்து மற்றையதற்கு மாற்றக்கூடிய கணிதத் தொடர்பு உள்ளவை. ஆனால் இரு வேறுபட்ட கணிப்பு முறைகளான வாக்கியத்துக்கும் திருக்கணிதத்துக்கும் இடையில் எவ்வித கணிதத் தொடர்பும் இல்லை.

சூரியனும் சந்திரனும் ஒரே பாகையில் சஞ்சரிக்கும் நேரமே அமாவாசை. எத்தனை மணிக்கு அமாவாசை என்பதில் பஞ்சாங்கங் களுக்கு இடையில் எவ்வித வித்தியாசமும் இருக்கக் கூடாது. ஆனால் வாக்கியத்திற்கும் திருக்கணிதத்துக்கும் இடையில் அமாவாசை நேரத்தில் வித்தியாசம் உள்ளது. இது மட்டுமல்ல ஏனைய திதி, நட்சத்திரம், நவக்கிரக சஞ்சாரம் போன்றவற்றிலும் வருடத்தின் 365 நாள்களிலும் வேறுபாடு இருக்கின்றது. இது ஒரு பஞ்சாங்கம் நிச்சயமாகப் பிழையானது என்பதைத் தெட்டத் தெளிவாக நிரூபிக்கின்றது.

வாக்கியப்படி 1-6-2017 நண்பகல் 12:20 வரை ஸப்தமி, பின்னர் அட்டமி. அன்று முற்பகல் 11:13 முதல் நண்பகல் 12:16 வரை விவாக சுப முகூர்த்தம் என்று வாக்கிய பஞ்சாங்கத்தில் உள்ளது. திருக்கணிதப்படி அன்று காலை 6:20 இன் பின்னர் அட்டமி. வாக்கியம் பிழை, திருக்கணிதம் சரியாக இருந்தால் அன்று விவாகம் செய்த வர்களது வாழ்க்கை என்னவாகும்?

திருக்கணிதப்படி 31-5-2018 முற்பகல் 11:13 வரை ஆயிலியம், பின்னர் மகம். வாக்கியப்படி அன்று பிற்பகல் 5:09 வரை ஆயிலியம், பின்னர் மகம். அன்று முற்பகல் 11:14 இற்கும், பிற்பகல் 5:09 இற்கும் இடையில் பிறந்த குழந்தைகளது ஜாதகம் திருக்கணிதப்படி மக நட்சத்திரம் சிங்க இராசியாகவும், வாக்கியப்படி ஆயிலிய நட்சத்திரம் கடக இராசியாகவும் இருக்கும். குழந்தையின் ஜாதகத்தைக் கணிக்கப் பிழையான பஞ்சாங்கத்தைப் பின் பற்றியிருந்தால் அதோகதிதான்.

விருச்சிக இராசியில் சஞ்சரித்த சனீஸ்வர பகவான் திருக்கணிதப்படி 26-1-2017 இல் தனுசு இராசிக்கு மாறிவிட்டார். வாக்கியப்படி இம்மாற்றம் 19-12-2017 இல் நிகழ உள்ளது. இந்த வித்தியாசத்தால் இராசிபலன், ஜாதகக் குறிப்பு, சுப முகூர்த்த நேரம் ஆகியவை வேறுபடும்.

விரத நிர்ணயம், சுப முகூர்த்த நிர்ணயத்துக்கு திதி, நட்சத்திரம், நவக்கிரக பாதசாரம் போன்றவையே அடிப்படைக் கணிப்புக்கள். இந்த அடிப்படைக் கணிப்புக்களில் திருக்கணிதம் பிழை என்று நிரூபித்தால், அதனைக் கணிப்பதை நிறுத்துவீர்களா என்று அப்பஞ்சாங்க கணிதர் சிவஸ்ரீ ஜெகதீஸ்வர சர்மா அவர்களிடம் கேட்டேன். தகுந்த ஆதாரத்துடன் பிழை என்று நிரூபித்தால் அப்பஞ்சாங்கம் கணிப்பதைக் கைவிடுவேன் என்று உறுதியளித்துள்ளார்.

வாக்கிய பஞ்சாங்கம் கணிக்கும் இரகுநாதையரே! திதி, நட்சத்திரம், நவக்கிரக பாதசாரம் போன்ற அடிப்படைக் கணிப்புக்களில் திருக்கணிதம் பிழை என்று நிரூபிக்க முடியுமா? ஜெகதீஸ்வர சர்மாவைத் தோற்கடித்து வெற்றிவாகை சூடி இலங்கையின் பஞ்சாங்கச் சக்கர வர்த்தி ஆகலாம். இரகுநாதையரே! அடிப்படைக் கணிப்புக்களில் வாக்கியம் பிழை என்று தகுந்த ஆதாரத்துடன் நிரூபித்தால், அதனைக் கணிப்பதை கைவிடுவீர்களா?

நான் யாழ்ப்பாணத்தில் மயிலிட்டி வடக்கு என்ற விவசாயக் கிராமத்தில் பிறந்தேன். 1985 இலிருந்து கனடாவில் வசிக்கிறேன். அமரர் இரத்தின கைலாச நாதக் குருக்களின் வேண்டுகோளுக்கிணங்க 1993இல் 32 வயதில் பஞ்சாங்கக் கணிப்புத்துறையில் இறங்கினேன். எனக்கு வாக்கியம், திருக்கணிதம்இருகணிப்புமுறைகளும் தெரியும். இலங்கைத் தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் 90 களின் ஆரம்பம் வரை யாழ்ப்பாண நேரப் பஞ்சாங்கத்தையே பின்பற்றி னார்கள். இந்த நாடுகளில் நடை முறையில் உள்ள நேரப் பஞ்சாங்கக் கலண்டர்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தியுள்ளேன். தற்போது சுகவீனமான நிலையில் கிட்டத்தட்ட ஒரு வருடமாக மருத்துவமனையில் உள்ளேன். இந்த நிலையில் பிழையான பஞ்சாங்கம் எது என்று தகுந்த ஆதாரத்துடன் நிரூபித்துக் கட்டுரைகள் எழுத முடியும்.

நான் பிறந்த மண்ணில் பிழையான பஞ்சாங்கத்தை இல்லாது ஒழிக்க வேண் டிய கடமை எனக்கு உள்ளது. இதற்குக் கடவுள் அனுக்கிரகம் கிடைக்கும் என்று நம்புகிறேன். பிழையான பஞ்சாங்கத்தைப் பின்பற்றி ஏமாறுவதற்கு எவருமே விரும்ப மாட்டார்கள். சரியைப் பிழை வென்றதாகச் சரித்திரமே இல்லை.

போதைவஸ்து அதனைப் பாவிப்பவரை மட்டுமே அழிக்கும். ஆனால் பிழையான பஞ்சாங்கம் அதனைப் பின்பற்றுபவரை மட்டு மல்ல, அவரது இனத்தையும் நாட்டையுமே அழிக்க வல்லது. போதைவஸ்துவைவிடப் பன் மடங்கு கொடியது பிழையான பஞ்சாங்கம். இதனைக் கணித்து வெளியிட்டு மக்களை ஏமாற்றி நம்பிக்கைத் துரோகம் செய்து லட்சம் லட்சமாக உழைப்பவர்கள்தாமாக முன்வந்து பிழையான பஞ்சாங்கம் கணிப்பதை நிறுத்த மாட்டார்கள். இவர்களிடமிருந்து மக்களையும் சமயத்தையும் காப்பாற்றச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை என்றோ ஒரு வருடம் உருவாகும். பல வருடங்களின் பின்னர் இன்னொருவர் செய்யப் போகும் நல்ல காரியத்தை, 2018 இல் நீங்கள் செய்யலாமே!

> போதைவஸ்து அதனைப் பாவிப்பவரை மட்டுமே அழிக்கும். ஆனால் பிழையான பஞ்சாங்கம் அதனைப் பின்பற்றுபவரை மட்டு மல்ல, அவரது இனத் தையும் நாட்டை யுமே அழிக்க வல்லது. போதைவஸ்துவை விடப் பன் மடங்கு கொடியது பிழையான பஞ்சாங்கம். இதனைக் கணித்து வெளியிட்டு மக்களை ஏமாற்றி நம்பிக்கைத் துரோகம் செய்து லட்சம் லட்சமாக உழைப் பவர்கள் தாமாக முன்வந்து பிழையான பஞ்சாங்கம் கணிப்பதை நிறுத்த மாட்டார்கள்.

2018 இலும் பிழையான பஞ்சாங்கம் தொடர்ந்தால், நீதியையும் சட்டத்தையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு உள்ளவர்கள் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2003 இல் மீறியதற்குக் கடுமையான தண்டனை விதித்துப் பிழையான பஞ்சாங்கத்தையும் கலண்டர்களையும் குப்பைத் தொட்டிக்கு




அனுப்ப வேண்டும்.

கோவில்களில் வேள்வி என்ற பெயரில் சேவல், ஆடு வெட்டு வதை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் தடுத்து நிறுத்தி மிகச் சிறந்த சேவை செய்துள்ளீர்கள். இதே போன்று, பொதுநலன் வழக்கு தாக்கல் செய்து பிழையான பஞ்சாங்கத்தை அழித்து ஒழிக்கச் சட்டத் தரணிகளும் இந்துமாமன்றம் போன்ற இந்து சமய அமைப்புக்களும் முன்வர வேண்டும்.

பிழையான பஞ்சாங்கத்துக்கு பிரியாவிடை கொடுத்து அதிலிருந்து சமயத்தைக் காப்பாற்ற வேண்டியது அனைவரதும் கடமை. சுத்தப் பிழையான பஞ்சாங்கத்தைப் பின் பற்றி அசுப நேரங்களில் சுப கருமங்களைச் செய்து விட்டு நல்லவை நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கலாமா? நற்பலன்கள் நடக்க வேண்டும் என்றால் சரியான பஞ்சாங்கத்தைப் பின்பற்ற வேண்டும். பிழையான கலண்டர், பஞ்சாங்கத்துக்கு 2017 உடன் பிரியாவிடை கொடுத்துப் பாருங்கள்.

2017 இலங்கைத் தமிழர்களது ஒளி மயமான எதிர்காலத்தின் திருப்புமுனை ஆண்டாகச் சரித்திரத்தில் இடம்பெறும். பிழையான பஞ்சாங்கத்துடன் சம்பந்தப்பட்ட ஒருவர், தனது சுப கருமத்திற்குச் சரியான பஞ்சாங்கத்தைப் பின்பற்ற வுள்ளார். உங்களில் பெரும்பாலானோரது நம்பிக்கைக்குப் பாத்திரமான பெருந்தகை ஒருவர் சரியான பஞ்சாங்கம் எது என்று நிரூபித்துள்ளார். விவரங்களுக்கு அடுத்த கட்டுரையைப் பாருங்கள்.




பொன்.வேணு கிருஷ்ணா

## ''இடதுகளுக்கு எதிரான ரொக் இசை நிகழ்ச்சி'' எனும் முழக்கம்

''இடதுகளுக்கு எதிரான ரொக் இசை நிகழ்ச்சி'' எனும் இந்த முழக்கம், முன்னதாக ''Freikorps" மற்றும் ''Sturmfront போன்ற நவ-நாஜி ரொக் பாடல் குழுவுடன்தொடர்புடையதாகும். ஜேர்மனியின் அந்த தீவிர வலது பத்திரிகை, மாஸ் இன் இந்த முன்மொழிவை மனதார வரவேற்றது. ஹம்பேர்க் சம்பவங்களுக்கு விடையிறுப்பதில், இடதுகளுக்கு எதிராக அணிதிரட்டுவதற்கு வலதுசாரி இசைநிகழ்ச்சிகளுக்கு அழைப்புவிடுத்த நாஜி-தொடர்புடைய ஜேர்மன்- இத்தாலிய ரொக் பாடல் குழுவான Frei Wild இன் அறிக்கை ஒன்றைப் புதிய வலது'' Junge Freiheit பத்திரிகை மேற்கோளிட்டது.

சான்சிலர் அங்கேலா மேர்க்கெலின் கட்சியான கிறிஸ்துவ ஜனநாயக ஒன்றியத்தின்(CDU)நாடாளுமன்றவாதி Armin Schuster, இடதுசாரி அரசியல் குழுக்கள் பயன்படுத்தும் சமூக இடங்களை அடைக்குமாறு அழைப்பு விடுத்தார். இடதுசாரிகள் மையமாக கொண்டுள்ள ஹம்பேர்க்கில் உள்ள ரோட் ஃபுளோரா (Rote Flora) மற்றும் பேர்லினில் உள்ள ரிகௌர் ஸ்ராஸ் (Rigaer Strasse) போன்ற இடங்களைப் படிப்படியாக அடைக்க வேண்டும், என்று அவர் அறிவித்தார். அரபு சிறு குழுக்களுக்கு ஆகட்டும், இஸ்லாமியர்கள் அல்லது நவ-நாஜிக்களுக்கு ஆகட்டும், இடதுசாரி தீவிர போக்குடையோர்களுக்கும் சரி, சட்ட திட்டமில்லா இடங்கள் கிடையா'' என்பதில் ஜேர்மனி சகிப்புத்தன்மை கொண்டிருக்கக்கூடாது என்று அவர் தெரிவித்தார்.

CDU உள்துறை அமைச்சர் தோமஸ் டு மஸியர் அவர் பங்குக்கு அறிவிக்கையில், வன்முறையைப் பிரயோகிப்பதற்கு இடதுசாரி காட்சிகளின் தயார்நிலையை நமக்கு எடுத்துக்காட்டியதில் ஜி20 உச்சிமாநாட்டைச் சுற்றி நடந்த சம்பவங்கள் ஒரு திருப்புமுனையாகும்'', என்றார்.







**பொலிஸ் நடவடிக்கைகளுக்கு ''விமர்சனங்களை அல்ல, பாராட்டு பத்திரங்களை'' வழங்க வேண்டு எனகூறி, ஐரோப்பிய ஆணைக்குழு தலைவர் ஜோன்-குளோட் ஜூங்கர், உடன் ஐரோப்பிய அதிகாரிகளும் போராட்டக்காரர்கள் மீதான இந்த ஒடுக்குமுறையை ஆதரித்தனர்.**

ஜி20இற்கு முன்னதாகக் கடுமையான எல்லை பாதுகாப்பு நடவடிக்கைகளின் விளைவாக, இடதுசாரி அரசியல் கண்ணோட்டம் கொண்ட ''நூற்றுக்கணக்கானவர்கள்'' ஜேர்மனி எல்லைகளில் இருந்து சமீபத்திய நாள்களில் திருப்பி அனுப்பப்பட்டனர் என அவர் பெருமை பீற்றி கொண்டார். எல்லைக் கட்டுப்பாடுகள் குற்றவாளிகளைப் பிடிக்க உதவின என கூறி, CDU இன் ஏனைய அங்கத்தவர்கள், இந்த தற்காலிக நடவடிக்கைகளை நிரந்தரமாக்க அழைப்புவிடுத்தனர்.

பொலிஸ் நடவடிக்கைகளுக்கு ''விமர்சனங்களை அல்ல, பாராட்டுப் பத்திரங்களை'' வழங்க வேண்டுமென கூறி, ஐரோப்பிய ஆணைக்குழுத் தலைவர் ஜோன்-குளோட் ஜூங்கர் உடன் ஐரோப்பிய அதிகாரிகளும் போராட்டக்காரர்கள் மீதான இந்த ஒடுக்குமுறையை ஆதரித்தனர். பொலிஸ் விடையிறுப்பு ''ஹம்பேர்கில் அதன் சிறப்பை'' பிரதிநிதித்துவம் செய்தது என்பதையும் அவர் சேர்த்துக் கொண்டார்.

அரசியல் எதிர்ப்பு மீதான பரந்த தாக்குதல், செப்ரெம்பரில் நடக்கவுள்ள கூட்டாட்சி தேர்தல்களுக்கு முன்னதாக நடந்துள்ளது, இதில் இரண்டு முன்னணி கட்சிகள், CDU மற்றும் SPD, சட்டம்-ஒழுங்கு விஷமப்பிரசாரம், வெளிநாட்டவர் மீதான வெறுப்பு மற்றும் அகதிகள் மீது துவேசத்தைத் தூண்டிவிட்டு வலதிலிருந்து ஒன்றையொன்று விஞ்சி நிற்க முயன்று வருகின்றன.

வேறொன்றும் இருக்கிறதென்றால், அது பெயரளவிற்கு ''இடது'' சமூக ஜனநாயகவாதிகள் எடுத்துள்ள மிகவும் தீவிர நிலைப்பாடாகும். பல தொடர்ச்சியான கடும் தேர்தல் தோல்விகளுக்குப் பின்னர், பரந்தளவில் வெறுக்கப்படும் இந்த அமைப்பு சமூக சீர்திருத்த கட்சியாக அதன் நம்பகத்தன்மை இழப்பை பிரதிபலிக்கும் வகையில், SPD, முன்னதாக தீவிர வலது ஜேர்மனிக்கான மாற்றீடு கட்சியின் (AfD) பக்கம் ஈர்க்கப்பட்டிருந்த பாசிசவாத கூறுபாடுகளுக்கு அழைப்பு விடுக்க முனைந்து வருகிறது.

ஊடகங்களின் ஆதரவுடன், இவ்விரு கட்சிகளும் வல்லரசு ஏகாதிபத்திய கொள்கைகளுக்கு ஜேர்மனி புத்துயிரூட்டுவதை பொதுமக்கள் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காக அவர்களை அச்சுறுத்த, கடந்த 2013 பெடரல் தேர்தலுக்குப் பின்னர் இருந்து சூழ்ச்சி செய்து வந்துள்ளன. இது ஒரு பெரிய மீள்ஆயுதமயப்படுத்தல் மற்றும் அந்நாட்டின் இராணுவ மற்றும் உளவுத்துறை சக்திகளின் விரிவாக்கம் ஆகியவற்றுடன், ஜேர்மன் ஏகாதிபத்திய குற்றங்களைப் பூசி மொழுகும் முயற்சியின் பாகமாக ''ஹிட்லர் வக்கிரமானவர் இல்லை'' என்று இழிவாக அறிவித்த ஹம்போல்ட்பல்கலைக்கழககல்வியாளர் ஜோர்ஜ் பார்பெரோவ்ஸ்கி போன்ற பாசிசவாத புத்திஜீவி பிரமுகர்களை ஊக்குவித்தமையையும் உள்ளடக்கி உள்ளது.

**பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்து வருகிறது என்றும், வங்கிகளும் பணமும் உலகை ஆள்கின்றன'' என்றும் பெரும் பான்மை இளைஞர்கள்நம்புகின்றனர் எனக் கூறும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு சமீபத்திய கருத்துக் கணிப்பு முடிவுகள்.**

ஜேர்மனியில் இடதுசாரி அரசியல் கண்ணோட்டங்கள் மீதான தாக்குதல், ஜனநாயக ஆட்சி வடிவங்களின் முறிவு மற்றும் ஐரோப்பா எங்கிலும் பொலிஸ் அரசு நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்துவதன் பாகமாக நடக்கிறது. நவம்பர் 2015 இற்குப் பின்னர் இருந்து, பிரான்ஸ் அவசரகால நிலையின் கீழ் இருந்து வருகிறது, இது, ஹோலாண்ட் அரசின் கீழ், கடுமையான எல் கொம்ரி தொழிலாளர் சட்டத்தின் எதிர்ப்பாளர்களை எதேச்சதிகாரமாக காலவரம்பின்றி வீட்டுக்காவலில் வைக்கப் பயன்படுத்தப்பட்டது.

இடதுசாரி அரசியல் அமைப்புகளுக்கு எதிரான நகர்வுகள், இராணுவவாதம் மற்றும் சமூக சமத்துவமின்மை மீதான பரந்த மக்கள் எதிர்ப்பை முன்னதாகவே முறியடிக்கும் மற்றும் மிரட்டும் ஒரு முயற்சியை உள்ளடக்கி உள்ளது. பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்து வருகிறது என்றும், வங்கிகளும் பணமும் உலகை ஆள்கின்றன'' என்றும் பெரும் பெரும்பான்மை இளைஞர்கள் நம்புவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு சமீபத்திய கருத்துக்கணிப்பு முடிவுகள் இந்த மக்கள் எதிர்ப்பை எடுத்துக் காட்டி இருந்தது. கருத்துக் கணிப்பில் பங்கெடுத்தவர்களில் பாதிக்கும் அதிக மானவர்கள், ஒரு ''மிகப் பெரியளவிலான எழுச்சியில்'' இணைவோம் என்று கூறியிருந்தனர்.

ஜேர்மன் சோசலிச சமத்துவக் கட்சி (Sozialistische Gleichheits parte) மட்டுமே போர், சமத்துவமின்மை மற்றும் ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதலை எதிர்ப்பதில் ஒரு சோசலிச மற்றும் சர்வதேச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் வரவிருக்கும் கூட்டாட்சி தேர்தலில் போட்டியிடும் ஒரே அரசியல் கட்சியாகும். அது, தொழிலாள வர்க்கம் எதிர்கொண்டிருக்கும் மிகப் பெரும் ஆபத்துக்கள் குறித்து அதற்கு எச்சரித்து, வரவிருக்கும் போராட்டங்களுக்கு அதை தயாரிப்பு செய்கிறது.

(கேள்வி தொடரும்)

# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



49




## அத்தியாயம் - IV

## இந்திய- புலிகள் யுத்தம்

இந்திய அமைதிப் படை தொடர்பாகவும் புதுடில்லி தொடர்பாகவும் யாழ்ப்பாண மக்கள் கொண்டிருந்த கணிப்பும் எதிர்பார்ப்பும் தகர்ந்து போயின. இந்திய இராணுவம் தம்மீது கொலைக் கருவிகளைப் பிரயோகிக்கிறது என்பது, அவர்களை வாயடைக்கச் செய்தது. இத்தகைய கடுமையான இராணுவ நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள, மனதாலும்,உணர்வாலும் மக்கள் தயாராக இருக்கவில்லை. தமது வரலாற்றுப் பகைவரான சிங்களவரின் வெறுப்பையும் இனவாதத்தையும் புரிந்து கொள்ள அவர்களால் முடிந்தது. ஆனால், பண்பாட்டு அடிப்படையிலும் இன அடிப்படையிலும் உறவுடைய அண்டை நாட்டவர், கொலைபுரியும் எதிரிபோல நடக்க முற்பட்டபோது தமக்குத் துரோகம் இழைக்கப்பட்டது போல மக்கள் விக்கித்த நிலையில் நின்றார்கள். சிங்கள அரச ஒடுக்குமுறையாலும் நீடித்த போராலும் பல தசாப்தங்களாக அரசியல் மற்றும் இராணுவ வன்செயலுக்கு முகம் கொடுத்த தமிழ் மக்கள், இந்திய இலங்கை ஒப்பந்தம் காரணமாகக் கிடைத்த போரோய்வுக்கு அமைவாக சிறிதுகால அமைதியைச் சுகித்து வந்திருந்தார்கள். இந்தியாவுடன் போர் மூண்டதும் அவர்கள் அதிர்ந்து போனார்கள். தம்மீதும் தமது போராட்டம் மீதும் இது பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தப் போவதையும் அவர்கள் உணர்ந்தார்கள். வல்வெட்டித்துறையிலே வீதி முனைகளிலும் வீடுகளிலும் மக்கள் சிறு சிறு குழுக்களாகக்கூடினார்கள்; ஆழ்ந்த கவலையுடன் அவர்கள் காணப்பட்டார்கள். தாம் எதிர்நோக்கப் போகும் பெரிய அவலநிலையைப் பற்றிய கவலையே அவர்களிடம் இருந்தது.

வல்வெட்டித்துறையில் இருந்து விடுதலைப் புலிப் போராளி அணிகள் யாழ்ப்பாணப் போர்முனைக்கு நகரத் தொடங்கின. துப்பாக்கிகளைத் தோளில் சுமந்த வண்ணம் வரிசை வரிசையாக அவர்கள் நடந்து செல்கின்றமை தெரிந்தது. யாழ்ப்பாண நகரிலே தங்கள் உறவினர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிவதற்காக மக்கள் சிலர் அங்கும் இங்கும் ஆற்றாமையோடு ஓடி ஓடித் திரிந்தார்கள். விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் படைக்கும் இடையே கடும் மோதல்கள் நடந்தன என வதந்திகள் சிறகு கட்டிப் பறந்தன. பொதுமக்கள் பலர் பாதிக்கப்படுகின்றனர் எனவும் வீடுகளும் சொத்துக்களும் தூள் தூளாக்கப்படுகின்றன எனவும் பாதுகாப்புத் தேடிச் சிதறி ஓடும் மக்களால் வீதிகள் நிரம்பி வழிகின்றன எனவும் கதை உலாவியது.

இரண்டரை ஆண்டுகளின் பின்னர், எதிர்பாராத சம்பவங்களின் விளைவாக, இந்தியப்படை, தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டது. முடிவிலே, புதுடில்லி – சுட்டிப்பாகக் கூறுவதானால், ராஜீவ் நிர்வாகம் மானுடத்துக்கு எதிரான குற்றம் புரிந்தது தெரிந்தது. ஆறாயிரம் தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய கடின உழைப்பால் பெற்ற சொத்துக்களின் சேதம் மதிப்பிட முடியாததாக இருந்தது. ஆயிரமாயிரம் மக்கள் கைது செய்யப்பட்டிருந்தார்கள்; தடுத்து வைக்கப்பட்டு இருந்தார்கள். சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்கள். எண்ணற்ற தமிழ்ப் பெண்கள் கூட்டுக் கயமைப் பாலியல் வன்தாக்குதலுக்கு ஆளானார்கள். இத்தகைய பெருந்தொகைப் படுகொலைகளையும் சொத்துடைமைச் சேதங்களையும் புரியவேண்டிய அவசியம் எதுவாக இருந்தது என்பது பற்றிய நியாயத்தை புதுடில்லி இதுநாள் வரை, திருப்திகரமாக விளக்கத் தவறிவிட்டது. இந்தக் கொடிய நிகழ்வுகள் இடம்பெற்ற போதும் தங்கள் நம்பிக்கைக்குரிய பலம் மிக்க அண்டை நாடு தமது நம்பிக்கையைத் தகர்த்த போதும் தங்கள் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் இந்தியா ஓர் ஆதரவு நாடாக முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் இன்னமும் எதிர்பார்க்கின்றமை



வியத்தற்குரியதே.

குறித்த ஓர் ஆண்டில், அரசியல் இராணுவ நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாகக் குவிந்து ஏற்படுத்திய பாதிப்புகளின் விளைவாக, இந்திய - விடுதலைப் புலிகள் போர் நிகழ்ந்தது. தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றிலே பாரதூரமான அவலங்களை ஏற்படுத்திய ஆண்டு, இந்த ஆண்டு. அதுவே 1987!

## சிங்கள இராணுவ படையெடுப்பு

பிரபாகரன் 1987 ஆம் ஆண்டு ஜனவரியிலே இந்தியக் கரைகளை விட்டு அகன்றார். அப்போது இந்தியாவின் அடாவடித்தன இராஜதந்திரம் தொடர்பாக, கசப்புணர்வுடனேயே வெளியேறினார். தாம் வெளியேறிய போது இருந்த பகைமை நிலைமையை விட இனித் தொடரப் போகும் நிலைமை கூடுதலான பேரிடரை விளைவிக்கப் போகின்றது என்பதை அப்போது அவர் ஊகித்திருக்க முடியாது. நாமும் அதை எதிர்பார்க்கவில்லை. ஆயினும், அரசியல் இராணுவ நிலைவரம் தொடர்ந்து சீரழிந்து செல்ல இந்தியாவோ, சிறிலங்காவோ அனுமதிக்கப்போவதில்லை என எண்ணினோம். அரசியல் இணக்க முயற்சிகள் தோல்வி கண்டிருந்தன. விடுதலைப் புலிகள் தங்கள் இராணுவ ஏற்பாடுகளை தீவிரப்படுத்தியிருந்தார்கள். பிரபாகரன் தாம் யாழ்ப்பாணம் திரும்பிய பின், போராட்டத்தை எவ்வாறு நடத்த விரும்புகிறார் என்பது பற்றிச் சில இலக்குகளை வைத்திருந்தார். ஆனால், சில அரசியல் முனைப்புகளும் இராணுவ நடவடிக்கைகளும் நிலைமையைச் சீரழிக்கத் தொடங்கியிருந்தன. பிரபாகரன் யாழ்ப்பாணம் சென்றடைந்தவுடன் தெரிவித்த தகவலில், யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் முக்கிய இராணுவத் தாக்குதலை நடத்துவதற்கு ஆயத்தமாக சிறிலங்கா இராணுவம் மிகப் பெரிய படை நகர்வில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாக அறிவித்தார். சிறிலங்கா படைகளின் பழிவாங்கும் இராணுவ நடவடிக்கைகள் மக்கள் அடர்த்தியாக வாழும் யாழ்ப்பாண தீபகற்பத்தில் மேற்கொள்ளப்படும் போது, பெருந்தொகையான பொதுமக்கள் நேரடியாகப் பாதிக்கப்படப் போகிறார்களே என்று பெருங் கவலை அடைந்தோம். இராணுவத் தாக்குதல் திட்டத்தோடு, சிங்கள அரசு, வடக்கின் மீது ஈவிரக்கமற்ற பொருளாதாரத் தடையைச் சுமத்தியது. மக்கள் மீது இது சொல்லொணாத் துயரப் பளுவை ஏற்றியது. சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் நடத்திய போரில், இஸ்ரேலியரின் கிளர்ச்சி முறியடிப்பு நுட்பத்தைத் தருவித்துப் பயன்படுத்தியது. கெரில்லாப் படையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையே ஒரு பிளவை ஏற்படுத்தி, இயக்கம் பெற்றிருந்த மக்கள் ஆதரவைத் துண்டிப்பதே அவர்களுடைய கிளர்ச்சி முறியடிப்பு முயற்சியின் குறியாக அமைந்தது. இஸ்ரேலியர் வழங்கிய அறிவுரைப்படி கெரில்லா படைத் தாக்குதல் நடக்கும் போதும், அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போதும், மக்களைக் கூட்டாகத்தண்டிக்கும்நடைமுறையை சிறிலங்கா அரசு ஆண்டாண்டாகக் கடைப்பிடித்து வந்தது. கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கையாக இந்தமுறை 'கூட்டுத் தண்டனை முறை' என்று அழைக்கப்பட்டது. மக்களின் மன உறுதியை முறியடிப்பதே இதன் நோக்கமாகும். வடக்கின் மீது பொருளாதாரத் தடையைச் சுமத்தி, கூட்டுத் தண்டனை மூலம் மக்கள் மீது ஆற்றொணாத் துன்பத்தைப் பளுவேற்றும் போது பொதுமக்கள் விடுதலைப் புலிப் போராளிகளுக்கு எதிராகத் திரும்புவார்கள் என்று ஜெயவர்த்தன அரசு தவறாக எடைபோட்டது. எதிர்பார்ப்புக்கு மாறாக, பொதுமக்களின் சீற்றம் சிங்கள அரசுக்கு எதிராகவே திரும்பியது.

அரச படைகள் தங்கள் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை 1987 ஆம் ஆண்டு முற்பகுதியில் தொடர்ந்து நடத்தின. விடுதலைப் புலிப் போராளிகளிடம் இருந்து அதற்குப் பலத்த எதிர்ப்புக் கிடைத்தது. சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதற் போரும், விடுதலைப் புலிகளின் தற்காப்புப் போரும் அதிகரித்து நீண்டன. தமிழரின் தாயகம் எங்கும் போராட்டம் இடம்பெற்றது. உக்கிரமடைந்த இந்த வன்செயலைச் சென்னையில் இருந்து நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். இன அழிப்பு எண்ணத்துடனேயே ஜெயவர்த்தனா இந்த இராணுவ நடவடிக்கையை நடத்துகிறார் என்றும் அஞ்சினோம். வன்முறையும் எதிர் வன்முறையும் 1987 ஆம் ஆண்டு முற்பகுதியில் தீவிரம் பெற்றதோடு, மே மாதம் 26 ஆம் திகதி முழுநிலை படையெடுப்பில் சிங்கள அரசு ஈடுபட்டபோது, அந்த வன்முறையும் உச்சத்தை எட்டியது. அந்தத் தாக்குதலுக்கு சிங்கள அரசு 'விடுதலை நடவடிக்கை' என்று பெயர் சூட்டியது.

(தொடரும்...)



# பன்முக நுண்மதி

## முறையாக இனங்கண்டு கொண்டால் மாணவரின் ஆற்றலை , ஆளுமையை மேம்பாடடையச் செய்ய முடியும்!

திருமதி ஜீவகி சாயிநிருபன்

நுண்மதி என்பது ஒரு பிள்ளையின் உளஆற்றல் எனக் குறிப்பிடலாம். புரிந்து கொள்ளுதல், நியாயம் காணல், புதுமை புனைதல், தொடங்கிய செயலைத் தொடர்ந்து செய்தல், நடத்தைக் குறைபாடுகளைத் தானே உணர்தல், தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியவற்றின் ஒட்டுமொத்தப் பெறுமானமே நுண்மதி ஆகும் என Alfred Biner குறிப்பிடுகின்றார். இவரே முதன் முறையாக நுண்மதி தொடர்பான அளவீட்டுக் கருவியைத் தயாரித்தவர் ஆவார்.

நுண்மதி பற்றிய ஆய்வில் பல்வேறு பன்முகப்பாடுகளும் கிளைப் பரம்பல்களும் ஏற்படத் தொடங்கின. அவை பொது நுண்மதி, பன்முக நுண்மதி, மனவெழுச்சி நுண்மதி, ஆக்கமலர்ச்சி நுண்மதி, வியாபார நுண்மதி, அரசியல் நுண்மதி, ஆன்மீக நுண்மதி என்றவாறான தனித்தனித் துறைகளாக வளர்ச்சியடைந்து வருகின்றன.

பன்முக நுண்மதிக் கோட்பாடு 1983 ஆம் ஆண்டு Dr. Haward Gardener என்ற அமெரிக்கப் பேராசிரியரால் முன்வைக்கப்பட்டது. இவரது பன்முக நுண்மதி பற்றிய கோட்பாடு மரபு வழியான நுண்மதிச் சிந்தனையிலிருந்து வேறுபட்டதாகும். இவரின் கருத்துப்படி நுண்மதியில் ஒன்பது வகை காணப்படுகின்றன எனவும் நுண்மதிக் கணிப்பீட்டில் இவற்றுக்கு சமசந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டுமெனவும் குறிப்பிடுகின்றார். பன்முக நுண்மதி விருத்திக்கு பல்வேறு காரணிகள் பங்களிப்பு செய்தாலும் அதில் உயிரியல் சமூக கலாசாரக் காரணிகள் முக்கிய பங்களிப்பைச் செய்கின்றன. மனித மூளையில் காணப்படும் பல பகுதிகளிலும் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு தொழிலைச் செய்யக் கூடிய அமைப்பைக் கொண்டுள்ளன. Gardener அவற்றை ஒன்பது வகை நுண்மதிகளாகத் தரம் பிரித்துள்ளார். அவை வருமாறு:

**1.மொழியியல் சார்ந்த நுண்மதி:-**

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மொழி முக்கிய இடம் பெறுகின்றது. கற்பவருக்கும் கற்பிப்பவருக்கும் இடையில் ஊடகமாக மொழி செயற்படுகிறது. புலமை, கருத்துக்களை வெளிப்படுத்தல், சிறந்த பேச்சு போன்றவை விரிவடைந்த மொழி வளம்சார் செயற்பாடுகளாகும்.

**2.கணித,தர்க்க ரீதியான நுண்மதி:-**

தர்க்க ரீதியான ஒழுங்கமைக்கப்பட்ட விளக்கங்களின் ஊடாக கற்றல், கற்றல் செயற்பாட்டை வளப்படுத்தும். கணிதம்சார் கற்றலில் தர்க்கவியல் முக்கிய இடம்பெறுகின்றது. கணிதச் செயற்பாட்டுக்கான விளக்கங்கள் பெரும்பாலும் தர்க்க ரீதியாகவே அமைந்திருக்கும்.

**3.சங்கீதம் சார் நுண்மதி:**

கற்பித்தல் செயற்பாட்டின்போது வகுப்பறையை இரசிப்புத் தன்மையுடன் ரம்மியமாக வைத்திருப்பதற்கு இசை முக்கிய இடம்பெறுகிறது.

**4.கட்புலன் சார் நுண்மதி:**

பொருள்களை பன்முக நோக்கில் பார்க்கக்கூடியவர்கள் பொருத்தமான தூண்டிகள் காணப்படாத நிலைமையிலும் கட்புல அனுபவங்களை மீள்உருவாக்கக் கூடியவர்கள்

**5.உடல் இயக்கம் சார் நுண்மதி:**

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தமது கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தி தமது உடலைப் பயன்படுத்தி செயற்படும் ஆற்றலைக் கொண்டிருப்பர்.

**6.ஆளிடைத் தொடர்புசார் நுண்மதி:**

தனிநபர்கள், சமூகத்துடன் சுமுகமான தொடர்புகளை ஏற்படுத்தக் கூடிய ஆற்றல்களைக் கொண்டிருத்தலாகும்.



**7.ஆளகம்சார் நுண்மதி:**

இதனை சுய நுண்மதி என அழைப்பர். ஒருவர் தன்னைப் பற்றி சுயமாக அறிந்துகொள்ளுதலாகும்.

**8.இயற்கைசார் நுண்மதி:**

இயற்கை, உயிரினங்கள் பற்றிய அக்கறையும், விழிப்புணர்வும் கொண்டவர்களாகக் காணப்படுவர். இயற்கை உலகின் இயல்புகளை உணர்வோராய்க் காணப்படுவர்.

**9.தொழில்சார் நுண்மதி:**

தொழில் பற்றிய அறிவு, மனப்பாங்கு, விருப்பு கொண்டவர்களாக இருத்தலாகும். சில தொழில்களில் விசேட திறமை கொண்டவர்களாகக் காணப்படுவர்.

மாணவர்களிடத்தில் காணப்படும் தனியாள் வேறுபாடுகளுக்குப் பல்வேறு காரணிகள் பொறுப்பாகின்றன. அவற்றுள் அவர்களுடைய நுண்மதி பெரும்பங்கு வகிக்கின்றது. மேலும், கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் மாணவர்களின் நுண்மதி பிரதான இடத்தை வகிக்கின்றது. இவற்றை மாணவரிடம் முறையாக இனங்கண்டு கற்றல்-கற்பித்தலை பொருத்தமான முறையில் முன்னெடுத்துச் செல்வதால் மாணவரின் கற்றலையும் ஆளுமையையும் மேம்பாடடையச் செய்யலாம்.

**பன்முக நுண்மதித் திறன்களை மேலும் விருத்தி செய்வதற்குப் பாடசாலையில் ஆசிரியர் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள்:**

**1.மொழிசார் நுண்மதியை வளர்க்கும் செயற்பாடுகள்:**

கற்பிக்கும்போது ஆசிரியர்கள் பல்வேறு சொல் அகராதிகளைப் பயன்படுத்தல், மொழிப்பாடங்களில் கவிதைகள், செய்யுள்கள் கற்பிக்கின்ற வேளையில் உரத்து வாசித்தல், சஞ்சிகைகளுக்கு கதை, கட்டுரை, கவிதை போன்றனவும் திரைப்படம், நாடகம் போன்றவற்றுக்கு விமர்சனமும் எழுதத் தூண்டுதல், விவாதங்கள், பேச்சுக்களில் மாணவரை ஈடுபடுத்தல், குறுக்கெழுத்துப் போட்டி, புதிர்கள் போன்ற உத்திகளைக் கற்பித்தலின் போது கையாளல்.

**2. கணித அல்லது தர்க்கம் சார்நுண்மதியைவளர்க்கும்செயற்பாடுகள்:**

படங்கள், எண்கள் போன்றவற்றை ஒழுங்குபடுத்தவிடுதல், மாணவரின் விடைக்கான விளக்கத்தைக் கூறும்படி அல்லது நியாயிக்கும்படி வினவுதல், ஒருதொடரின் / எண்கோலத்தின் அடுத்த இரு உறுப்புக்களைக் காணவிடுதல், சிந்தனைக் கிளறல் முறையைக் கையாளல்.

**3.சங்கீதம்சார் நுண்மதியை வளர்க்கும் செயற்பாடுகள்:**

சொல் உச்சரிப்புகளுக்கு இசையைப் பயன்படுத்துதல, மாதிரி ஒலியமைப்புக்களைக் காட்சிப்படுத்துதல், மொழிப்பாடங்களில் சிறு கதைகளை வாசித்துக் கற்பிக்கும் போது மனவெழுச்சிக் கலப்புடன் வாசித்தல், புதிய விடயங்களை மீள வலியுறுத்தும் போது பின்னணி இசையுடன் இணைத்து வழங்குதல்.



**4.கட்புலன் சார் நுண்மதியை வளர்க்கும் செயற்பாடுகள்:**

வகுப்பறையில் கற்பிக்கையில் படங்கள், வரைபுகள், வரைபடங்களைப் பயன்படுத்துதல், மாணவர்களை பாடத்திற்கு பொருத்தமான எண்ணக்கருப் படத்தை உருவாக்கும்படி கூறுதல், நிற வெண்கட்டிகளை கரும்பலகையில் எழுதுவதற்காகப் பயன்படுத்துதல், பல்லூடக எறியி மூலம் படங்களை, நிஜமாகக் காட்ட முடியாத கருவிகளை மாணவருக்குக் காட்சிப்படுத்தல், சுவரொட்டி ஆக்கம், விளம்பரத் தயாரிப்பு, கேலிச்சித்திர ஆக்கம் போன்ற உத்திகளைக் கற்பித்தலில் கையாளுதல்.

**5.உடல் இயக்கம் சார் நுண்மதியை வளர்க்கும் செயற்பாடுகள்:**

அன்றாட வகுப்பறைச்செயற்பாட்டினை உடல் உறுதியுள்ள செயற்பாடுகள் மூலம் ஆரம்பித்தல், நாடகம், நடிப்பு, பாவனை செய்தல், விளையாட்டுக்கள், செய்துகாட்டல்கள், களப் பயணங்கள் போன்ற கற்பித்தல் உத்திகளைக் கையாளுதல், கற்றலுக்கு அமைவான வேறு இடங்களில் (மரத்தின் கீழ், பல்லூடக அல்லது கணினிஅறை) கற்றல்-கற்பித்தலில் ஈடுபடல்.

**6.ஆளிடைத் தொடர்புசார் நுண்மதியை வளர்க்கும் செயற்பாடுகள்:**

குழுச்செயற்பாடு, வட்டமேசை கற்கை வட்டம், விளையாட்டுக்கள், விவாத அணிகள் போன்ற கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தல், குழு முறைக் கற்றல், குழுவாக வாசித்தல், குழுக் கலந்துரையாடல் போன்றவற்றுக்கு இடமளித்தல்.

**7.ஆளகத் தொடர்புசார் நுண்மதியை வளர்க்கும் செயற்பாடுகள்:**

கற்பித்த விடயம் தொடர்பாக புதிய விமர்சனங்களை வழங்கப் பணித்தல், மொழிப் பாடங்களின் போது சுயசரிதை எழுதப் பணித்தல், விழுமியங்கள், தியானம், விரி சிந்தனை வினாக்கள், மீயறிகை போன்றவற்றை உள்ளடக்கிய கற்பித்தல் உத்திகளைக் கையாளுதல், சுய கணிப்பீட்டிற்கு வழிப்படுத்துதல்


**8.இயற்கைசார் நுண்மதியை வளர்க்கும் செயற்பாடுகள்:**

இயற்கையை அவதானித்தலும் பதிவுசெய்தலும், புகைப்படக் கலை, சூழலியற் செயற்திட்டங்கள், இயற்கையை வகைப்படுத்தல் போன்ற கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தல், இயற்கைசார் தகவல்களை மாணவருடன் பரிமாறல். இயற்கை உலகு தொடர்பான வீடியோ படங்களைக் காண்பித்தல், உயிரங்கிகளின் வாழ்க்கை வட்டத்தின் பல்வேறு நிலைகளை அவதானித்து அவற்றுக்கிடையிலான தொடர்புகளை அறியத் தூண்டுதல்.

**9.தொழில்சார்நுண்மதியினை வளர்க்கும் செயற்பாடுகள்:**

குறிப்பிட்ட வேலைகளை மாணவரிடம் ஒப்படைத்து அவதானித்தல். **(உ.ம்: வகுப்பு மாணவ தலைவன், வகுப்பறை கூட்டுமுறை, மன்ற நிகழ்வுகளில் தலைமைத்துவம்)**, பாடத் தெரிவுகளில் மாணவரது இயலுமையினையும், தொழில் உலக போட்டிகளையும் கருத்திற்கொண்டு வழிப்படுத்துதல் கற்கும் விடயங்களை நடைமுறைச் செயற்பாடுகளுடன் ஒப்பிட்டு விளக்குதல், கருவிகளை பொருத்தமான வகையில் கையாள்வதற்கு வழிப்படுத்துதல்.

ஒருவன் நன்கு வாழ்வதற்கு எல்லாநுண்மதிகளும் அவசியமாகின்றன. எனவே, ஆசிரியர்கள் மாணவர்களின் திறன்களை இனங்கண்டு பன்முகநுண்மதியை மேம்படுத்தக் கூடிய செயற்பாடுகளையும், பொருத்தமான வாய்ப்புக்களையும் அவர்களுக்கு வழங்குவதன் மூலம் கூடிய விளைதிறனைப் பெறமுடியும். ★



பெண்களுக்கு தெரியாமல் போதை மருந்து, மயக்க மருந்து கொடுக்கப்பட்டும் தோல்கள் எடுக்கப்படுகிறதாம். இது எல்லாமே பரமரகசியமாக நடக்கின்றமையால் இதை அதிகாரிகளால் ஒழிக்கவே முடியவில்லை.

**பெண்களே விழிப்பாக இருங்கள்!**

# உங்கள் அழகிய தோல்களை விற்பனை செய்ய ஒரு கும்பல்!

பெண்களின் வறுமையைக் காரணம் காட்டி மருத்துவ உலகில் வாடகைத் தாய், கருமுட்டை தானம் போன்ற ஏராளமான சுரண்டல்கள் நடந்து வருகின்றன.

ஆனால், தபோது, பெண்களின் உடற் தோல்களை வைத்து நடக்கும் தோல் திருட்டு வியாபாரம் உலகம் எங்கும் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

உடலில் அதிகமாக இருக்கும் பகுதி தோல் தான். இது அழகாக இருக்க வேண்டும் என பல மேல்தட்டு மக்கள் விரும்புகிறார்கள்.இந்தத் தோல்கள் தற்போது வியாபாரப் பொருளாகி விட்டது.

அமெரிக்காவில் இதற்காகவே பத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் செயற்படுகின்றன. இவற்றின் வேலையே தோல் மற்றும் தோலில் இருக்கும் திசுக்களை உற்பத்தி செய்தல் மற்றும் அவை வளர்வதற்கானதிசுக்களைசந்தைப்படுத்துவதுதான்.

ஆரம்பத்தில் மனிதர்களின் தோல் அவர்களது அனுமதியின்றி திருடப்படுகிறது என்று அமெரிக்காவில் செயற்படும் Food and Drug Administration (FDA) நிறுவனம் குற்றம் சுமத்தியது.

தோல்களை இறக்குமதி செய்ய தனியாக முகவர்கள் உள்ளார்கள். அவர்கள் மூலமாக இந்திய பெண்களின் தோல்கள் வாங்கப்பட்டு, அமெரிக்காவில் முழுமை பெறச் செய்து விற்கப்படுகிறது.

இந்தியாவில் 100 சென்றிமீற்றர் சதுர அளவு கொண்ட தோல் ஐம்பதாயிரம் ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா வரை விற்கப்படுகிறது.

தோல்களை பெற பெரும்பாலான முகவர்கள் அணுகுவது பாலியல் தொழிலாளர்களை தான். அவர்களை மூளைச் சலவை செய்து இதற்கு சம்மதிக்க வைக்கிறார்கள். இதற்கு எழுத்துபூர்வமாகபெண்களிடம் சம்மதத்தைக் கேட்டு எழுதியும் வாங்கிக் கொள்கிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும், தோல்களைக் கொடுக்கும் பெண்களுக்கு சிறிய தொகை மட்டுமே அளிக்கப்பட்டு மொத்த லாபத்தையும் முகவர்களே எடுத்துக் கொள்கிறார்கள்.

இவ்வாறு பெற்ற தோல்களை அறுவைச் சிகிச்சை செய்ய பயன்படுத்தும் தோலாக உருமாற்றி சந்தையில் விற்கின்றனர்.

இவை பெரும்பாலும் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை செய்யப் பயன்படுத்தப்படுகின்றன.

பெண்களுக்கு தெரியாமல் போதை மருந்து, மயக்க மருந்து கொடுக்கப்பட்டும் தோல்கள் எடுக்கப்படுகின்றன வாம். இது எல்லாமே பரம ரகசியமாக நடக்கின்றமையால் இதை அதிகாரிகளால் ஒழிக்கவே முடியவில்லை.

தங்கள் வறுமையை போக்க தங்கள் தோலையே பியத்துக் கொடுக்க எப்போதும் தயாராக ஒரு கூட்டம் இருக்கவே செய்கிறது.



# மாதவிடாய் காலத்தில் முதல் நாள் விடுமுறை!
## மும்பையில் ஓர் அசத்தல் நிறுவனம்

மாதவிடாய் காலத்தின் முதல் நாளில் பெண்களுக்கு விடுமுறை அளிக்கும் புதிய கொள்கையை மும்பையைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று அறிமுகப்படுத்தி உள்ளது.

மும்பையில் உள்ள 'கல்சர்மெஷின் என்ற டிஜிட்டல் மீடியா நிறுவனம்' தான் இவ்வாறு செய்துள்ளது.

இதை வரவேற்று அந்த நிறுவன பெண் ஊழியர்கள் பதிவு செய்த கருத்துக்களின் காணொலிகள் முகப் புத்தகம் மற்றும் 'யூ டியூப்' ஆகிய சமூகவலைத் தளங்களில் வைரலாகி உள்ளன.

இது தொடர்பில் அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரி தெரிவிக்கையில்-

''பெண்களின் வலியை நாம் உணர்ந்து கொள்வதில்லை. மாதவிடாய் காலங்களில் பெண்கள் பணிக்கு வந்தாலும் அவர்களால் வேலை செய்ய முடிவதில்லை. இதனால், அவர்களின் கஷ்டங்களை உணர்ந்து விடுமுறை அளிக்கிறோம்' -எனக் கூறியுள்ளார்.

நாடு முழுவதும் உள்ள நிறுவனங்களில் பணியாற்றும் பெண்களுக்கும் மாதவிடாய் காலத்தின் முதல் நாள் விடுமுறை அளிக்க வேண்டும் என்று மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் மேனகா காந்தி, மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் ஆகியோருக்கு இந்த நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது இந்த நிறுவனத்துக்குப் பல்வேறு தரப்பில் இருந்தும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.



# கவர்ச்சி ஆடையால் காட்சிப் பொருளாகும் பெண்கள்:
## மன அழுத்தத்தால் பாதிப்பு!

வர்த்தக நிலையங்கள், பெரிய உணவகங்கள் போன்றவற்றில் வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக, அங்கு பணியாற்றும் பெண்கள் காட்சிப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றனர்.

வர்த்தக நோக்கத்துக்காக அரைகுறை ஆடையில் பணியாற்றுமாறு பெண்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதனால் அவர்கள் Anxiety Disorders எனப்படும் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர் என்று ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

மேலும், அங்கு வரும் வாடிக்கையாளர்களும் அவர்களைப் பார்த்துக் கிண்டல் செய்து விட்டு செல்கின்றமையால், அந்தப் பெண்களுக்குத் தங்கள் உடல் தோற்றத்தைப் பற்றிய ஒரு வித அச்சம் ஏற்படுகிறது.

இதனால், இவர்கள் எதிர் மறை எண்ணங்களான கவலை, கோபம், பாதுகாப்பின்மை, குழப்பம், குற்றவுணர்வு போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர்.

மேற்கத்தைய நாடுகளிலேயே இந்தப் பிரச்சினை அதிகமாக உள்ளது. எனினும், தற்போது எமது நாட்டுப் பெண்களும் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கவர்ச்சி ஆடை அணிவதால் பெண்கள் எதிர்மறை எண்ணங்களான கவலை, கோபம், பாதுகாப்பின்மை, குழப்பம், குற்றவுணர்வு போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர்.

செல்வரட்ணம் சிறிதரன்



## நல்லூர் சூட்டுச் சம்பவம்:

# வடக்கில் அதிர்ச்சி, பீதி! தெற்கில் பேரதிர்ச்சி,திகில்!!

யாழ் நல்லூர் கோவிலடியில் நீதிபதி இளஞ்செழியனுக்குப் பாதுகாப்பு வழங்கிச் சென்ற இரண்டு மெய்ப்பாதுகாவலர்கள் மீது நடத்தப் பட்ட துப்பாக்கிப்பிரயோகத் தாக்குதல் சம்பவம் ஏற்படுத்திய பரபரப்பு இன்னும் தணியவில்லை.

நீதித்துறையின் மீது விடுக்கப்பட்ட அச்சுறுத்தல், சுதந்திரமான நீதித் துறையின் செயற்பாட்டுக்கு விடுக் கப்பட்ட சவால், சட்டம் ஒழுங்கின் சீர்குலைவு, பொது பாதுகாப்பு குறித்த ஐயப்பாடு, மனிதாபிமானத்தின் வெளிப்பாடு, இந்த நாட்டின் இருவேறு இனங்களுக்கிடையிலான நல்லுறவின் அடையாளம், மனித உணர்வின் உருக்கமான வெளிப்பாடு, எதனையும் அரசியலாக்கும் நோக்கத்திலான போக்கு போன்ற பல்வேறு தன்மை களை இந்தத் தாக்குதல் சம்பவம் தொட்டுணர்த்தியிருக்கின்றது.

யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் பொதுவாக எல்லோராலும் அறியப் பட்ட ஒருவர். அவருடைய கடமை யுணர்வு, குற்றவியல் வழக்குகள், மனித உரிமை சார்ந்த வழக்குகள் என்பவற்றை அவர் கையாள்கின்ற நேர்த்தி, அதன் ஊடாக அவரால் அளிக்கப் படுகின்ற தீர்ப்புக்கள் என்பன பலராலும் சிலாகித்து பேசப்படுவன.

### பேரதிர்ச்சி சம்பவம்

இதனால் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்துள்ள அவர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத் தாக்குதல் ஒரு பேரதிர்ச்சியாகவே சமூகத்தில் பரவியிருந்தது. மிகவும் கண்டிப்பான ஒரு நீதிபதியின் பாதுகாப்பே அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றது என்றால் சாதாரண பொதுமக்களின் பாதுகாப்பு என்னவாகும் என்ற கேள்வி பொதுவாக எல்லோருடைய மனங்களிலும் எழுந்திருந்தன.

கடமை முடிந்து திரும்பிக் கொண்டிருந்த நீதிபதி இளஞ்செழியனுக்குப் பாதுகாப்பு வழங்கிச் சென்ற அவருடைய மெய்ப்பாதுகாவலர்கள் இருவருமே சூட்டுக்காயங்களுக்கு உள்ளாகின்றார்கள். உதவுவதற்கு எவருமே உடனடியாக இல்லாத நிலையில் காயமடைந்த இருவரையும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அவசரமாகக் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு மெய்ப்பாதுகாவலர்களின்றி தனித்துவிடப்பட்ட நீதிபதியையும் அவருடைய நீதிமன்ற பணியாளராகிய சாரதியையுமே சார்ந்திருந்தது.

அந்த இக்கட்டான அச்சமும் அதிர்ச்சியும் சூழ்ந்த ஒரு சூழலில் அவர்கள் இருவரும் உடனடியாகச் செயற்பட்டு, காயமடைந்த இருவரையும் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சேர்க்கின்றார்கள்.

### மனிதாபிமானத்தின் வெளிப்பாடு

துரதிஷ்டவசமாக மெய்ப் பாதுகாவலராகிய சரத் ஹேமச்சந்திர சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததைத் தாங்க முடியாமல் சோகத்தில் ஆழ்ந்து வாய்விட்டு அவர் கதறி அழுததன் மூலம் நீதிபதியினுடைய இந்தச் செயலுக்கான காரணத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது.

அந்தச்சம்பவத்தில் தனது உயிரைப் பாதுகாப்பதற்காகவே அந்த பொலிஸ் சார்ஜன்ட் ஹேமச்சந்திர உயிரிழக்க நேர்ந்தது என்ற சோகம் தாங்க முடியாத நிலையிலேயே நீதிபதி இளஞ்செழியன் வாய்விட்டு கதறி அழுதுள்ளார். அதுமட்டுமல்லாமல், கடுமையான யுத்த மோதல்கள் நடைபெற்ற காலப்பகுதியில் மிக மோசமான உயிரச் சுறுத்தல்கள் நிலவிய காலம் உட்பட, 15 வருடங்களாக நிழலாக இருந்து தன்னைப் பாதுகாத்த ஒரு மெய்ப் பாதுகாவலனை இழந்து விட்டோமே என்ற கசப்பான உண்மையை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. தன்னைப் பாதுகாப்பதற்காகவே ஹேமச்சந்திர தனது உயிரைத்தியாகம் செய்திருக்கின்றார் என்ற நன்றி உணர்வில் நீதிபதி இளஞ்செழியன் திக்குமுக்காடியதையே அந்த அழுகையும், ஹேமசந்திரவின் குடும்பத்தினரை வணங்கியமையும் வெளிப் படுத்தியிருக்கின்றன.

மிகவும் கண்டிப்பான நீதிபதி ஒருவரின் உள்ளத்தில் விரவிக்கிடக் கின்ற மனிதாபிமான உணர்வின் வெளிப் பாடாகவே இதனைக் கருத வேண்டியிருக்கின்றது.

### சிறந்த உதாரணங்கள்

யாரைப் பாதுகாக்கின்றார்களோ அவர்களுக்கு உயிராபத்து ஏற்படும் போது மெய்ப்பாதுகாவலர்களாகப் பணியாற்றுபவர்களே முதலில் பலியாகின்றார்கள். அல்லது அவர்களுடைய உயிரே முதலில் பறிக்கப்படுகின்றது. வன்முறையாளர்களினால் முக்கியஸ்தர்கள் இலக்கு வைத்து படுகொலை செய்யப்பட்ட அனைத்து சம்பவங்களிலும் இந்த வகையிலேயே சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ் உள்ளிட்ட பலர் கொல்லப்பட்ட சம்பவங்கள் இதற்கு சிறந்த உதாரணங்களாக அமைந்திருக்கின்றன.

இருப்பினும் அந்தச் சம்பவங்களில் அந்த முக்கியஸ்தர்களும் கொல்லப்பட்டதனால், அவர்களுக்கும், அவர்களுடைய மெய்ப்பாதுகாவலர்களுக்கும் இடையில் நிலவிய மனித நேய உறவும், மனிதநேய உணர்வும் வெளிப்படுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போயிருக்கின்றது என்றே கூற வேண்டும். ஆனால் நீதிபதி இளஞ்செழியன் மீதான தாக்குதலில் அவர் நூலிழையில் உயிர் தப்பியதையடுத்து, அந்த மனிதாபிமான உறவின் தன்மை வெளிப்பட்டிருக்கின்றது.

நீதிபதி இளஞ்செழியனின் இந்த மனிதாபிமான உணர்வினதும், மனிதாபிமான உறவினதும் வெளிப்பாடானது, தென்னிலங்கையில் பௌத்த பீடத்தைச் சேர்ந்தவர்களையும் இனவாதிகளையும்கூட உலுப்பியிருக்கின்றது. இனவாத ரீதியிலான அரசியல் பிரசாரங்களில் ஆழ்ந்து போயுள்ள தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு இந்த உணர்வு வெளிப்பாடானது, தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு இனங்களிடையே அடிமட்டத்தில் எத்தகைய அன்னியோன்னிய உறவு நிலை உணர்வுபூர்வமாக நிலவுகின்றது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றது.

### அச்சுறுத்தல்

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில், யுத்த மோதல்கள் இடம்பெற்ற நீண்ட காலப்பகுதியில் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டிருந்தது. நாட்டின் மறு புறத்தில் என்ன நடக்கின்றது. உலகவோட்டத்தில் என்னென்ன மாறுதல்கள் இடம் பெற்றிருக்கின்றன என்பதை அறியாமலும், அந்த மாறுதல்களுக்கு இயல்பான முறையில் ஆளாகாத வகையிலும் யாழ்ப்பாணம் வேறுபட்ட நிலையில் பின்தங்கியி ருந்தது. யுத்தம் முடிவுக்கு வந்ததை யடுத்து, தென்பகுதிக்கான தரைவழித் தொடர்புகள் அகலத் திறந்துவிடப்பட்டபோது, காட்டு வெள்ளமாகப் பாய்ந்த மாறுதல்களுக்கு அங்குள்ளவர்களால் இயல்பான முறையில் ஈடுகொடுக்க முடியவில்லை.

நவீன வசதிகள் வாய்ப்புக்கள் என்பவற்றினால் ஆட்கொள்ளப்பட்டவர்களாகவும் அவற்றின் நன்மை தீமைகளை உணர்ந்து அதற்கேற்ற வகையில் அவற்றை அனுபவிக்கக் கூடியவர்களா கவும் அவர்களால் மாற முடியவில்லை. நன்மைகளிலும் பார்க்க தீமையான வழிகளிலேயே அந்த காட்டு வெள்ளம் அவர்களை வழிநடத்தியிருந்தது என்றே கூற வேண்டும். இதன் காரணமாகவே இளைஞர்கள் சமூக விரோதச் செயற்பாடுகளிலும் குற்றவியல் சம்பவங்களைச் சார்ந்த நடைமுறை போக்குகளிலும் அடித்துச்செல்லப்பட்டார்கள். இதனால் யாழ்ப்பாணத்தின் கலாசார பண்பாட்டு விழுமியங்கள் அவர்களிடம் இருந்து நழுவிச் செல்ல நேர்ந்தது.

இந்தப் பகைப்புலத்திலேயே பெண்கள் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் குற்றச் செயல்களும், வன்முறைகளும் கோஷ்டி மோதல்கள், மற்றும் குழு மோதல்கள் வாள்வெட்டு குழுக்களின் எழுச்சி என்பனவும் வேகமாகவும் தீவிரமாகவும் தலையெடுத்திருந்தன.


அவற்றைக் கட்டுப்படுத்தி சீரான வழியில் நடத்திச் செல்வதற்கான சட்டம் ஒழுங்கு முறையாக சமூகம் தழுவிய போக்கில் பேணப்படவில்லை. இதனால் நீதித்துறைக்கே அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் பல இடம்பெற்றிருந்தன. இந்த சமூகவிரோதப் போக்கிற்கு சுயலாப அரசியல் செயற்பாடுகளும் துணையாக அமைந்திருந்தன என்பதை மறுக்க முடியாது.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன்வித்தியாவின்கோரக்கொலைக்கு நீதிகேட்டு சமூகம் பொங்கி எழுந்து பேரணி நடத்தியபோது, இந்தச் சுயலாப அரசியல் போக்கே யாழ் நீதிமன்றத்தின் மீதான தாக்குதலுக்கு வழிகாட்டியிருந்தது. அதன் பின்னர் இடம் பெற்று வந்த சமூக விரோதச் செயற்பாடுகளில் பலரும் ஊறித் திளைத்த ஒரு போக்கே நல்லூர் துப்பாக்கிச் சூட்டுச் சம்ப வத்திற்கு உரமேற்றியிருந்தது என்று அனுமானிக்க வேண்டியிருக்கின்றது.

### பின்னணி என்ன?

ஏனெனில் சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து நடக்க வேண்டியது குடிமக்கள் அனைவரினதும் பொறுப்பாகும். ஆனால் நல்லூர் சம்பவத்தில் முக்கியமான ஒரு நீதிபதியின் மெய்ப் பாதுகாவலருடைய இடுப்பில் இருந்த கைத்துப்பாக்கியைப் பறித்தெடுத்து துப்பாக்கிச் சூடு நடத்தும் அளவிற்கு ஒரு குடிமகனுக்குத் துணிச்சலைக் கொடுத்திருந்ததைக் காண முடிகின்றது.

இந்தத் தாக்குதலின் பின்னணி என்ன? நீதிபதி இளஞ்செழியன்; மீது தாக்குதல் நடத்துவதற்கான காரணம் என்ன? அத்தகைய துணிச்சல் எவ்வாறு ஏற்பட்டது? - இது போன்ற வினாக்களுக்கு சரியான உண்மையான விடைகளைத் தேடிக்கண்டு பிடித்து வெளிப்படுத்த வேண்டியது பொலிஸாரின் தலையாய கடமையாகும்.




## தாக்குதலாளிக்கு இந்தத் துணிச்சல் வந்தது எவ்வாறு? பின்னணியில் யார்? பலருக்கும் பல்வேறு சந்தேகங்கள்!

(18 ஆம் பக்கம் பார்க்க...)



# 36 இலங்கையில் பாரதி

● முருகபூபதி – ஆஸ்திரேலியா

''இலங்கையின் மூத்த எழுத்தாளர் என அறியப்பட்டவரும் சமூக மற்றும் வரலாற்று நாவல்களும் ஆய்வுகளும்- நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும் பல பாட நூல்களும் எழுதியிருக்கும் பிரபல படைப்பாளி செங்கைஆழியான் கலாநிதி கந்தையா குணராசா ( 1941 -2016) தனது தந்தை வழித்தோன்றல் ஆறுமுகசாமிதான் பாரதியின் ஞான குரு என்று நிறுவ முயன்றுள்ளார்.

ஈழத்தின் வரலாற்று தகவல்களைத் தொடர்ந்து பதிவுசெய்த செங்கை ஆழியான், ஏன் இவ்வாறு ஒரு வரலாற்று திரிபுக்கும் வழிவகுத்தார் என்பதுதான் புரியவில்லை.

பாரதி நூற்றாண்டு (1982 -1983 ) கால கட்டத்தில் அவர் தமது மூதாதையர் ஆறுமுகசாமிதான் பாரதியின் ஞான குரு என்று ஆதாரங்களுடன் நிரூபித்திருப்பாராயின் அதற்கு எதிர்வினையாற்ற பல பாரதி இயல் ஆய்வாளர்கள் அப் போது இலங்கையில் இருந்தார்கள்.



முக்கியமாக பேராசிரியர் க. கைலாசபதி.

''காலம் கடந்து 2006 ஆம் ஆண்டில் பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்து ஆறுமுகசாமி என்னும் நூலை வெளியிட்டு சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறார்.''

இவ்வாறு இலங்கையில் பாரதி தொடரின் இரண்டாவது அங்கத்தில் பதிவுசெய்திருந்தோம். **ஞானம்** கலை, இலக்கிய மாத இதழ் பாரதி தொடர்பாக வெளியிட்ட விடயதானங்கள் பற்றிய தகவல் குறிப்புகளை எழுதும்வேளையில், செங்கை ஆழியான் எழுதிய நூல்பற்றிய ஓர் எதிர்வினையை ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரனும் ஞானம் 78 ஆவது இதழில் ( **நவம்பர் 2006**) எழுதியிருந்தார்.

**பாரதியின் ஞானகுரு யாழ்ப் பாணத்துச் சுவாமி யார்...?!**

பாரதியார் 1908 முதல் 1918 வரை புதுவை நகரில் அரசியற் காரணங்களுக்காக மறைந்துவாழ நேரிட்டது. அக்கால கட்டத்தில் அவர் ஞானியர் சிலருடன் நெருங்கி உறவாடியுள்ளார் என்பதை அவர் தனது பாடல்களில் பதிவாக்கியுள்ளார். குள்ளச்சாமி (மாங்கொட்டைச் சாமி), கோவிந்த சாமி, யாழ்ப்பாணத்துச் சுவாமி, குவளைக் கண்ணன் ஆகியோர் இவர்களிற் சிலர். ஞானியர்களைச் சந்திப்பதில் பாரதியார் எத்தகைய தீவிரங்கொண்டவராக இருந்தார் என்பதை அவரது பின்வரும் பாடல்மூலம் அறியலாம்.

பற்றியகை திருகியந்தக் குள்ளச்சாமி
பரிந்தோடப் பார்த்தான்; யான் விடவேயில்லை
சுற்றுமுற்றும் பார்த்துப் பின் முறுவல் பூத்தான்
தூயதிருக் கமலபதத்துணையைப்
பார்த்தேன்! குற்றமற்ற தேசிகனும் திமிறிக்கொண்டு
குதித்தோடி அவ்வீட்டுக் கொல்லை சேர்ந்தான்;
மற்றவன் பின் யானோடி விரைந்து சென்று
வானவனைக் கொல்லையிலே மறித்துக் கொண்டேன்

பாரதியார் ஞானியர்களைச் சந்திப்பதிலும் அவர்களின் உபதேசங்களையும் அருளையும் பெறுவதிலும் பெருவிருப்புடையவராக இருந்தார் என்பதை அறிந்து ஞானியர்கள் சிலரை குவளைக் கண்ணன் என்பார் பாரதியாரிடம் அழைத்துச் சென்று சந்திக்க வைத்துள்ளார். யாழ்ப்பாணத்துச் சுவாமியையும் குவளைக் கண்ணனே பாரதியாரின் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார் என்பதை பாரதியாரின் பின்வரும் பாடலில் அறியலாம்.

மகத்தான முனிவரெல்லாம் கண்ணன் தோழர்
வானவரெல் லாங்கண்ணன் அடியா ராவார்

மிகத்தானு முயர்ந்ததுணி வுடைய நெஞ்சின்
வீரர்பிரான் குவளையூர்க் கண்ணன் என்பான்

ஜகத்தினிலோர் வமையிலா யாழ்ப்பாணத்துச்
சாமிதனை யிவனென்றன் மனைக் கொணர்ந்தான்

அகத்தினிலே அவன்பாத மலரைப் பூண்டேன் ;
'அன்றேயப் போதே வீடதுவே வீடு

பாரதியார் போற்றிய இந்த யாழ்ப்பாணத்துச் சாமி யார்...?

இதற்கு வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு சாரார் விடை பகர்ந்துள்ளனர்.

இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம் பத்தாம் வகுப்புக்கான சைவநெறி என்ற பாடநூலின் திருத்திய பதிப்பை 1985 இல் வெளியிட்டுள்ளது. அதில் 8 ஆவது பாடமாக '**எங்கள் ஞானியர்**' என்ற பாடமுண்டு. அப் பாடத்தில் ஒரு பகுதி பின்வருமாறு அமைகிறது.



''இலங்கையிலே இத்தகைய ஞான நிலையை அடைந்து ஒரு ஞான பரம் பரைக்கும் வித்திட்டவர் யாழ்ப்பாணத் துக் கடையிற் சுவாமி என்பவராவர்

குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பாணத் தான்
தேவிபதம் மறவாத தீர ஞானி
சிதம்பரத்து நடராச மூர்த்தியாவான்
பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி
பரமபத வாயிலெனும் பார்வையாளன்
காவிவளர் தடங்களிலே மீன்கள் பாயும்
கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக்கண்டேன்
தங்கத்தாற் பதுமை செய்தும் இரதலிங்கம்
சமைத்து வமற் றினிலீசன் தாளைப் போற்றும்
துங்கமுறு பக்தர் பலர் புவிமீதுள்ளார்
தோழரே எந்நாளும் எனக்குப் பார்மேல்
மங்களஞ் சேர் திருவிழியால் அருளைப் பெய்யும்
வானவர் கோன் யாழ்ப்பாணத் தீசன் தன்னைச்
சங்கரனென் றெப்போதும் முன்னே கொண்டு
சரணடைந்தால் அதுகண்டீர் சர்வசித்தி''

என்று தம் சுயசரிதையிலே தம் குருநாதரான யாழ்ப்பாணத்துச் சுவாமியின் புகழைப் பாரதியார் பாடுகிறார்.


மேற்குறிப்பிட்ட பகுதியை வாசிக்கும்போது, யாழ்ப்பாணத்துக் கடையிற் சுவாமியே பாரதியார் பாடிய யாழ்ப்பாணத்துச் சுவாமி என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. மேலும் இந்நூலில் ஞானியர் வரிசையில் மலை நாட்டில் குயின்ஸ்பரித் தோட் டத்தில் வாழ்ந்த நவநாதசித்தர், கதிர் காமத்தில் வாழ்ந்த முத்துலிங்க சுவாமிகள், மட்டக்களப்பு காரைதீவிற் சமாதியடைந்த சித்தானைக் குட்டிச் சுவாமி, கடையிற் சுவாமியின் நேர்ச்சீடரான செல்லப்பர் சுவாமி, செல்லப்பர் சுவாமியின்சீடரானயோகர்சுவாமிஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட் டுள்ளன.

அறுபதுகளில் முற்பகுதியில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் பாரதியாரின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சுவாமியின் சமாதி வடமராட்சி வியாபாரிமூலையில் இருப்பதாகக் கண்டறிந்து அங்கு மாநாடு நடத்தினர். பாரதியார் புதுவையில் மறைந்து வாழ்ந்த கால கட்டத்தில் இடையிடையே இரகசியமாக நாக பட்டினத்துக்கு வந்துபோவது வழக்கம். அவ்வேளையிலே தான் பாரதியார் தனது ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சுவாமியைச் சந்தித்து அருள் பெற்றார். பாரதியாரின் ஞானகுருவின் பெயர் அருளம்பலசுவாமி (மோன சுவாமி). அவரைப் பற்றி செல்லையா என்பவர் கூறிய ஆதாரங்களின்படி எழுத்தாளர் அ.ந.கந்தசாமி ஸ்ரீலங்கா அரசாங்க சமாச்சாரத்துறைப் பத்திரிகையில் கட்டுரை எழுதினார்.

அருளம்பலச் சுவாமியின் சமாதி வடமராட்சி வியாபாரிமூலை அல்வாய் முத்துமாரியம்மன் கோவில் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது எனக் கூறி 1963 இல் அவர்கள் வியாபாரி மூலையில் இலக்கிய மாநாடு நடத்தினார்கள், பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, அ.ந. கந்தசாமி, பிரேம்ஜி ஞானசுந்தரன் உட்படப் பல எழுத்தாளர்களும் அந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். ஞானக்குமரன் என்பவர் அருளம் பல சுவாமியே பாரதியின் ஞானகுரு எனத் தான் எழுதி வெளியிட்ட நூலில் குறிப்பிட்டுள்ளார். அருளம்பல சுவாமியின் சமாதியில் முற்போக்கு எழுத்தாளர்கள் எழுதி மாட்டிய பாரதியாரின் பாடலை உள்ளூர் அரசியல் காரணங்களால் யாரோ கழற்றி விட்டார்கள் எனவும் அறியப்படுகிறது.

தற்போது செங்கை ஆழியான் கலாநிதி க. குணராசா '**பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமி**' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். அந்நூலில் 'பாரதியின் ஞான குருவாகக் கருதப் பட்ட யாழ்ப்பாணத்துச் சுவாமியின் பேரன் நான்' என்று தன்னைக் குறிப்பிடுகிறார். அதற்கான ஆதாரங்களையும் அந்நூலில் அவர் விவரமாகத் தருகிறார்.

ஆறுமுகம் 1863 இல் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். சிறுவயதிலிருந்தே தேவிபதம் மறவாத பக்தனாக விளங்கியவர். 1891இல் கடையிற் சுவாமி சமாதி அடைந்தவேளை அருகே அவர் இருந்தார். 1891 இல் திருமணம் செய்தார். ஆறுமுகத்திற்கு ஆறு பிள்ளைகள். 1908 ஆம் ஆண்டு மார்கழி மாதம் அவர் குடும்ப வாழ்வைத் துறந்து வள்ளம் ஏறி இந்தியா சென்று சித்




தர்களுடனும் துறவிகளுடனும் சேர்ந்து அலைந்து திரிந்தார். இறுதியில் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வந்து அங்கேயே தங்கிவிட்டார். அவ்வேளையில் அவருக்கு நன்கு தெரிந்த அருணாசலக் குருக்கள் என்பார் யாழ்ப்பாணத்திலிருந்து சூடிக் கொடுத்த சுடர்க் கொடி கோதையைத் தரிசிக்க வில்லிபுத்தூர் சென்றிருக்கிறார். தற்செயலாக அவர் அவ்வூரில் ஆறுமுக சுவாமியைச் சந்திக்க நேர்ந்தது. அருணாசலக் குருக்களிடம் ஆறுமுகசுவாமி யாழ்ப்பாணத்திலுள்ள தனது குடும்பம் பற்றி விசாரித்துள்ளார். அருணாசலக் குருக்கள் அங்கிருந்த வேளையிலேயே ஆறுமுகசுவாமி சமாதி அடைந்துள்ளார். ஆறுமுகசுவாமி பற்றிய விவரங்கள் யாவற்றையும் இலங்கைக்குத் திரும்பி வந்து அவரது குடும்பத்தினருக்கு அருணாசலக் குருக்கள் கூறியுள்ளார்.

ஆறுமுகசுவாமி ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்த வேளை, அச்சுற்றாடலில் இருந்த சாலியார் சமூக மக்கள் சுவாமியிடம் பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய துன்பங் களைத் தீர்க்கும் மகானாக அவர் விளங் கியுள்ளார்.

ஆறுமுகசுவாமி சமாதியடைந்ததும் சாலியார் சமூக மக்கள் அங்கு கோயில் அமைத்து வழிபாடு செய்து வருகின்றனர். ஆறுமுகசுவாமி கோயிலின் உட்சுவரில் யாழ்ப்பாணத்துச் சுவாமியின் புகழைப் போற்றும் சுப்பிரமணிய பாரதியின் பாடல்கள் பல கையில் எழுதி மாட்டப்பட்டுள்ளன. இதுவே செங்கை ஆழியான் எமக்குத் தரும் செய்தி. தனது கூற்றுக்கு ஆதார மாக ஸ்ரீ ஆறுமுகசுவாமி சமாதிக் கோவிலின் பலதரப்பட்ட புகைப்படங் களையும் வரலாற்றுச் செய்திகளையும் அவர் இணைத்துள்ளார். பாரதியார் போற்றிப் பாடிய குள்ளச் சாமியின் சமாதியும், ஆறுமுக சுவாமியின் சமாதிக்குப் பக்கத்தில் அமைந்திருப்பதை ஒரு புகைப்படம் காட்டப்படுகிறது.

( 18ஆம் பக்கம் பார்க்க)

### இறைவன் ஒருபோதும் கைவிடுவதில்லை

‘இறைவன் நம்மை ஒரு போதும் கைவிடுவதில்லை. நமக்கு உதவி தேவைப்படும்போது தந்தையாம் இறைவனை நோக்கி திரும்புவோம்.- என டுவிட்டர் செய்தியில் எழுதியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் அவருக்கு முன்னதாக இந்த முயற்சியைத் துவக்கிய முன்னாள் திருத் தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களும் இணைந்து, இதுவரை, 1252 டுவிட்டர் செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### கடவுள் நம்மீது எதையும் திணிப்பதில்லை

‘‘திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இயேசுவின் மொழியும் இறையியலும் மிகவும் எளிதானவையாக மக்களின் இதயங்களை நேரடியாகச் சென்று தொடுவனவாக இருந்தன. கடவுள் நம்மீது எதையும் திணிப்பதில்லை- மாறாக தன் பரிந்துரையையே முன் வைக்கிறார். மேலும் அவர் நம்மைக் கட்டாயப்படுத்தி தன் பக்கம் இழுப்பதில்லை. மாறாக தன்னையே நமக்கு கையளிக்கிறார்’’ என்றார்.

# ஜெருசலேம் மலைக் கோவில் வன்முறைக்குக் கண்டனம்

ஜெருசலேமில் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் மற்றும், யுதர்களின் புனித இடமாகப் போற்றப்படும் மலைக் கோவில் பகுதியில் நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதல் குறித்து வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளனர் ஜெருசலேமின் 13 கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள். ஜெருசலேம் மலைக்கோவில் பகுதிக்கு அருகிலுள்ள வாயில்களில் ஒன்றில் காவலிலிருந்த காவல்துறை அதிகாரிகள் மீது மூன்று அராபியர்கள் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு கோவில் வளாகத்திற்குள் செல்ல முயற்சித்தனர். இவ் வன்முறையில் இரு காவல்துறை அதிகாரிகளும் வன்முறையாளர்களும் கொல்லப்பட்டனர்.

செபம், தியானம், வழிபாடு ஆகியவற்றின் இடங்களாகிய புனித இடங்கள், ஆயுத மோதல்கள் இடம்பெறும் இடங்கள் இல்லையென கூறியுள்ளனர் கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள்.

இதற்கிடையே, ஜெருசலேம் மலைக்கோவில் மற்றும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடும் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

# மண்டேலா சர்வதேச தினம்



இனவெறியின் அனைத்து முறைகளையும் சகிப்பற்ற தன்மை மற்றும் மனிதர் பொருளாகப் பயன்படுத்தப்படுவதையும் நாம் விலக்கி நடக்க வேண்டும் என திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக்கொண்டுள்ளார். தென்னாபிரிக்காவின் முன்னாள் அரசுத்தலைவராகிய நெல்சன் மண்டேலா அமைதி மற்றும் சுதந்திரக் கலாசாரத்திற்கு ஆற்றிய சேவையை அங்கீகரிக்கும் விதமாக ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பொது அவை 2009ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் திகதியை உலக நெல்சன் மண்டேலா தினமாக அறிவித்தது. மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றுவதற்கென தனது 67 வருட வாழ்வை அர்ப்பணித்த நெல்சன் மண்டேலா மனித உரிமை வழக்கறிஞர், மனச்சான்றின் கைதி, உலகளாவிய அமைதி ஆர்வலர் மற்றும் சுதந்திர தென்னாபிரிக்காவில் ஜனநாயக வழியில் முதல் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுத் தலைவர். இவரே முதல் கறுப்பின அரசுத்தலைவருமாவார். இந்த உலகை மேலும் சிறந்ததாக மாற்றுவதற்கு ஒவ்வொருவருக்கும் ஆற்றலும் பொறுப்பும் உண்டு என்பதை இந்த உலக நாளில் நினைவுறுத்துகின்றது ஐ.நா. நிறுவனம்.

# திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியை பின்பற்றும் மூன்றரைக் கோடி பேர்!




திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டர் செய்திகளை ஆர்வமாகப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை 3 கோடியே 50 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. ஒன்பது மொழிகளில் வெளியாகும் திருத்தந்தையின் டுவிட்டர் செய்திகளை பின்பற்றுவோரில் 1 கோடியே 30 இலட்சம் பேர். இஸ்பானிய மொழி பேசுபவர்கள் 1 கோடியே 10 இலட்சம் பேர் ஆங்கில மொழி பேசுபவர்கள். 2012ஆம் ஆண்டு டிசெம்பர் 3ஆம் திகதி திருத்தந்தை 16ஆம் பெனடிக் அவர்கள் டுவிட்டர் செய்திகளைத் துவக்கிய அன்றே அவரது முதல் டுவிட்டர் செய்தியை 11 இலட்சத்திற்கும் அதிகமானோர் பின்பற்றினர்.

இஸ்பானியம், ஆங்கிலம், இத்தாலியம், பிரெஞ்சு, ஜேர்மன், போர்த்துக்கீசம், இலத்தீன், போலந்து மற்றும் அரேபியம் ஆகிய ஒன்பது மொழிகளில் திருத்தந்தையின் டுவிட்டர் செய்திகள் வெளிவந்தவண்ணம் உள்ளன.

மேலும், 2015ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் திகதி முதல் ‘‘இன்ஸ்டகிராம்’’ வழியே, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பகிர்ந்துவரும் படங்களைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை தற்போது 50 இலட்சத்திற்கும் அதிகமாகும்.

# நம் நாட்டில் சமத்துவமும் ஒற்றுமையும் ஓங்க



# சிறுபான்மை மதத்தவர் புறக்கணிக்கப்படக் கூடாது!

இலங்கையின் புதிய அரசமைப்பில் புத்த மதம் முக்கிய மதமாக அமைந்திருக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளவேளையில் சிறுபான்மை மதத்தவர் புறக்கணிக்கப்படக் கூடாது என கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள் கேட்டுள்ளனர். இலங்கையின் புதிய அரசமைப்பில் புத்த மதத்திற்கு சிறப்பு மதிப்பு வழங்கப்பட வில்லையெனில் கடும் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அச்சுறுத்திய ஏறக்குறைய எழுபது தீவிர வாத புத்தமதத் துறவிகளிடம் பேசிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு உறுதியளித்தார். பிரதமரின் இவ்வறிவிப்பு குறித்துப் பேசிய மெதடிஸ் சபையினர் இலங்கையில் ஏறத்தாழ எழுபது விழுக் காட்டினர் புத்த மதத்தவராக உள்ளனர் என்றாலும் கிறிஸ்தவர்கள், இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களும் உள்ளனர். இலங்கை, சமயச் சார்பற்ற நாடாக இருந்தால் மட்டுமே சமத்துவமும் ஒற்றுமையும் நிலவும் எனக் கூறினர்.

### உண்மையின் எண்ணங்கள்

#### சிறுபான்மை மதத்தவர் புறக்கணிக்கப்படக் கூடாது

இலங்கையின் புதிய அரசமைப்பில் புத்த மதம் முக்கிய மதமாக அமைந்திருக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளவேளையில்சிறுபான்மை மதத்தவர் புறக்கணிக்கப்படக் கூடாது என கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள் கேட்டுள்ளனர். இலங்கையில் உலகின் முக்கிய நான்கு மதங்களான பௌத்தம், இந்து, இஸ்லாம்,கிறிஸ்தவம் ஆகிய நான்கு மதங்களும் உள்ளன. இலங்கை நாட்டில் இன்று என்றுமில்லாதவாறு இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும் ஒற்றுமையையும் சமாதானத்தையும் கட்டி எழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய யாப்பு உருவாக்கப்பட முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இவ்வேளையில் புதிய அரசமைப்பில் புத்த மதம் முக்கிய மதமாக அமைந் திருக்கும் வேளை மற்றைய சிறு பான்மை மதத்தவர் புறக் கணிக்கப்படக் கூடாது என்பது வலியுறுத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் இதில் விசேட கவனம் வெலுத்து வார்களா?

# இளஞ்செழியனைப் பாதுகாக்க இறையருள் வேண்டி நிற்போம்

யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தலைவர் எஸ்.வி.பி மங்களராஜா அடிகளார்

நல்லூரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பலியான மெய்ப்பாதுகாவலர் ஹேமச்சந்திராவின் மரணம் எம்மை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. 15 வருடகாலமாக பிரமாணிக்கமாக அப்பணியில் இருந்தவர், தமது பணியின் அர்ப்பணிப்பின் உச்சக் கட்டமாக தமது உயிரைத்தியாகம் செய் துள்ளமை, எமது உள்ளங்களை நெகிழச் செய்துள்ளது. அவரது ஆன்மாசாந்தியடைவதாக. அவரது மனைவி, மக்கள், உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து கொள்கின்றோம். காயமடைந்த மற்ற மெய்பாது காவலர் விரைவில் நலமடைய பிரார்த்திக்கின்றோம்.

நீண்ட காலமாக தமது பாதுகாவலராகப் பணியாற்றிய மெய்ப்பாதுகாவலரின் திடீர் இழப்பினால் வேதனையுற்றிருக்கும் நீதிபதிக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கிறோம். மக்களுக்கான நற்பணியைத் தொடர்ந்து துணிச்சலுடன் தொடர அவரைப் பாதுகாக்க வேண்டுமென இறையருளை வேண்டுகின்றோம்.

# இந்திய புதிய ஜனாதிபதி கோவிந் அனைவருக்காகவும் அர்ப்பணிப்பார்!

### இந்திய கத்தோலிக்க ஆயர்கள் நம்பிக்கை



இந்தியாவின்14ஆவது குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ராம் நாத் கோவிந்த் மக்களின் நல் வாழ்வுக்காகவும் தொண்டாற்றுபவராக தன்னை அர்ப்பணிப்பார் என்றும் கூறியுள்ளனர் இந்திய கத்தோலிக்க ஆயர்கள். புதிய குடியரசுத் தலைவர் நாட்டு மக்கள் எல்லாரையும் அமைதி வளர்ச்சி மற்றும் நீதியின் பாதையில் நடத்தி செல்வதற்கு இறைவன் அவருக்கு நல்வாழ்வையும் ஞானத்தையும் சக்தியையும்அருளவேண்டுமென்று தாங்கள் செபிக்கின்றார்கள் எனவும் ஆயர்கள் தங்கள் வாழ்த்தில் தெரிவித்துள்ளனர். 71 வயது நிரம்பிய ராம் நாத் கோவிந்த் இந்தியாவின் 14ஆவது குடியரசுத் தலைவராக 25ஆம் திகதி ஜூலை மாதம் 2017 ஆம் ஆண்டு அன்று பதவியேற்றார். 1945ஆம் ஆண்டு ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் 1980 ஆம் ஆண்டு முதல் 1993 ஆம் ஆண்டு வரை மத்திய அரசின் வழக்கறிஞராக இருந்துள்ளார்.




# அதிகரித்துவரும் சிசேரியன்; மருத்துவ வணிகம் காரணமா?



''கடைசியா சம்பந்தன் ஐயாவுக்கே 'பெப்பே' காட்டுகினம் என்றால்,எங்களை எவ்வளவு பேயர் என்று நினைக்கினம்'' என்று புறுபுறுத்துக் கொண்டே கச்சான் கடகத்தை அவிழ்த்தாள் செல்லாச்சி.

ஊர் வம்பளக்க வாத்தியார் ,ஏரம்பர், ஜீவன்,ரூபன் மற்றும் பேப்பர் தம்பியும் சந்தியடியில் கூடியிருந்தனர்.

''வடக்கு மாகாணசபையிலை ரெலோ உறுப்பினரை விலக்கி விட்டு, இன்னொரு உறுப்பினரை நியமிச்சது சம்பந்தன் ஐயாவுக்குத் தெரியாமல்தான் நடந்திருக்கு என்று சொல்லுகினம். கடைசியா சம்பந்தன் ஐயாவும் தமிழகத்திலை சசிகலா கும்பலிடம் ஜெயலலிதா மாட்டியதுபோல மாட்டுப்பட்டிருக்கிறார் போல இருக்கு'' என்று கவலைப்பட்டார் ஏரம்பர்.

''அதனால்தான் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா மாற்றுத் தலைமைக்குத் தயங்கினவர் போல இருக்கு. அவரும் கூட்டமைப்பை விட்டு வெளியேறினால், சசிகலா குடும்பத்தின் கையில் சிக்கிய தமிழகம்போல தந்தை செல்வா வளர்த்த தமிழரசுக் கட்சி ஆகிவிடுமென்றுதான் அவர் தயங்குகிறார் போல இருக்கு'' என்றான் கைபேசியைப் பார்த்துக் கொண்டே ஜீவன்.

''இந்த நேரத்திலை தமிழரசுக் கட்சியின் மறைந்த பிரமுகர் ஒருவர் சொன்னதுதான் ஞாபகத்துக்கு வருகுது'' என்றான் பேப்பர் தம்பி.

''அதென்ன?'' என்றார் ஏரம்பர்.

''அவர் தளபதி அமிர்தலிங்கத்துடன் எல்லாம் இணைந்து தமிழரசுக் கட்சியை வழிநடத்தியவர். நல்லூர் கோவிலில் மாலை நேரங்களில் இருந்து கதைக்கிறவர். இப்ப அவர் இல்லை. அவர் 'கண்டவன் நின்டவன் எல்லாம் தான் தமிழரசுக்கட்சி என்று இப்ப உரிமை கொண்டாடுகிறாங்கள்.அதைவிடக் கொடுமை, அவங்களின்ரை பரம்பரையே தமிழரசுக்கட்சிக்காக உயிரை விட்டது என்று புளுகிறாங்கள். நான் இவங்களை அந்தக்காலத்தில் பார்த்ததே கிடையாது. அதுவும் கடந்த முப்பத்தைந்து வருடங்களாக யுத்தம் நடந்து வந்திருக்கு.அதுக்கு முதல் இவங்கள் எல்லாம் எவ்வளவு சின்னப் பொடியங்களாக இருந்திருப்பாங்கள்.அப்ப இவங்களுக்கு கட்சி என்றாலே என்ன என்று தெரிஞ்சிருக்குமோ என்னமோ?' என்று கேட்டார்'' எனச் சொன்னன் பேப்பர்தம்பி.

''அரசியல் என்றாலே பொய்யும் புனைசுருட்டும் என்றுதானே ஆகிப் போய்விட்டது.இந்தநிலைமையே தொடருமென்றால்,சனம் இவையைப் புறக்கணிக்கிறது திண்ணம்'' என்றாள் செல்லாச்சி.

''ஆனால் எங்களது தேர்தல் முறைமையிலை, தேர்தலில் போட்டியிடும் யாராவது ஒருவரைத் தெரிவுசெய்ய வேண்டும்.இல்லாவிட்டால் தேர்தலில் வாக்களிக்காமல் விட வேண்டும்.இந்த இரண்டில் ஏதாவது ஒன்றைத்தானே செய்தாக வேண்டியிருக்கு.'' என்றார் ஏரம்பர்.

அதுவரை மற்றவர்களின் கதைகளைக் கேட்டுக் கொண்டிருந்த வாத்தியார், ''தேர்தலில் வாக்களிக்காமல் விடுவது, தேர்தல் முறை மீது நம்பிக்கையில்லை என்பதைத்தான் காட்டும். ஆனால், தேர்தல் முறை மீது நம்பிக்கை வைத்து,தனது ஜனநாயகக் கடமையைச் செய்கின்ற ஒருவர், தேர்தலில் போட்டியிடும் எவரையும் பிடிக்கவில்லை என்பதைத் தற்போதைய வாக்களிப்பு முறை மூலம் காட்ட முடியாது.அதனைக் காட்ட எங்கள் தேர்தல் முறையில் வழி செய்ய வேணும்'' என்று சொல்லி விட்டுக் கைகளைப் பின்புறமாக ஊன்றிச் சாய்ந்து கொண்டார்.

''அப்படி யாருக்கும் வாக்களிக்க விருப்பமில்லை'என்பதை வெளிப்படுத்தும் உரிமையை வாக்காளருக்கு வழங்க 'நோடா' (NOTA) என்ற பதிவு இந்தியாவில் இருக்கிறது.அதாவது 'மேலுள்ள எவரும் இல்லை'(None Of The Above) என்று அர்த்தப்படுத்தும் 'நோடா(NOTA) என்பது இருக்கும். தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் அல்லது குழுக்களின் பெயர்களும் சின்னங்களும் அடங்கியிருக்கிற வாக்குச் சீட்டில் 'எவருக்கும் வாக்களிக்கவில்லை' என்பதைக் காட்டும் இடமும் இருக்கும்.அந்த இடத்தில் புள்ளடியைப் போட்டால் வாக்குச் சீட்டில் உள்ள எவருக்கும் வாக்களிக்கவில்லை என்பதைக் காட்டும்'' என்று விளக்கினான் பேப்பர்தம்பி.

''இப்போதும் சில நேரங்களில் சிலர் வேட்பாளர்களில் எவரையும் பிடிக்காத போதும், தங்கடை வாக்கை வேறு யாராவது கள்ள வாக்காகப் போட்டு விடக்கூடாது என்று கருதினால், எல்லோருக்கும் புள்ளடி இட்டு, செல்லாத வாக்காகப் போட்டுவிட்டு வாறது இருக்குத்தானே''என்று கேட்டார் ஏரம்பர்.

அதற்குப் பதிலளித்த வாத்தியார், ''அப்படி செல்லாத வாக்குகள் சரியாக வாக்களிக்கத் தெரியாததைக் காட்டுமே தவிர, எந்த வேட்பாளரையும் பிடிக்கவில்லை என்பதைக் காட்டாது''என்றார்.

''நீங்கள் சொல்லுற மாதிரி வாக்களிக்க விருப்பமில்லை என்ற வாக்குகள் அதிகமானால் போட்டியிட்ட எல்லோரையும் தவிர்த்து விட்டு வேறு புதியவர்கள் போட்டியிடும் தேர்தலை மீண்டும் நடத்த வேணும்'' என்றாள் செல்லாச்சி.

''செல்லாச்சி சொல்வது நல்ல யோசனைதான்.ஆனால் ஒருதரத்திலை எத்தனை தேர்தல்கள்தான் நடத்திறது. அரசியல்வாதிகளில் எவருமே சரியில்லை என்பதுதானே எங்கடை பிரச்சினையே'' என்று சிரித்தபடியே சொன்னான் ஜீவன்.

''ஒரு பக்கம் தமிழர் அரசியல் நோய் வாய்ப்பட்டு இருக்க,அடுத்த தமிழர் தலைமுறையின் பிரசவங்கள் ஆரோக்கியமாக இல்லை என்ற கவலை ஏற்பட்டிருக்காம்'' என்று புதுக்கதையை ஆரம்பித்தான் ரூபன்.

''என்னடாப்பா,பொம்பிளையள் சமாசாரத்திலை இறங்கிறாய்?'' என்று வேடிக்கையாகக் கேட்டாள் செல்லாச்சி.

''பிரசவம் வெறும் பொம்பிளைகளின் விடயமில்லை.அது இந்த மனித குலம் முழுவதும் இணைந்து கவனம் செலுத்த வேண்டிய விடயம்.நாளை இந்த பூமிப்பந்தில் மனிதரை உலவ விடும் பிரசவங்களிலை உலக சுகாதார நிறுவனம் மிகவும் கவனமெடுக்கிறது'' என்று சொன்னான் பேப்பர் தம்பி.

''உலகமே கவனமெடுத்தாலும், மருத்துவர்கள் பலரும் நேர்மையாகவும் தியாக சிந்தையுடனும் சேவையாற்றுகிற எங்களிடையே, சில பணத்தாசை பிடித்தவர்கள் பிரசவங்களைப் பணம் பறிக்கும் வாய்ப்பாகப் பார்க்கினம் என்பதுதான் பிரச்சினை. கர்ப்பிணிகளுக்குத் தானாகவே சுகப்பிரசவம் நடப்பதே நல்லது.ஆனால் இப்போது சிசேரியன் எனப்படும் சந்திரசிகிச்சை மூலம் வயிற்றிலிருந்து சிசுவை வெளியே எடுப்பது அதிகமாகி வருகிறது.இது தான் கவலைக்குரியதாக இருக்கிறது'' என்றான் ரூபன்.

''இலங்கையில் மட்டுமில்லாமல்,இந்தியாவிலும் கூட இது பெரிய பிரச்சினையாக உள்ளதாம்.'' என்று சொன்ன பேப்பர்தம்பி தொடர்ந்து, ''உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரை, கூடிய மட்டும் 'சிசேரியன்' மூலம் பிள்ளை பெறும் நிலைமையைத் தவிர்க்க வேண்டும் என்பதுதான். மொத்தக் குழந்தைப் பிறப்பில் 10வீதம் முதல் 15வீதத்துக்கு மேல் சிசேரியன் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடாது என்றுதான் உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. ஆனால், இலங்கையில் சிசேரியன் மூலம் குழந்தை பெறுவோர் எண்ணிக்கை 25 வீதத்துக்கும் அதிகமாக இருக்கிறதாம்'' என்றான்.

இதனைக்கேட்ட வாத்தியார், ''இதற்குக் காரணம் பெண்கள் நோ,வேதனை இல்லாமல் குழந்தை பெறவும், குழந்தையின் சாதகம் நன்றாக அமைய வேண்டும் என்பதற்காக, குறிப்பிட்ட திகதியில், குறிப்பிட்ட நேரத்தில் சிசேரியன் செய்து கொள்ளவும் விரும்புகிறார்கள் என்றும், குறிப்பாக இத்தகைய விருப்பம் வேலைக்குப் போகும் பெண்களிடம் அதிகமாக இருக்கிறது என்றும் மருத்துவர்கள் தரப்பில் சொல்கிறார்கள்.'' என்றார்

''ஆனால் சுகப் பிரசவத்தை ஆதரிப்போர் இதற்கு நேர் எதிராகச் சொல்கிறார்கள். குழந்தை மிகவும் பெரிதாக இருப்பதால் சுகப்பிரசவம் மிகமிக அரிது. நோ அதிகமாக இருக்கும். சிசேரியன் மட்டுமே பாதுகாப்பானது என்று மருத்துவர்கள் சொன்னதால் ஒப்புக்கொண்டோம் என்பதாகவும், குழந்தை தலை புரண்டு கிடக்கிறது என்றும், பனிக்குடம் உடைந்துவிட்டதால் இனி சுகப்பிரசவத்துக்கு வாய்ப்பில்லை என்றும் கூறித்தான் சிசேரியனுக்கு சம்மதிக்க வைத்தார்கள் என்றும் பெரும்பாலான கர்ப்பிணிகள் சொல்வதாக அவர்கள் சொல்கிறார்கள்.'' என்றான் பேப்பர்தம்பி.

எல்லாவற்றையும் கேட்ட ரூபன், ''இந்த முரண்பாடுகளின் பின்னணியில் மருத்துவ வணிகம் முக்கிய இடம்பெறுவதாகச் சொல்கிறார்கள். சாதாரண பிரசவத்துக்குச் செலவாகும் பணத்தை விட, சிசேரியனுக்கு பல மடங்கு அதிகமாகச் செலவாகிறதாம். அதில் மருத்துவர்களுக்கு அரைவாசிக் காசுகிடைக்கிறது என்பதும் சிசேரியன் அதிகரிக்கக் காரணம் என்று சொல்லப்படுகிறது.'' என்றான்.

அப்போது கைபேசியிலிருந்து தலையை நிமிர்த்திய ஜீவன், ''வேலைக்குப் போகும் பெண்கள் சிசேரியன் செய்து கொள்ளவே விரும்புகிறார்கள் என்கின்ற வாதம் நம்பும்படியாக இல்லை. சிசேரியன் செய்துகொண்டால், அந்தத் தாய் எழுந்து நடமாட ஒரு வாரம் ஆகும். அவர் அன்றாடப் பணிகளைத்தானே செய்வதற்கு இரண்டு மாதங்கள் ஆகும். இவ்வளவு சிரமங்களை ஒரு கர்ப்பிணி விரும்பி ஏற்கிறார் என்று சொல்லப்படுவது நம்பும்படியாக இல்லை.'' என்றான்.

இதற்கு ரூபன், ''மேலைநாடுகளில், முடிந்தவரை இயற்கையான பிரசவங்களுக்கு முன்னுரிமை அளிக்கிறார்கள். வேறு வழியே இல்லை என்றால் மட்டுமே அறுவை சிகிச்சை மூலம் பிரசவம் பார்க்கப்படுகிறது. அறுவை சிகிச்சை மூலம் பிரசவம் என்பது தாய் சேய் நல மருத்துவருக்கு இழிவு என்றும், கர்ப்ப நேரத்தில் மருத்துவர் கர்ப்பிணித் தாய்க்குச் சரியாக வழிகாட்டவில்லை என்றும் அங்கே கருதப்படுகிறது. இங்கு நிலைமை நேர் எதிராக மாறிக் கொண்டு வருகிறது. இது ஆரோக்கியமான வருங்கால சமுதாயத்திற்கு வழிகோலாது.'' என்று சொன்னான்.

எல்லாவற்றையும் கேட்ட வாத்தியார், ''இதன் உண்மைகளும் பின்னணிகளும் என்னவாக இருந்தபோதிலும் சிசேரியன் தேவைப்படும் சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவு என்பதும் இவற்றை முறையான பயிற்சி மற்றும் மருத்துவ கண்காணிப்பால் தவிர்த்துவிட முடியும் என்பதுமே உண்மை. இது ஒரு தாயின் எதிர்கால ஆரோக்கியத்துக்கு மிகமிக இன்றியமையாதது.'' என்றார்.

அப்போது ஜீவன், ''தமிழகத்தில் வெளியிடப்படும் தினமணி பத்திரிகையில்' மதுரை அருகே ஒரு பழங்குடியினத்தவர், ஒரு கர்ப்பிணியைப் பிரசவத்துக்காக அழைத்து வந்தபோது, வயிற்றில் இருக்கும் குழந்தை தலை புரண்டு கிடப்பதால் அறுவைச் சிகிச்சை செய்துதான் வெளியே எடுக்க வேண்டும் என்று மருத்துவர் கூறிய போது, அந்த பழங்குடியினத் தலைவர் அக்குழந்தையின் தலையை அப்பெண்ணின் வயிற்றைத் தட்டி உருட்டி சரி செய்து சுகப்பிரசவம் பார்த்தார் என ஒரு செய்தி வெளிவந்திருந்தது.'' என்று இணையத்தில் பார்த்ததைச் சொன்னான் ஜீவன்.

இதைக்கேட்ட வாத்தியார், ''இந்த அளவுக்குப் பழைமைக்குத் திரும்ப வேண்டியதில்லை. ஆனாலும், முறையான உடற்பயிற்சி, மூச்சுப் பயிற்சி, தொடர் கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் 99வீதமான குழந்தைப் பிறப்பை சுகப்பிரசவமாக மாற்றிவிடலாம். முந்தைய காலத்தில் மட்டுமல்ல, இன்றைய காலத்திலும் இயற்கையான மக்கட்பேறு சாத்தியம்தான்.இதனை மக்களிடம் பொதுநலனை விரும்பும் மருத்துவர்களும்,சமூகப்பணியாளர்களும் வலியுறுத்த வேண்டும்'' என்றார்.

அதுவரை மற்றவர்கள் கதைப்பதற்குக் காதுகளைக் கொடுத்தபடியே, கச்சான் வியாபாரத்தைக் கவனித்த செல்லாச்சி,''இவையெல்லாரும் ஆளாளுக்குப் பத்துப் பிள்ளைகள் பெத்தவை. பிரசவத்தைப் பற்றி அலசி ஆராய்ச்சி செய்யினம்'' என்று நளினமாகச் சொன்னாள்.

அதனைக் கேட்ட மற்றவர்கள் புன்னகைத்தனர்.

''பிள்ளைத்தாச்சி என்றால் குனிஞ்சு நிமிர்ந்து வேலை செய்து,ஊர்ச்சாப்பாடுகளை சாப்பிட்டாலே சுகப்பிரசவம் தானாக நடக்கும்.நாகரிகம் என்று புதுசு புதுசாக் கண்டதுகளையும் தின்று போட்டு உடம்பு வளையாமல் இருந்தால் வயித்தைக் கிழிக்கிறதைத் தவிர வேறையென்ன வழி.''என்று புறுபுறுத்தபடியே கச்சான் கடையைக் கட்டினாள் செல்லாச்சி.

காலைக்கதிர் Kalaikkathir





# செப்புகிறார்... சின்னப்பு!

வணக்கமுங்கோ!

காலம் நமக்கொரு நல்ல ஆசான் பாருங்கோ! ஏனெண்டு சொன்னால்,நம்மைத் தாண்டிப் போன காலத்தில, நடந்த சில சம்பவங்களுக்கான எதிர்மறை நிகழ்வுகள் இப்ப நிகழ்காலத்தில அரங்கேறிக் கொண்டுதான் இருக்குது!

ஒவ்வொருவரதும் வாழ்க்கையில சில மனிசரால அநாவசியமான தலையீடுகள் ஏற்பட்டபோது, அதால அவையள் பட்ட அவமானங்கள், நிந்தைகள் தாங்கேலாமல் மனம் குமைஞ்சு அழுதமாதிரி, இப்ப சம்பந்தப்பட்டவையளும் அழவேண்டிய சூழ் நிலையளுக்குள்ளை தள்ளப்பட்டு நிக்கிறதைப் பார்க்கேக்கை, காலம் தன்ர கடமையைச் சரிவரச் செய்யுது எண்டது....எனக்கு நல்ல தெளிவாப் புரியுது.

“வேந்தன் அண்டறுக்க... வீழி நீர் நிண்டறுக்கும்...” எண்டு என்ரை அப்பு முந்தி அடிக்கடி சொல்லுறவர்.

எதிர்க்காற்றில நிண்டு கொண்டு, காறித்துப்பினால், அந்த எச்சில் காற்றோடை திரும்பி வந்து துப்பின ஆளின்ர முகத்திலதான் விழும்.

இதே மாதிரித்தான் ஒருவர் செய்யிற நன்மை - தீமைக்கான பலன் திரும்பவும் அவரிடத்தில வந்து சேரும்.

ஆளணி, பேரணி, பணபலம், படிப்பறிவு... மூலமாக எதையும் சாதிக்கலாம்; எவரையும் சரிக்கட்டலாம்... எண்டு நினைச்சு அடாவடித்தனம செய்யிற ஆள்களுக்கு, எதிர்காலம் எதிர்மறையான விளைவுகளைக் கொடுத்து விட்டுப் போகும் எண்டது பொய்யில்லைப் பாருங்கோ!

ஆளணி (தொண்டர் - குண்டர் படை), பேரணி (மக்கள் வாக்குகள்), பண பலம் (கறுப்புப் பணம்), படிப்பறிவு (மும்மொழி ஆற்றல்) எல்லாத்தையும் தமக்குள்ளை வைச்சுக்கொண்டு, சனங்களுக்கு நடுவில ‘ராஜநடை’ போட்டு வந்த சில அரசியல்வாதியள் மட்டுமில்லை, இந்தச் சமூகத்தில தங்களை ஒரு மேல் நிலையாளராகக் காட்டிக் கொண்டு திரிஞ்ச ஆள்களும் கூட கடைசியில, சனங்களால தூக்கி எறியப்பட்டு, சருகாகிப் போன சம்பவங்கள் எங்கட மண்ணில கனக்க இருக்குது கண்டியளே.

கனக்க வேண்டாம். இப்ப சண்டைக்கு முன்னம் வன்னியில நடந்த சில சம்பவங்களை நினைச்சுப் பார்க்கேக்கை, அதன் எதிர்விளைவும், புற நிகழ்வும் எப்படிப்பட்டதெண்டதை நல்லாப் புரிஞ்சு கொள்ளக் கூடியதாக இருக்குது எனக்கு.

முந்தியெல்லாம் புலியளின்ர போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிச்ச மாதிரிக் காட்டிக்கொண்டவையும், விசுவாசிகளாகத் தங்களை வெளிப்படுத்திக் காட்டின ஆள்களையும், காலமானது அவையளின்ர முகமூடிகளை, மன அழுக்குகளை, இரட்டை வேசங்களை, சந்தர்ப்ப வாதங்களை வெளிப்படுத்திக் காட்டிப் போட்டுப் போயிருக்குது.

வடக்குக் கிழக்கில வாழுற தமிழ்ச் சனங்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தமிழினமே பிரபாகரனை இன்றும்கூட தேசியத் தலைவராக வரிந்து கொண்டு நிக்கேக்கை, ரண்டொரு அரசியல்வாதிகள், பிரபாகரனைத் தேசியத் தலைவராக ஏற்றுக் கொள்ள முடியாது... நாங்கள்தான் இனித் தமிழ்ச்சனத்துக்குத் தேசியத் தலைவர்கள்... எண்டு கொஞ்சம் கூட வாய் கூசாமல் சொன்னவை.

இத்தனைக்கும் பாருங்கோ....அவையள் பிரபாகரனிட்டை பேச்சு வார்த்தைக்கெண்டு வந்து, அவரோடையிருந்து நல்லவடிவாச் சாப்பிட்டிட்டு, அவருக்குப் பக்கத்தில நிண்டு போட்டோவும் எடுத்துக் கொண்டு போன ஆள்கள்.

இப்படிப்பட்ட ஆள்கள் பிரபாகரனை ஏமாத்திவிட்டிருக்கலாம். ஆனால், காலத்தை ஏமாத்தேலாமல் போச்சுது.

இதைவிட, இன்னொரு பக்கமும் இருக்குது பாருங்கோ!

பிரபாகரன்ர போராட்டத்தை ஆதரிச்சு, கதை, கவிதை ,கட்டுரையெண்டு எழுதித்தள்ளின ஆள்கள் கூட, போராட்டம் முள்ளிவாய்க்காலோடை முடங்கி, காட்சியள் எல்லாம் மாறிக்கொண்டுவர, தங்கட வாழ்வின் நீட்சியை மேம்படுத்துறதுக்கு, கொண்ட கொள்கைகள் எல்லாத்தையும் விட்டெறிஞ்சு போட்டு, க(ர)ட்சி மாறி, அரசுக்கு ஆதரவான போக்கையும், தங்கட செயற்பாடுகளுக்கான நியாயத்தையும் எழுத்துக்களாய் எழுதிக் குவிச்சவை பாருங்கோ!

இப்படிப்பட்ட மனிசர்களைத்தான், தலைவரும் நம்பி பக்கத்தில வைச்சுக்கொண்டு போராட்டம் நடத்தினவர். உண்மையில அந்தாள் பாவம். நம்பிக் கெட்டுப் போச்சுது.

நம்பக் கூடாதவனை நம்புறதும், நம்பக் கூடியவனை நம்பாமல் ஒதுக்கிறதும் மிகப்பெரும் தவறு.... எண்டதைக் காலம் எல்லாருக்கும் காட்டிவிட்டுப் போயிருக்குது.... எண்டு நான் சொல்லுறதில கடுகளவும் பொய்யில்லைத்தானே!

## நல்லூர் சூட்டுச் சம்பவம்....

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இது யாழ்ப்பாணத்தில் சட்டம் ஒழுங்கை சீராக நிலைநாட்டுவதற்கும் பொது மக்களின் பொதுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் அவசியமாகும்.

ஏனெனில் பொலிஸார் கூறுவதைப்போன்று மதுபோதையில் இருந்த ஒருவரே நீதிபதியின் மெய்ப்பாது காவலராகிய பொலிஸ் சார்ஜன்ட்டின் இடுப்பில் இருந்து கைத்துப்பாக்கியைப் பறித்தெடுத்து துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தாலும், அது சட்டம் ஒழுங்கிற்கு எந்த வகையிலும் இலட்சணமான காரியமாக முடியாது.

குடிபோதையில் உள்ள ஒருவர் பட்டப்பகலில்; பொதுமக்கள் நடமாட்டமும், வாகனப் போக்குவரத்தும் அதிகமாக உள்ள ஒரு நாற்சந்தியில் இவ்வாறு கைத்துப்பாக்கியைப் பறித்தெடுக்க முடியுமாக இருந்தால், யாழ்ப்பாணத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமையை எப்படி வர்ணிப்பது என்று தெரியவில்லை.

இந்த நிலைமையானது நீதித் துறைக்கு ஏற்படுத்தப்பட்ட ஓர் அச்சுறுத்தல் மட்டுமல்ல. பொதுவாகவே பொதுப் பாதுகாப்புக்கு விடுக்கப்பட்ட ஓர் அச்சுறுத்தலாகவே கருதப்பட வேண்டும்.

### அரசியல் இலாபப் போக்கு

நீதிபதி இளஞ்செழியன் மீது நல்லூர் வீதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தாக்குதலில் அவருடைய மெய்ப்பாதுகாவலர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றுமொருவர் காயமடைந்த சம்பவமானது, தென்னிலங்கையிலும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. அந்த சம்பவத்தைத் தொடர்ந்து தனது மெய்ப்பாதுகாவலர் ஒருவர் கொல்லப்பட்டதைத் தாங்க முடியாமல் உணர்ச்சி வசப்பட்டு வாய் விட்டுக் கதறிய நீதிபதி இளஞ்செழியனின் மனிதாபிமானம் தென்னிலங்கையில் மேலும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தது.

ஆயினும் இந்த மனிதாபிமான உணர்வையும் உண்மையான மனிதாபிமானநிலைமையையும்தமது அரசியல் நோக்கங்களுக்காக சிலர் தென்னிலங்கையில் பயன்படுத்த முற்பட்டிருப்பதைக் காண முடிந்தது.

குறிப்பாக இந்தச் சம்பவம் குறித்து கருத்து வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகள் ஆரம்ப காலத்தில் செயற்பட்டிருந்த ஒரு நிலைமையை, நல்லூர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவ நிகழ்வு தனக்கு நினைப்பூட்டியிருப்பதாகக் கூறியிருக்கின்றார்.

அது மட்டுமல்லாமல், ஒரு தமிழ் நீதிபதிக்கு ஒரு சிங்கள பொலிஸ் சார் ஜன்ட் தனது உயிரைக் கொடுத்திருக்கின்றார் என்பதையும் சேர்த்து குறிப்பிட்டுள்ளதன் மூலம் இனவாதத்தையும் புலிவாதத்தையும் தனது கருத்தில் இழையோடச் செய்திருக்கின்றார்.

நல்லூர் சம்பவம், தன்னால் இராணுவ நடவடிக்கையின் மூலம் அழித்தொழிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்குவதை உணர்த்தியிருக்கின்றது என்ற போக்கில் அவருடைய கருத்து அமைந்திருக்கின்றது.

ஒட்டு மொத்தத்தில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முயற்சித்துள்ள முன்னாள் ஜனாதிபதி, நல்லூர் சூட்டுச்சம்பவத்தின் மூலம் விடுதலைப்புலிகள் தலைதூக்குகின்றார்கள் என்ற நச்சு எண்ணத்தை சிங்கள மக்கள் மத்தியில் எழுப்பி, அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு தன்னை ஆட்சி அதிகாரத்தில் நிறுத்த சிங்கள மக்கள் முன்வரவேண்டும் என்ற அரசியல் பிரசாரத்தை முன்னெடுப்பாரோ தெரியவில்லை.

*

## இலங்கையில் பாரதி....

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீ யாழ்ப்பாண ஆறுமுக சுவாமி சமாதிக் கோயிலின் மகாமண்டபத்தை வில்வளைவு அலங்கார மண்டபத்தை அமைப்பதில் செங்கை ஆழியான் முன்நின்று செயற்பட்டுள்ளார் என்பதும் முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய செய்தி.

யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமிதான் பாரதியின் ஞானகுரு என்பதற்கான ஆதாரங்களை செங்கை ஆழியான் தனது நூலில் தந்திருக்கிறார். ஆனாலும் மேலே குறிப்பிடப்பட்ட பத்தாம் வகுப்புக்கான சைவநெறி பாடநூலில் குறிப்பிடப்பட்ட ஞானியர் பட்டியலில் ஆறுமுகசுவாமி பற்றியோ பருத்தித்துறை அருளம்பல சுவாமி பற்றியோ தகவல் எதுவும் இல்லை. செங்கை ஆழியான் தனது நூலில் கடையிற் சுவாமி சமாதி அடைந்தமை 1891 ஆம் வருடம் எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் சைவநெறி பாடநூலில் அவர் சமாதி அடைந்தது 1882 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பௌர்ணமி தினத்தன்று எனக் குறிப்பிட்டுள்ளது. இப்படியான தகவல்கள், ஆராய்ச்சிகள் மூலம் சரிப்படுத்தப்பட வேண்டியவை.

கடையிற் சுவாமி சமாதி அடைந்த வேளை அருகே இருந்தவர் ஆறுமுக சுவாமி. அவரது சமாதி நிலைச் சரீரத்தைத் தூக்கிக் குழிக்குள் இறக்கியபோது என்னைத் தூக்கி அதற்குள் இறக்குவது போன்ற பிரமை ஏற்பட்டது. அப்பிரமை என்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. என பிற்காலத்தில் ஆறுமுகம் தன் மூத்த மகன் அருளம்பலத்திடம் அந்த அனுபவத்தை எடுத்துரைத்துள்ளார். வாங்கில் அமர்ந்தபடி தனது தந்தையின் நினைவுகளைப் பல தடவைகள் அருளம்பலம் அம்மான் ஆறுமுக சுவாமியின் மூத்த மகன், மருமகனான என்னிடம் எடுத்துரைத்துள்ளார் எனக் குறிப்பிடுகிறார் செங்கை ஆழியான்.

ஆறுமுகசுவாமி இறுதிக் காலத்தில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் தங்கியிருந்தபோது அச்சுற்றாடலில் உள்ள சாலியர் சமூக மக்கள் அவரிடம் நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஆறுமுக சுவாமியே பாரதியின் ஞானகுரு என்பது கட்டாயம் தெரிய வந்திருக்கும் அதன் காரணமாகவே ஆறுமுகசுவாமி சமாதி அடைந்ததும் கோவில் அமைத்து அங்கு அவர் தொடர்பான பாரதியாரின் பாடலையும் பொறித்து வைத்துள்ளனர்.

செங்கை ஆழியான், தான் யாழ்ப்பாணத்துச் சுவாமியின் பேரன் என்பதைக் காட்டும் வகையில் தனது குடும்ப வம்சாவழி வரைபு ஒன்றை நூலில் சேர்த்திருந்தால் பொருத்தமாக இருக்கும் என்ற எண்ணம் நூலை வாசிப்பவர்களுக்கு ஏற்படலாம். ஆனால் செங்கை ஆழியானின் நோக்கம் அதுவல்ல. பாரதியாரின் ஞானகுரு யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி என்பதைத் தெளிவுபடுத்துவதே அவரது நோக்கமாகும்.”

இவ்வாறு ஞானம் ஆசிரியர் தி. ஞான சேகரன் எதிர்வினையாற்றியிருப்பதுபோன்று, பாரதியார் புதுவையிலிருந்து சென்னைக்கு வரும் வழியில் கடலூரில் கைதாகி தடுத்துவைக்கப்பட்ட செய்தி தொடர்பாகவும் பாரதி அன்றைய கவர்னருக்கு எழுதிய கடிதம் பற்றியும் சென்னையில் காந்தியைப் பாரதி சந்தித்த திகதிகள் பற்றியும் எதிர்வினைகள் பதிவாகியிருக்கின்றன. இது இவ்விதமிருக்க பாரதி கவர்னருக்கு ஆங்கிலத்தில் எழுதிய கடிதம் பின்வருமாறு:

(தொடரும்...)

Bharathi's letter to Pentland:
OM SAKTHI

District Jail, Cuddalore
28 November-1918.

To
His Excellency Lord Pentland
Governor,
Fort St. George

The Humble petition of C. Subramania Bharathi.

May it please your Excellency.

It has been more than a week now since I was arrested at Cuddalore on my way from Pondicheery to Tinnevelly which is my native district. After many loyal assurances on my part as your Excellency may well remember the Dy. I. G. (CID) was sent by your Excellency's Government a few months back to interview me at Pondicherry. The Dy. I G after being thoroughly satisfied with my attitude towards the Government asked me if I would be willing to be kept interned purely as a war measure. in any two districts of the Madras Presidency during the war.. I could not consent to that proposal, because having absolutely renounced politics I see no reason why any restraint should be placed on my movement even while the war lasted.

Now that the war is over and with such signal success to the Allies, I ventured to leave Pondicherry., honestly believing that there would be absolutely no difficulty whatsoever in the way of my settling in British India as a peaceful citizen.. Contrary to m y expectations however I have been detained and placed in Cuddalore District Jail under conditions which I will not weary your Excellency by describing here at any length BUT which are altogether disagreeable to a man of my birth and status and full of dangerous possibilities to m y health.

I once again assure your Excellency that I have renounced every form of politics, I shall ever be loyal to British Government and law abiding.

I therefore beg of your Excellency to order my immediate release. May God grant your Excellency a long and happy life.

I beg to remain
Your Excellency's
most obedient servant.
C. Subramania Bharathi

# பாகிஸ்தானின் அடுத்த பிரதமர் நவாஸின் தம்பி ஷெபாஸ்?

இஸ்லாமாபாத், ஜூலை 30

ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்ட நவாஸ் ஷெரிப் பிரதமர் பதவியை இழந்துள்ள நிலையில், அவரது தம்பி ஷெபாஸ் ஷெரிப் புதிய பிரதமராக பதவியேற்கலாம் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.


பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தி வெளிநாடுகளில் சொத்துகளைக் குவித்து வைத் துள்ளார் எனக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதனை அடுத்து, அவர் மீதான ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணை நடத்த உயர்மட்ட விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் விசாரணை மூலம் பனாமா கேட் ஊழல் விவகாரத்தில் நவாஸ் ஷெரீப், ஆதா யம் பெற்றுள்ளமை உறுதிப் படுத்தப்பட்டது.

இந்த நிலையில், பிரதமர் பதவியிலிருந்து அவர் தகுதி நீக்கம் செய்யப்படுகிறார் என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தனர். இதனை அடுத்து, தனது பதவியை அவர் ராஜினாமாச் செய்தார்.



## அந்த நாட்டு ஊடகங்கள் தகவல்

இந்தநிலையில், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் உயர் மட்டத் தலைவர்கள் பங்கேற்ற கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில், நவாஸ் ஷெரிப்பின் தம்பி ஷெபாஸ் ஷெரிப் புதிய பிரதமராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஷெபாஸ் ஷெரிப் தற்போது பஞ்சாப் மாகாணத்தின் முதல்வராகப் பொறுப்பு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# வெள்ளை மாளிகையின் தலைமை பணியாளர் நீக்கம்!

## ட்ரம்ப் அதிரடி

அமெரிக்க வெள்ளை மாளிகையின் தலைமைப் பணியாளர் பதவியில் இருந்த ரெயின்ஸ் பிரேபஸை ஜனாதிபதி ட்ரம்ப் அதிரடியாக நீக்கி உள்ளார்.

அவரது இடத்தில் ஓய்வுபெற்ற ஜெனரல் ஜோன் கெல்லி நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பேற்றதில் இருந்து, கடந்த ஆறுமாதமாக வெள்ளை மாளிகைத் தலைமைப் பணியாளராக ரெயின்ஸ் பிரேபஸ் பதவி வகித்து வந்தார்.

இந்த நிலையில், ரெயின்ஸ் பிரேபஸ் வெள்ளைமாளிகையின் ரகசிய செய்திகளை ஊடகங்களிடம் வெளியிட்டு வருகிறார் எனப் புதிதாக பொறுப்பேற்றுள்ள ட்ரம்பின் தகவல் தொடர்பு இயக்குநர் அன்ரனி ஸ்காரமுச்சி கடந்த வியாழக்கிழமை குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதனை அடுத்து, ரெயின்ஸ் பிரேபஸை வெள்ளைமாளிகையின் தலைமை பதவியாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என ட்ரம்ப் தனது 'டுவிட்டர்' பக்கத்தில் அறிவித்துள்ளார். (ச)

# 'ஜெ.' உயிருடன் இருக்கும்போதே நான் குறி வைக்கப்பட்டேன்!

## மனம் திறந்தார் கமலஹாசன்



தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உயிருடன் இருக்கும்போதே , தனிப்பட்ட முறையில் நான் குறிவைக்கப்பட்டேன். அது ஏன் என இது வரை எனக்குத் தெரியவில்லை.

-இவ்வாறு நடிகர் கமலஹாசன் கூறியுள்ளார்.

பிக்போஸ் நிகழ்ச்சியால் ஏற்பட்ட சர்ச்சை தொடர்பில் செய்தியாளர் சந்திப்பில் பேசுகையில் நடிகர் கமல் தமிழகத்தில் ஊழல் அதிகரித்துவிட்டது எனக் கூறி பரபரப்பைக் கிளப்பினார். இதனை அடுத்து, தமிழக அமைச்சர்களுக்கும் கமலுக்கும் வாய் வழிப் போர் நடந்து வருகிறது.

இந்த நிலையில், தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்குச் செவ்வி அளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ச)

# சசிக்கு எதிராகத் தாக்கலான மனுவை தள்ளுபடி செய்தது உச்ச நீதிமன்றம்!

புதுடில்லி, ஜூலை 30

அ.தி.மு.க. பொதுச் செயலாளராக சசிகலா செயற்படுவதற்கு தடை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தள்ளுபடி செய்தது.

ஊழல் குற்றச்சாட்டில் தண்டனை பெற்ற சசிகலா அ.தி.மு.க. பொதுச்செயலாளராக நீடிப்பதற்குத் தடை விதிக்கக் கோரி ஆம் ஆத்மி கட்சியின் தமிழக ஒருங்கிணைப்பாளர் வசீகரன் உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். அவர் தனது மனுவில், சசிகலா அறிவுறுத்தலின் படி முதல்வர் மற்றும் அமைச்சர்கள் செயற்படுகின்றமை அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்றும், குடியரசுத் தலைவர் வேட்பாளரை ஆதரிப்பதற்கு சசிகலாவை ஆலோசித்தோம் எனக் கூறும் ஆளுங்கட்சியின் நடவடிக்கை சரியல்ல என்றும் தெரிவித்திருந்தார்.

விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அவரது மனுவை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம், அ.தி.மு.க. பொதுச்செயலாளராக சசிகலா செயற்படுகின்றமைக்கு தடை விதிக்க முடியாது என்று கூறி மனுவைத் தள்ளுபடி செய்தது.

மேலும், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் சசிகலாவின் ஆலோசனையில் செயற்படுகின்றமையைத் தடை செய்யவும் அது மறுத்துவிட்டது. (ச)

# ஜப்பான் எல்லையில் வடகொரியா புதிய ஏவுகணை சோதனை!



## உலக நாடுகள் கடும் கண்டனம்

டோக்கியோ, ஜூலை 30

உலக நாடுகளின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் ஜப்பான் கடல் எல்லைப் பகுதியில் வடகொரியா புதிய ஏவுகணைச் சோதனை ஒன்றை நடத்தி உள்ளது. வடகொரியாவின் இந்த நடவடிக்கைக்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்த ஏவுகணைச் சோதனையை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வடகொரியா மேற்கொண்டது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், இந்த ஏவுகணை 47 நிமிடங்கள் 12 விநாடிகள் 3 ஆயிரத்து 724.9 கிலோ மீற்றர் உயரத்தில் பறந்து 998 கிலோ மீற்றர் தூரத்தை வெற்றிகரமாக அடைந்தது என வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் இந்த ஏவுகணைச் சோதனை கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து தாக்கக் கூடியது என்று அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன.

கொரிய போர் நிறுத்த ஒப்பந்தத்தின் 64 ஆவது தினமான ஜூலை 27ஆம் திகதியை, வெற்றித் தினமாகக் கொண்டாடி வரும் வடகொரியா, இந்தத் தினத்தை முன்னிட்டு ஏவுகணைச் சோதனை நடத்த கூடுமென ஏற்கனவே அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரித்திருந்தனர். இந்த நிலையில், மேற்படி சோதனை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ அபே தெரிவிக்கையில்-

"எங்கள் நாட்டின் கடல் எல்லையில் வடகொரியா ஏவுகணைச் சோதனை நடத்தியுள்ளது. வட கொரியா ஆத்திரமூட்டும் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொள்கிறது.


"வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா, தென் கொரியா மற்றும் சீனா, ரஷ்யா ஆகிய ஒட்டுமொத்த சர்வதேச நாடுகள் ஒன்றாக இணைந்து கூடுதலான அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும்.'' - என்றார். (ச)

# சக்கர வியூகத்தில் மாட்டி இருக்கும் அ.தி.மு.கவை விரைவில் மீட்போம்!

தஞ்சாவூர், ஜூலை 30

மகாபாரத அபிமன்யு போல, சக்கர வியூகத்தில் மாட்டி இருக் கும் அ.தி.மு.க.வை விரைவில் மீட்டெடுப்போம்.

-இவ்வாறு சசிகலாவின் தம்பி திவாகரன் தெரிவித்துள்ளார்.



## சசியின் தம்பி திவாகரன் சபதம்

அ.தி.மு.க.(அம்மா) பொதுச் செயலாளர் சசிகலாவின் அண்ணன் சுந்தரவதனத்தின் மனைவியும், அ.தி.மு.க. (அம்மா) துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரனின் மாமியாருமான சந்தான லட்சுமி கடந்த வியாழக் கிழமை மாரடைப்பால் சென்னையில் காலமானார். அவரது இறுதி சடங்கில் கலந்து கொண்ட திவாகரன், ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதுச்செயலாளர் சசிகலா சிறையில் இருக்கிறார். அ.தி.மு.க வுக்கு இது சோதனையான காலகட்டம். மகாபாரதப் போர்க் களத்தில் சக்கர வியூகத்தில் அபிமன்யு மாட்டிக் கொள்வார். அப்போது கிருஷ்ண பரமாத்மா அங்கே இருக்கமாட்டார். சக்கர வியூகத்தில் அபிமன்யு மாட்டிக் கொண்டமையைப்போல அ.தி. மு.க. மாட்டிக் கொண்டுள்ளது. அதை மீட்டெடுத்து எங்களது இலக்கை அடைவோம். அதற்கான முயற்சியை செய்து வருகிறோம்.

கட்சி என்பது வேறு. ஆட்சி என்பது வேறு. எடப்பாடி பழனிச்சாமி நல்லமுறையில் ஆட்சி செய்து வருகிறார். எனக்கும், தினகரனுக்கும் இடையே எந்த பிரச்சினையும் இல்லை. அவர் எனது மூத்த சகோதரியின் மகன். நீரடித்து நீர் விலகாது. எங்கள் இருவருக்கும் பிரச்சினையே இல்லாத போது நடராஜன் எவ்வாறு பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும்.-என்றார்.

அ.தி.மு.க.(அம்மா) துணை பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் பேசுகையில்-

"துக்க நிகழ்ச்சியை யாரும் அரசியலாக்க வேண்டாம். அ.தி.மு.கவில் என்ன நடக்கிறது என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள்'' எனத் தெரிவித்தார். (ச)



# நிர்வாண நீச்சல் போட்டி

பின்லாந்தில் நூற்றுக்கணக்கான நீச்சல் வீரர்கள் ஆடைகளின்றி நிர்வாணமாக தண்ணீரில் நீந்தியுள்ள சம்பவம் சுவாரஷ்சியத்தை ஏற்படுத்தியுள்ளது. கிழக்கு பின்லாந்தில் நடைபெற்ற இசைத்திரு விழா ஒன்றில் பங்கேற்ற சுமார் 789 பேர் நிர்வாண நீச்சலில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சாதனையை கின்னஸ் உலக சாதனை அமைப்பு உறுதிப்படுத்த காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதற்குமுன், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பிந்தைய முயற்சிகளில் 300 போட்டியாளர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். குளிர்ந்த நீரில் ஆயிரம் பேர் வரை இறங்குவார்கள் என்று விழா ஒருங்கிணைப்பாளர்கள் நம்பிக்கையோடு இருந்தனர்.

உடல் மீதான நேர்மறையான விஷயங்களைக் கொண்டாடும் முயற்சியில் ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற நிர்வாண நீச்சல் போட்டியில் 786 பேர் கலந்து கொண்டனர்.

இந்த உலக சாதனையை முறியடிக்கும் வகையில் தற்போது பின்லாந்தில் இந்த நீச்சல் போட்டி நடைபெற்றுள்ளது. பொதுவெளியில் நீச்சலடிப்பது பின்லாந்தில் ஒரு பாரம்பரியமாகும்.

அவான்டூண்டி எனப்படும் ஐஸ்கட்டி போன்று உருகிய மேலடுக்கு மீது துளையிட்டு அதற்குள் நீச்சலடிப்பது ஆற்றலை அதிகரிக்கும் அனுபவம் எனக்கூறி பின்லாந்தின் சுற்றுலா வாரியத்தால் இது ஊக்குவிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# 97 வயதில் படித்து பட்டம் பெற்ற உலக போர் வீரர்!



அமெரிக்காவில் இரண்டாம் உலகப் போரில் பங்கேற்ற சார்லஸ் லியீஸ்ஸி என்ற வீரர், 97 வயது ஆகும் நிலையில் தான் படித்த பாடசாலையிலிருந்து பட்டத்தை பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் உள்ள தெற்கு பிலாடெல்பியா நகரைச் சேர்ந்தவர் சார்ள்ஸ் லியீஸ்ஸி. அவருக்குத் தற்போது 97 வயதாகும் அவர் இரண்டாம் உலகப் போர் சமயத்தில் தனது பாடசாலை படிப்பை இடை நடுவில் விட்டு விட்டு இராணு வத்தில் சேர்ந்து போரில் பங் கேற்றார்.

போரில் பங்கேற்று பதக்கங்களையெல்லாம் பெற்ற பின்னர், ஓய்வு காலத்தில் குடும்பத்தினருடன்மகிழ்ச்சியாக வாழ்ந்து வரும் சார்ள்ஸுக்கு விட்டுப்போன படிப்பின் பட்டத்தைப் பெறவேண்டும் என்ற ஆசை துளிர்விட்டுள்ளது.

தனது ஆசையை குடும்பத்தினரிடம் அவர் சொல்ல, அவரது குடும்பத்தினர் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர்.

இதனையறிந்த பிலாடெல்பியா மாவட்ட பாடசாலை நிர்வாகம், மகிழ்ச்சியுடன் சார்ள்ஸின் ஆசையை நிறைவேற்றியுள்ளது. 2017 ஆம் ஆண்டில் பட்டம் பெறும் மாணவர்களுடன் சார்ள்ஸுக்கு பாடசாலை பட்டம் வழங்கியுள்ளது. தன் குடும்பத்தினரின் முயற்சியே இதற்குக் காரணம் என்று மகிழ்ச்சியுடன் பேட்டி அளித்துள்ளார் அந்த 97 வயது பட்டதாரி.

பிலாடெல்பியா மாவட்ட பாடசாலை நிர்வாகம், மகிழ்ச்சியுடன் சார்ள்ஸின் ஆசையை நிறைவேற்றியுள்ளது. 2017 ஆம் ஆண்டில் பட்டம் பெறும் மாணவர்களுடன் சார்ள்ஸுக்கு பாடசாலை பட்டம் வழங்கியுள்ளது. தன் குடும்பத்தினரின் முயற்சியே இதற்குக் காரணம் என்று மகிழ்ச்சியாகப் பேட்டி அளித்துள்ளார் அந்த 97 வயதுபட்டதாரி.

# தனிக் கிராமத்தில் வாழும் நபர்!



உங்களில் எத்தனை பேர் உங்கள் வீட்டை விட்டு வெளியே சென்று அலைந்து திரிந்திருப்பீர்கள்? எல்லோருக்கும் ஓர் எண்ணம் இருக்கும், அமைதியான சூழ் நிலையில் வாழ வேண்டும் என்று. இருந்தாலும் நீங்கள் எத்தனை காலம் அப்படியே வாழ்த்திட முடியும் என்று எண்ணியுள்ளீர்களா?

வருடங்கள், மாதங்கள் அல்லது ஒரு வாரமாவது? உங்களால் சமாளிக்க முடியுமா. ஆனால் இவர் கொஞ்சம் நம்மை விட அதிகம் சென்று தனியாக ஆர்ஜென்டினாவில் உள்ள வில்லா எபேசுவேன் என்ற கிரா மத்தில் தனியாக வாழ்ந்து வருகிறார்.

இந்தக் கிராமம் 1920 ஆம் ஆண்டு நிகழ்ந்த வெள்ளப் பெருக்கால் சேதம் அடைந்தது. அங்கிருந்த மக்கள் அக் கிராமத்தை விட்டு சென்று விட்டனர்.

ஆனால் இவர் 2009 ஆம் ஆண்டு அந்த கிராமத்திற்குச் சென்று அங்கு வாழ்ந்து வருகிறார்.

# மரபணு மாற்றம் மூலம் பல மடங்கு சக்தி வாய்ந்த 'கொழு கொழு நாய்கள்!

மரபணு மாற்றம் மூலம் பல மடங்கு சக்தி வாய்ந்த 'கொழு கொழு' நாய்களை உருவாக்கியது சீனா.

சீனாவிண்வெளி, ரயில்வே மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் முன்னேறி வருகிறது. அந்த வகையில் தற்போது பலம் பொருந்திய 'கொழு கொழு' நாய்களை உருவாக்கியுள்ளது.

சோதனைக்குழாய் மூலம் உருவாக்கப்பட்டுள்ள இந்த நாய்கள் ஏனைய நாய்களை விடப் பலமடங்கு எடை கொண்டவை.

இவை அதிக பலம் வாய்ந்தவை. மிக வேகமாகப் பாய்ந்து சென்று எதிரிகளை வேட்டையாடும் தன்மை கொண்டவை. இவற்றைப் பாதுகாப்புக்காகவும் பொலிஸ் துறையிலும் பயன்படுத்தலாம்.

பீஜிங்கில் உள்ள பயோ தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த நாயை உருவாக்கியுள்ளனர். சாதாரண நாயில் உள்ள 'மயோஸ்டேடின்' என்ற மரபணுவை நீக்கி புதிய சூப்பர் நாய்களை உருவாக்கினர்.

இதே மரபணு மாற்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சீனா அதிபயங்கர சக்தி படைத்த நாசகார சூப்பர் மனிதர்களை உருவாக்கக் கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இந்தத் தொழில் நுட்பத்தில் நாய்களை உருவாக்கிய 2 ஆவது நாடு என்ற பெருமையைச் சீனா பெற்றுள்ளது. முதலிடத்தில் தென் கொரியா உள்ளது.

சீனாவைச் சேர்ந்த லியாங் ஷியூ என்ற விஞ்ஞானி முதன்முறையாக மரபணு நீக்கப்பட்ட நாய்களை உருவாக்கினார். இவை அதிக எடையும், நல்ல வேட்டையாடும் திறனும், அதிவேகமாக ஓடும் திறனும் உடை யனவாக இருந்தன. ஆனாலும் அந்த நாய்களால் சர்ச்சைகள் ஏற்பட்டன.



காலைக்கதிர் Kalaikkathir


# காலி டெஸ்டில் இலங்கை அணி 'காலி'! 304 ஓட்டங்களால் இந்தியா வெற்றி!!

காலி, ஜூலை 30

2015இல் இந்தியாவைத் தோற்கடித்த அதே காலி கிரிக்கெட் மைதானத்தில் இந்தியாவிடம் காலியானது இலங்கை டெஸ்ட் அணி.

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஒரு நாள் ஆட்டம் எஞ்சியிருக்கையில் நான்காவது நாளான நேற்று இந்திய அணியிடம் இலங்கை 304 ஓட்டங்களால் மண்டியிட்டமையால் நேரத்துடனேயே ஆட்டம் முடிவடைந்தது.



இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்த இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 600 ஓட்டங்கள் குவித்தது. இலங்கை அணி தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் நுவன் பிரதீப் அதிகபட்சமாக 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் களமிறங்கிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 291 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதன்மூலம் 309 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாம் இன்னிங்ஸைத் தொடங்கிய இந்திய அணி மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 189 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்த நிலையில், நான்காம் நாளான நேற்று ஆட்டத்தை தொடர்ந்த இந்திய அணி 240 ஓட்டங்கள் குவித்து தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

அணித்தலைவர் விராட் கோஹ்லி 103 ஓட்டங்களுடனும், ரஹானே 23 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதன்மூலம் இலங்கை அணி வெற்றிபெற 550 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை இந்திய அணி நிர்ணயித்தது.

இதைத்தொடர்ந்து, இலங்கை அணி தனது இரண்டாம் இன்னிங்ஸை தொடங்கியது. ஆட்டத்தின் 3 ஆவது ஓவரிலேயே இலங்கை அணியின் தொடக்க ஜோடியை முகமது ஷமி பிரித்தார்.

உபுல்தரங்கா 10 ஓட்டங்கள் எடுத்து இருந்த போது அவரது பந்தில் 'போல்ட்' ஆனார். அப்போது ஓட்டப் பெறுதி 22 ஆக இருந்தது.

2 ஆவது விக்கெட்டுக்கு கருணாரத்னவுடன், குணதிலக ஜோடி சேர்ந்தார். உமேஷ்யாதவ் இந்த ஜோடியை எளிதில் பிரித்தார். குணதிலக 2 ஓட்டங்களில் வெளியேறினார். இதனால் இலங்கை அணி 29 ஓட்டங்களில் 2 விக்கெட்டுகளை இழந்தது.

3 ஆவது விக்கெட்டான கருணாரட்ண- மென்டிஸ் ஜோடி விக்கெட் சரிவை தடுத்து பொறுமையுடன் ஆடியது.

மதிய உணவு இடைவேளையின் போது இலங்கை அணி 2 விக்கெட் இழப்புக்கு 85 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. கருணாரத்ன 44 ஓட்டங்களுடனும், மென்டிஸ் 24 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

உணவு இடைவேளைக்கு பின்னர் தொடர்ந்து விளையாடிய இலங்கை அணியின் மென்டிஸ் 36 ஓட்டங்களில் ஜடாஜாவின் சுழலில் சஹாவிடம் பிடி கொடுத்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து களமிறங்கிய மத்தியூஸ் 2 ஓட்டங்களில் ஜடேஜா பந்துவீச்சில் பாண்டியாவிடம் பிடிகொடுத்து வெளியேறினார். இதன் மூலம் இலங்கை அணி 40 ஓவர் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 134 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

டிக்வெல்லவும் எம்.டி.ஜே.பெரேராவும் ஐந்தாவது விக்கெட்டுக்கு அபாரமாக ஆடினர். அந்த ஜோடி 101 ஓட்டங்களை எடுத்த நிலையில் டிக்வெல்ல 67 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அதைத் தொடர்ந்து சரிவு கண்ட இலங்கை, 245 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஆட்டத்தில் தோற்றுப்போனது.

கையில் ஏற்பட்ட காயம் காரணமான ரங்கண ஹேரத்தும் அசேல குணரட்ணவும் துடுப்பாட்டக் களத்தில் இறங்க முடியவில்லை. அதனால் இலங்கையின் இரண்டாவது இன்னிங்ஸில் எட்டு விக்கெட்டுக்களை வீழ்த்திய மையுடன் இந்தியாவின் வெற்றி உறுதியாயிற்று.

ஓட்ட விவரம்

இந்தியா 600 மற்றும் 3 விக்கெட் இழப்புக்கு 240

இலங்கை - 291 மற்றும் 245 (உ)

# ஹேரத்தின் விரலில் முறிவு இல்லை: குருசிங்க

கொழும்பு, ஜூலை 30

காலியில் நடைபெறும் இந்தியாவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் மற்றொரு வீரரும் காயத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்.

போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டத்தின்போது அணித் தலைவர் ரங்கண ஹேரத்தின் இடது கையின் நடுவிரலில் காயம் ஏற்பட்டுள்ளது.

இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி சுழற்பந்து வீச்சாளர் டில்ருவன் பெரேரா வீசிய 36 ஆவது ஓவரின் முதல் பந்தில் வேகமாக அடித்தபோது, அதனை ஷோட் எக்ஸ்ட்ரா கவர் திசையில் களத்தடுப்பில் ஈடுபட்ட ஹேரத் தடுக்க முயன்றார். அப்போது அவரது நடுவிரலில் காயம் ஏற்பட்டது. உடன் அங்கு வந்த உடற்பயிற்சியாளர் அவரை மைதானத்தில் இருந்து அழைத்துச் சென்றார்.

இதுதொடர்பில் இலங்கை அணி முகாமையாளர் அசங்க குருசிங்க மூன்றாம் நாள் ஆட்டத்திற்கு பின்னர் தெரிவித்தவை வருமாறு:-



ரங்கணவுக்கு 2014 இல் அதே இடத்தில் முறிவு ஏற்பட்டது. அதில் ஐஸ் ஒத்தடம் வழங்கி இருக்கிறோம். தற்போது இது பற்றி பயப்படத் தேவையில்லை. போட்டி முடிவில் சரியாக என்னவென்று எமக்குத் தெரிந்துகொள்ள முடியும்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் முறிவு ஏற்பட்டதும் அவரது அதே விரலாகும். எனினும் எக்ஸ் ரே எடுத்து பார்த்தபோது எம்மால் எந்த முறிவையும் காண முடியவில்லை. வலி தொடர்ந்தால் நாம் MRI சோதனை ஒன்றை செய்யவுள்ளோம்.

நாம் ஐஸ் வைத்து சிகிச்சை அளித்திருக்கிறோம், விரைவில் என்னவென்று தெரியவரும். தற்போதைய நிலையில் அவர் கொழும்புக்கு அழைத்துச் செல்லவோ அல்லது வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப் படமாட்டாது.

அவரால் தொடர்ந்து பந்துவீச முடியுமா என்று பார்ப்போம். அவரது இடது கையின் நடுவிரலிலேயே காயம் உள்ளது. அது வெறும் ஒரு சிராய்ப்பு என்றே நாம் நம்புறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஒரே இன்னிங்ஸில் கோஹ்லி தொடராக மூன்று சாதனைகள்!



லண்டன், ஜூலை 30

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணித் தலைவர் கோஹ்லி ஓர் இன்னிங்ஸில் மூன்று சாதனைகளைப் படைத்து அசத்தியுள்ளார்.

காலி மைதானத்தில் நடைபெற்ற வரும் முதல் டெஸ்ட் போட்டியில் இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடி இந்திய அணி 240 ஓட்டங்களுக்கு 'டிக்ளேர்' செய்தது. இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி சதமடித்து அசத்தியுள்ளார்.

இதையடுத்து இலங்கை அணிக்கு 550 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப் பட்டது. இந்த இன்னிங்ஸில் இந்திய அணித் தலைவர் கோஹ்லி மூன்று சாதனைகளைப் படைத்துள்ளார்.

அதன்படி, வெளிநாட்டுத் தொடர்களில் வேகமாக 1,000 ஓட்டங்களை கடந்த இந்திய அணித்தலைவர் என்ற சாதனையை கோஹ்லி படைத்துள்ளார்.

அவர் 17 இன்னிங்ஸ்களில் இந்த சாதனையைப் படைத்துள்ளார், இதன் மூலம் அவர் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் கோஹ்லி அடிக்கும் 17ஆவது சதம் இதுவாகும். மேலும், அணித்தலைவராக அவர் அடிக்கும் 10 ஆவது சதமாகும். அதிவேகமாக 10 சதங்கள் அடித்த அணித் தலைவர்கள் பட்டியலில் கோஹ்லி 5 ஆவது இடம் பிடித்துள்ளார்.

இந்த சதம் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டிலும் அவரது சராசரி 50 ஆகியுள்ளது. அதுமட்டுமின்றி டெஸ்ட், ஒருநாள், இருபதுக்கு 20 என்று அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளிலும் 50 சராசரியை வைத்துள்ள ஒரே வீரர் என்ற பெருமையை கோஹ்லி பெற்றுள்ளார்.

# தெய்வத் தமிழில் பூசைகளுடன் இணுவிலில் இன்று தேரோட்டம்

## ஞானலிங்கேச்சுரர் ஆலயத்தில்

இணுவில், ஜூலை 30

இணுவில் ஞானலிங்கேச் சுரர் ஆலயஇரதோற்சவம்இன்று காலைஇடம்பெறவுள்ளது.இன்று அதிகாலை 5.00 மணிக்கு திரு மஞ்சனம் நடைபெற்று 6.00 மணிக்கு காலைப் பூசை இடம் பெறும். அதனைத் தொடர்ந்து 6.30மணிக்குவசந்தமண்டபப் பூசை நடைபெறும்.

காலை 8.00 மணிக்கு ஞானாம்பிகை உடனாய ஞான லிங்கேச்சுரப்பெருமான்தேரில் ஆரோகணிப்பார். சிவஸ்ரீ சசி குமார் ஐயா தலைமையிலான செந்தமிழ் அர்ச்சகர்கள் தெய் வத்தமிழில்பூசைகளை நடத்து வார்கள்.

ஈழத்தில் தெய்வத் தமிழில் பூசைகளுடன்தேர்த்திருவிழாக் காணுகின்ற ஒரேயொரு ஆல யம் இது என்பது இங்கு குறிப் பிடத்தக்கது. (ம)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சபையின் ஆளும் தரப்பான தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புக்குள் முற்றி வெடித்த அரசியல் முரண்பாடு களை அடுத்து அது குறித்து முதலமைச்சர் விக்னேஸ்வர னும், கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனும் கடந்த 23 ஆம் திகதி கொழும்பில் சந்தித் துப் பேசியிருந்தனர்.

அந்தச் சந்திப்பின்போது கூட்டமைப்பின்பங்காளிக்கட்சித் தலைவர்களுடன் முதல்வர் விக் னேஸ்வரனும் ஒன்றாக அமர்ந்தி ருந்து, பேசி, இப்பிரச்சினை களுக்குத் தீர்வு காண்பது என்ற முடிவு எட்டப்பட்டது என்பது தெரிந்ததே.

"எதிர்வரும் ஆறாம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒரு நிகழ்வில் பங்குபற்றுவதற்காக யாழ். வரு கிறேன். அச்சமயத்தில் 5 ஆம் திகதியளவில் இந்தக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில்வைத்துக்கொள் வது குறித்துப் பேசி முடி வெடுக் கலாம்." - என மேற்படி சந்திப் பின்போது முதல்வர் விக்னேஸ் வரனிடம் சம்பந்தன் தெரிவித்தி ருந்தார் என அறிய வந்தது.

எனினும் -

கூட்டமைப்புப் பங்காளிக் கட்சித்தலைவர்கள்முதல்வர்விக் னேஸ்வரனையும் அழைத்துப் பேசுவதற்கு முன்னர், பங்காளிக் கட்சித்தலைவர்கள்தங்களுக்குள் கூடி ஒருமித்த முடிவுகளுக்கு வரவேண்டும் என்றும், அந்த முடிவுகளுடன்தான்முதல்வரை கூட்டமைப்பின்பங்காளிக்கட்சித் தலைவர்கள் சந்திக்க வேண்டும் என்றும்கூட்டமைப்பின்பிரதான கட்சியான இலங்கைத்தமிழரசுக் கட்சியின்மூத்த தலைவர் ஒருவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

தற்போதைய நிலையில் -

கூட்டமைப்புக் கட்சித் தலை வர்கள் முதலில் தனித்து சந்திப் பதற்கோ அல்லது அதற்குப் பின்னர் முதல்வருடன் சேர்ந்து சந்திப்பதற்கோ எந்த ஒழுங்கு களும்நேற்றுவரைசெய்யப்படவே யில்லைஎனஉறுதியாகத்தெரிய வந்தது.

மட்டக்களப்பில்ஒருநிகழ்வில் பங்குபற்றுவதற்காகச் சென்றிருக்கும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் நேற்றிரவு தொடர்பு கொண்டு இவ்விடயம்குறித்துக்கேட்டோம்.

"யாழ்ப்பாணத்தில் 6 ஆம் திகதி நடைபெறும்நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக ஐந்தாம் திகதி நான் யாழ்ப்பாணம் வரு கிறேன்.எனினும்முதல்வருடனான சந்திப்புத்தொடர்பானஏற்பாடுகள் எதுவும் இதுவரை முன்னெடுக் கப்படவேயில்லை.எனவேஎனது யாழ். வருகை சமயத்தில்அந்தச் சந்திப்புஅங்கு நடக்குமாஎன்பது இன்னும் உறுதியில்லை." - என்றார் சம்பந்தன். (உ)

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆவணப்படமொன்றுக்காக, பொலிஸ் இன்ஸ்பெக்டர் வேடமிட்டுள்ளார் கூரே.

இந்தப் படப்பிடிப்பு யாழ்ப் பாணம் கிறீன் கிறாஸ் விடுதி யில் நேற்று நடை பெற்றது.

அதன்போதேவடக்குஆளு நர்பொலிஸ்உடையுடன்காட்சி யளித்தார்.

## இன்னும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவர் போன்று செயற்பட்டாலும்உத்தியோகபூர் வமாக, தானே இன்னும் தலை வராக இருக்கின்றார் என்றும், கட்சியின் மாநாட்டை நடத்தவும் தனக்கு உரிமையுள்ளதுஎன்றும் அவர் சிங்கள வார இதழ் ஒன் றுக்குத்தெரிவித்திருக்கிறார்என இணைய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கட்சியின்தலைவர் பதவியில் இருந்து தாம் விலகவோ அல் லது விலகக்கப்படவோ இல்லை என்றும் -

கட்சியின் பெரும்பான்மை யினர்தன்னோடேஇருக்கின்றார் கள் என்றும் -

அவர் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லமைச்சர் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் விஜயமாக வடக்கிற்கு வருகை தந்த ஜேர்மன் தூதுவர் ஜார்ன் ரோப், ஜேர்மன் நாட்டின் பொருளாதார மத்திய நிலையப் பணிப்பாளர் ஆன்ட் ரியாஸ் ஆகியோர் உட்பட ஐவர் அடங்கிய குழுவினரே இந்த உறுதி மொழியை வழங்கியுள்ள னர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பா ணத்திற்கு விஜயம் செய்த மேற் படிக் குழுவினர் அன்று மாலை முதலமைச்சர்சி.வி.விக்கினேஸ் வரனை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அவர்களுடன் கலந்துரை யாடிய விடயங்கள் தொடர்பாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிக்கையில் -

வடக்கில் யுத்தத்தினால் பின் தங்கிய நிலையில் உள்ள மக் களின் பொருளாதார ரீதியான கட்டமைப்பையும் அண்மைக் காலமாக மீள்குடியேறிய மக்க ளின் பொருளாதார ரீதியான தன்மையையும்மேம்படுத்த பல வழியிலானசெயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு ஜேர்மன் அரசாங்கம் எதிர்பார்க்கிறது என அவர்கள் கூறினர்.

இந்தச் சந்திப்பில் ஜேர்மன் அரசாங்கத்தினால் வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபி விருத்தி செயற்றிட்டங்கள் பற்றி யும் எதிர்வரும் ஆண்டுகளில் முன்னெடுக்கப்படவுள்ள பொரு ளாதார ரீதியான செயற்றிட்டங் கள்பற்றியும்கலந்துரையாடப்பட் டது. - என்றார்முதலமைச்சர். (உ)

## மாற்றுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வீ.விக்னேஸ்வரன்சம்பந்தப் பட்ட தரப்புகளுக்குத் திட்ட வட்ட மாகவும், தெளிவாகவும் எடுத் துரைத்து விட்டார் என அறிய வருகின்றது.

இந்தப் பின்னணியிலேயே இப்போது கூட்டுத் தலைமை பற்றிய சிந்தனையும் முயற்சி யும் சம்பந்தப்பட்ட வட்டாரங் களில் தீவிரம் பெற்றிருக்கின் றன என அறிய வந்தது.

மாற்றுத் தலைமை யோச னைக்குத் தாம் சரிபட்டு வரார் என்பதைத் தெளிவுபடுத்திய நீதி யரசர் விக்னேஸ்வரன், கடந்த 23 ஆம் திகதி கொழும் பில் சம்பந்தனுடன் நடத்திய பேச்சுக் களை அடுத்து முழுத் திருப்தி யோடும் நிறைவோடும் தான் யாழ். திரும்பியிருந்தார்.

எனினும், அதற்குப் பின்னர் நடைபெற்ற சில சம்பவங்கள் அவரது மனதை நோகடித்திருக் கின்றன என அவருக்கு நெருங் கிய வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

தம்மையும்(முதல்வரையும்) கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களையும் ஒன் றிணைத்து எதிர்வரும் 5 ஆம் தி கதி யாழ்ப்பாணத்தில் - தான் (சம்பந்தன்) நிற்கும் போது கூட் டத்தை நடத்தலாம் என்று கொழும்புச் சந்திப்பில் பிரேரித் தவர் சம்பந்தன்தான் என நீதி யரசர் விக்னேஸ்வரன் தமக்கு நெருங்கியவர்களிடம்தெரிவித்தி ருக்கின்றார்.

ஆனால், அப்படிக்கூறியசம் பந்தன்அந்தக்கூட்டத்தைஅத்தி கதியில் நடத்துவதற்கு எந்த முயற்சியையும் எடுக்கவே யில் லை என்ற ஆதங்கம் இப்போது நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு.

போதாக்குறைக்கு அத்த கைய பங்காளிக் கட்சித் தலை வர்களுக்கும் முதல்வர் விக் னேஸ்வரனுக்குமிடையிலான கூட்டம் ஏதும் இப்போதைக்கு நடக்காது என்றும், அப்படி நடந் தாலும் அது யாழ்ப்பாணத்தில் நடக்கவே நடக்காது என்றும் தமிழரசுக் கட்சிவட்டாரங்கள் கூறி வருகின்ற செய்தி முதல் வரின் மனதைக் காயப்படுத்தி யிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அப்படி முதல்வர் விக்னேஸ் வரனை, கூட்டமைப்பின் பங் காளிக் கட்சித் தலைவர்கள் சந்திப்பதாயின், அதற்கு முன் னர் பங்காளிக் கட்சித் தலை வர்கள் தங்களுக்குள் தனி யாகக் கூடிப்பேசி முதல்வர் விக்னேஸ்வரனுடனானவிடயங் களை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து ஒருமித்த முடிவை எடுத்து விட்டே அவரை (முதல்வரை) சந்திக்க அழைக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின்மூத்ததலை வர்ஒருவர் கூறியிருக்கின்றமை முதல்வரின் மனதை மேலும் புண் படுத்தியிருக்கின்றது.

அத்தோடுதமக்கு ஆதரவாக இருந்த மாகாண சபை யின் ரெலோ உறுப்பினரை சத்தம் சந்தடியின்றி பதவி இழக்க வைத்துவீட்டுக்குஅனுப்பிவிட்டு, அந்த இடத்தைத் தமக்கு ஆதர வானபுளொட்கட்சிக்குக்கொடுக்க வேண்டிய கடப்பாட்டையும் நிராகரித்து,தமிழரசுக்கட்சிதான் சுருட்டிக் கொண்டுள்ளமை முதல்வர் விக்னேஸ்வரனின் மனதைச்சலைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதனால், கடந்த 23 ஆம் தி கதிசம்பந்தனைச்சந்தித்துவிட்டு திருப்தியோடும், மனநிறை வோடும் திரும்பிய முதல்வர் விக்னேஸ்வரன்இப்போது மீண் டும் வேதாளம் மரத்தில் ஏறிய கதையாகஇலங்கைத்தமிழரசுக் கட்சியினரின்செயற்பாட்டினால் பெரிதும் குழம்பிப் போயிருக் கின்றார்என்றுகூறப்படுகின்றது.

இச்சூழலில்தான் -

தமிழர் தரப்புக்கு தனி ஒரு வரில் தங்கியிராத - தமிழர் தரப் பின் கட்சிகள், அங்கத்த வர்கள் அனைவருக்கும்பதிலும்விளக்க மும்அளிக்கக்கடமைப்பட்டுள்ள ஒரு கூட்டுத் தலைமை குறித்து பிரஸ் தாபிக்கப்படுகின்றது.

தற்போதுள்ள மனநிலை யில் கூட்டுத் தலைமைத் திட்டத் துக்கு முதலமைச்சர் விக்னேஸ் வரன் பச்சைக் கொடி காட்டுவ துடன்தானும்அத்தகையதலை மையை உருவாக்கும் முயற் சிக்கு ஒத்துழைப்பும், பங்களிப் பும் உதவியும் வழங்குவார் என் றும் அவருக்கு நெருக்கமான தரப்புகள் உறுதியுடன் நம்பு கின்றனவாம். (உ)

## சங்கத்தானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதுண்டு சம்பவ இடத்தி லேயே பலியானார்.

வடலியடைப்பு,பண்டத்தரிப் பைச் சேர்ந்த 58வயதான சிங்கராம் சிவச்செல்வன் என் பவரே பலியாகியுள்ளார்.சாவ கச்சேரி சங்கத்தானைப் பகுதி யில்உள்ளஉறவினர்வீட்டுக்கு சென்று விட்டு பஸ் ஏறுவதற்கு வந்த சமயமே ரயிலுடன் அவர் மோதுண்டார்என உற வினர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் ரயிலில் ஏற்றப்பட்டு கொடிகாமம் ரயில் நிலையம் கொண்டு செல்லப்பட்டுபின் னர் பொலிஸாரினால் சாவகச் சேரிஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டது.சம்பவ இடத்தில்அவரதுதொலைபேசி, சாரதி அனுமதி பத்திரம் ஆகி யன காணப்பட்டன. (உ-21)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத்தூது வராகப் பணி யாற்றி வந்தார்.

இப்போது வெளியுறவுச் செயலாளராக இருக்கும்எஸ்ல வீரக்கோனின்இடத்துக்குஅவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

1981 இல் இலங்கையின் வெளியுறவுச் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட அவர் ஜெனீவா, நியாட், புது டில்லி, நியூயோர்க்ஆகிய இடங் களில் இலங்கைப் பிரதிநிதி யாகக் கடமையாற்றியுள்ளார்.

2009 முதல் 2014 வரை புதுடில்லியில் இலங்கையின் தூதுவராக அவர் பணி புரிந்த சமயம், பூட்டான், ஆப்கானிஸ் தான் ஆகிய நாடுகளில் உள்ள இலங்கைத்தூதரகங்களுக்கும் பொறுப்பாகவிருந்தார். (உ)

## விடுவிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

11மீனவர்களையும் இலங்கை அரசாங்கம் விடுதலை செய் துள்ளது.

இந்த 77 மீனவர்களும் நாளை ஆழ்கடலில் வைத்து இந்தியத் தரப்பினரிடம் ஒப்ப டைக்கப்பட்டு, அங்கிருந்து காரைக்கால் துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு இந் தியக் கரையோர அதிகாரிக ளிடம் அவர்கள் கையளிக் கப்படவுள்ளனர்.

பிரதமர் மோடி சில தினங் களுக்கு முன்னர் இராமேஸ் வரத்தில் நடந்த அப்துல்கலாம் மணி மண்டபம் திறப்பு விழா வில் பங்கேற்றார்.

அப்போது, தமிழக முத லமைச்சர் எடப்பாடி பழனிச் சாமி இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதம ரிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில் இலங்கை அரசு யாழ்ப்பாணம் சிறையில் இருந்த 66 மீனவர்களையும், வவுனியா சிறையில் இருந்த 11மீனவர்களையும் விடுதலை செய்துள்ளது. (உ)

## போனஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினர் பதவி ஒரு வருட காலம் சுழற்சி முறையில் தமக்கு வழங் கப்பட வேண்டும் என்று புளொட் வற்புறுத்தி வருகின்றது.

அதற்குப் பதிலாக அக்கட்சி யின் இருவருக்குத் தலா எட்டு மாதங்களுக்குக் குறையாத காலம் அப்பதவியை வழங்கு வதன்மூலம்இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்கலாமா என்ற ஆலோசனை கூட்டமைப்பின் உயர்மட்டத்தில் தற்போது ஆராயப்படுவதாகத்தெரியவரு கின்றது.

சுழற்சி முறை ஆசனத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ். அணியில் போட்டியிட்டவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவாள ருமானஜெயசேகரத்துக்குஇலங் கைத்தமிழரசுக்கட்சித்தலைமை தன்னிச்சையாகவழங்கி, அந்த நியமனம்தேர்தல்ஆணையாள ராலும்உறுதிப்படுத்தப்பட்டு விட் டது. இந்தப் பின்புலத்தில், அதனை மாற்றுவதற்குத் தமிழ ரசுக் கட்சித் தலைமை பெரும் பாலும்இணங்காதுஎன்றேதெரி கின்றது.

இதற்கிடையில், இந்த விவ காரத்தை ஒட்டித்தமதுகட்சியின் ஆட்சேபனையை சாணக்கிய அரசியல் மொழியில் கடிதமாக கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு அனுப்பிவைத்தி ருந்தார் புளொட் தலைவர் சித் தார்த்தன் எம்.பி.

இக்கடிதம் கிடைத்தமையை அடுத்து சம்பந்தன், நேற்று சித் தார்த்தனோடுதொலைபேசியில் உரையாடினார் என அறிய வந்தது.

"உங்கள் கடிதம் கிடைத்தது. முழுவதும் வாசித்தேன். இது குறித்து மாவையுடனும் பேசி யுள்ளேன். இந்த விவகாரத்தை நாங்கள் பேசித் தீர்ப்போம்." - என்று சித்தார்த்தனிடம் நேற்று சம்பந்தன் கூறினார் எனவும் அறிய வந்தது.

இதற்கிடையில் - இந்த விவ காரத்தில் புளொட்டையும் திருப் திப்படுத்தும்விதத்தில்ஓர்இணக் கமானதீர்வுயோசனைஒன்றை இலங்கைத்தமிழரசுக்கட்சியின் சில வட்டாரங்கள் பிரேரித்திருக் கின்றனவாம்.

வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம்2018செப்ரெம்பர் வரை உள்ளது. இதற்கிடையில் இந்த ஆண்டு நவம்பர் அல்லது டிசெம்பரில்உள்ளூராட்சித்தேர் தலுக்களுக்கான உத்தியோக பூர்வ அறிவிப்பு வரும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

தற்போதுமாகாணசபையில் இடம்பெற்றிருக்கும்கூட்டமைப்பு உறுப்பினர்கள் இரண்டுக்கும் குறையாதோர், உள்ளூராட்சித் தேர்தல்களில்போட்டியிடும்இலக் கோடுஉள்ளனர்.அவர்கள்உள் ளூராட்சித்தேர்தலில்போட்டியிடு வதாயின்அதற்கானவேட்புமனு வைத் தாக்கல் செய்ய முன்னர் மாகாண சபை உறுப்பினர் பத வியை இராஜினாமாச் செய்ய வேண்டும்.

அந்தவகையில்உள்ளூராட் சித் தேர்தல் வேட்பு மனு ஏற்கப் படும்போது குறைந்தது இரண்டு மாகாணசபைஉறுப்பினர்பதவி யாவது வெற்றிடமாகும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி யினரால் அவ்வாறு ஏற்படும் இரண்டு வெற்றிடங்களையும் புளொட்டுக்குத் தாரை வார்ப்பது குறித்தே இப்போது சிந்திக்கப்படு கின்றதாம்.

உள்ளூராட்சித்தேர்தல் அறி விப்புக்குப் பின்னரும் குறைந்த பட்சம் எட்டு மாத காலத்துக்கா வது வடக்கு மாகாண சபையின் தற்போதைய ஆட்சிக் காலம் தொடரும் என எதிர்பார்க்கப்படு கின்றது.

ஆக, சுழற்சி முறையில் ஒரு போனஸ்ஆசனத்திற்குஒருவருட உரிமை கோரும் புளொட் டுக்கு எட்டு மாதங்கள் நீடிக்கக் கூடிய தாக இரண்டு ஆசனங்களை வழங்கிச்சமாளிக்கலாமாஎன்று தற்போது சிந்திக்கப்படுகின்றது.

இந்தச் சமரசத் திட்டத்துக்குப் புளொட் அமைப்பு இணங்குமா என்பது இதுவரை தெரிய வர வில்லை. (உ)

# வடக்கு மாகாண சபையை முடக்க தென்னிலங்கை சதி

## குற்றஞ்சாட்டுகிறார் முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசன்



அராலி, ஜூலை 30

“வடக்கு மாகாண சபை தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைக்குப் பலம் சேர்த்துவிடும் என தென்னிலங்கைத் தரப்புக்கள் அஞ்சுகின்றன. அதனால் எம்மவர்களை வைத்தே வடக்கு மாகாண சபையின் செயற்திறன் தொடர்பாக விசமத்தனமான பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.’’

இவ்வாறு தெரிவித்தார், வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

அராலி மேற்கு முத்தமிழ் சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாண சபை கடந்த மூன் றரை வருடங்களைக் கடந்துவிட்ட போதும் ஊழல்கள் செய்ததைத் தவிர வேறு எதனையும் சாதிக்கவில்லை, பிரேரணைகளை நிறைவேற்றியுள்ளதே தவிர வினைத்திறனாகச் செயற்படவில்லை என மாகாண சபையிலேயே சிலர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இவர்கள் மக்கள் மத்தியிலும் இதே கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். அரசியல் உள்நோக்கம் கொண்டவர்களே அப்படி விமர்சிக்கின்றனர்.

விமர்சனங்கள் ஒரு பயிருக்கு உரம் இடுவது போன்று இருக்க வேண்டுமே தவிர, அதன் வேரையே அறுத்து விடுவதாக இருக்கக் கூடாது. இப்போது வடக்கு மாகாணசபை மீது வைக்கப்பட்டு வருகின்ற குற்றச்சாட்டுகள், விமர்சனங்கள் எல்லாம் மாகாணசபையை வளப்படுத்தும் நோக்கிலோ, வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் நோக்கிலோ வைக்கப்படவில்லை.

மாறாக, மாகாண சபையைப் பலவீனப்படுத்துவனவாகவும் வட மாகாண சபை மீது மக்கள் மத்தியில் அபகீர்த்தியை ஏற்படுத்துவனவாகவுமே அவை உள்ளன.

இலங்கையின் ஏனைய மாகாண சபைகள் 30 வருடங்களை எட்டியுள்ள நிலையில் வடக்கு மாகாணசபை இப்போது தான் மூன்றரை வருடங்களைக் கடந்து வந்திருக்கிறது. இந் நிலையில், ஏனைய மாகாண சபைகளுடன் ஒப்பிட்டு வட மாகாண சபை எதுவுமே செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டுவது அறிவிலித்தனமானது.

தென் இலங்கை மாகாண சபைகள் எப்போதுமே மத்திய அரசாங்கத்தின் ஆசீர்வாதம் பெற்றவை. முழுமையான அதிகாரப் பகிர்வு அம்மாகாணங்களுக்கு அவசியம் இல்லை.

ஆனால், வடக்கு மாகாண சபைக்கு அவ்வாறான நிலை இல்லை. எந்த அபிவிருத்தியை அல்லது வேலைத் திட்டத்தை முன்னெடுத்தாலும் நாம் விரும்பிய விதத்தில், விரும்பிய நேரத்தில் அவற்றை முடிக்க முடியாதவாறு மத்திய அரசின் அதிகாரத் தலையீடுகள் பெரும் தடைகளாகவே இருக்கின்றன.

மூன்று தசாப்த காலப் போரில் சமூக, அரசியல், பொருளாதாரக் கட்டுமானங்கள் யாவும் சிதைவடைந்த நிலையிலேயே வடக்கு மாகாணம் உள்ளது. இவற்றைச் சீரமைப்பதற்கு மூன்று தசாப்த காலம் கூடப் போதாது.

இந்த நிலையில், வடக்கு அமைச்சர்களையும் முதலமைச்சரையும் விமர்சிப்பது, மக்கள் மத்தியில் இருந்து எம்மை அந்நியப்படுத்தும் உள்நோக்கம் கொண்டது. -என்றார். (ம)

## பொதுக்கூட்டம்

தெல்லிப்பழை, ஜூலை 30

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு கல்லூரி முதன்மை மண்டபத்தில் அதிபர் ரி.வரதன் தலைமையில் இடம்பெறும்.

★★★

தென்மராட்சி, ஜூலை 30

தென்மராட்சிப் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்குத் தென்மராட்சிப் பிரதேசசெயலக மண்டபத்தில் சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். (ச)

## மனவளக் கலையின் திறனூக்கப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மனவளக் கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சாதாரண மனிதனை முழு மனிதனாக்கும் மனவளக் கலையின் ஆரம்ப ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் இன்று மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இடம்பெறும்.

தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள மனவளக் கலைப் பேராசிரியர் அருள்நிதி இந்திரசண்முகசுந்தரம் இந்தப் பயிற்சிகளை வழங்குவார்.

## அம்பாந்தோட்டை உடன்படிக்கைக்கு எதிர்ப்பு: ஜனாதிபதிக்கு எதிர் அணி அவசர கடிதம்!

கொழும்பு, ஜூலை 30

அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்படிக்கை நேற்று மதியம் கைச்சாத்திடப்பட்டது. இந்த நிலையில், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒன்றிணைந்த எதிர்க்கட்சி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்றுமுன்தினம் கடிதம் அனுப்பியுள்ளது.

அம்பாந்தோட்டை உடன்படிக்கை குறித்து நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, நேற்று கைச்சாத்திடப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

எனினும், நேற்றுமுன்தினம் சபையில் ஏற்பட்ட சர்ச்சையால் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வரை அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டன.

இந்த நிலையில், நேற்று அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்றுமுன்தினம் கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முன்னர் அது குறித்து, தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்க வேண்டும் என ஒன்றிணைந்த எதிர்க்கட்சி குறிப்பிட்டுள்ளது. இதற்காக, பேச்சு நடத்த தமக்கு உடனடியாக நேரமொன்றை ஒதுக்கித் தரவேண்டும் என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### திருக்கேதீஸ்வரம் புதைகுழி விவகாரம்:

## மன்னார் நீதிவானுக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரிவு மனு!

மன்னார், ஜூலை 30

மன்னார் திருக்கேதீஸ் வரம் மனிதப் புதைகுழி வழக் கில், மன்னார் மாவட்ட நீதிவானுக்கு எதிராக விசேட குற்ற விசாரணைப் பிரிவினர் நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கில் நீதிவான் ஆசீர்வாதம் கிரேசியன் அலெக்ஸ்ராஜா, பாதிக்கப்பட்டவர்கள் எனக் கூறப்படுபவர்களுக்குச் சார்பாகச் செயற்படுகின்றார் எனத் தெரிவித்தே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நீதிவான் ஆசீர்வாதம் கிரேசியன் அலெக்ஸ்ராஜா, குற்ற விசாரணை அதிகாரிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கிறார் எனவும், இந்த வழக்கை விசாரணை செய்த முன்னாள் நீதிவானின் செயற்பாடுகளுக்குப் பிறழ்வான விடயங்களை இவர் மேற்கொள்கிறார் எனவும் நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் இந்த வழக்கை பிறிதொரு நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு குற்ற விசாரணைப் பிரிவினர் கோரிக்கை விடுத்தனர். இதனால் நேற்று முன்தினம் பிறப்பிக்கப்படவிருந்த கட்டளையை நீதிவான் கிரேசியன் அலெக்ஸ்ராஜா ஒத்திவைத்துள்ளார்.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் தமது நிலைப்பாட்டை நீதிவான் நேற்று முன்தினம் திறந்த நீதிமன்றத்தில் அறிவித்தார்.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பகுதியிலிருந்து மாந்தை பகுதிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்கான அகழ்வுப் பணிகளை மேற்கொண்ட போது, கடந்த 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அடுத்து, நீதிமன்ற உத்தரவிற்கு அமைய அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது 84 மனித மண்டையோடுகளும் மனித எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களின் பாதுகாப்புக் கருதி, நீதிமன்ற உத்தரவிற்கு அமைய, பகுப்பாய்வு செய்யும் வரை அவை அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

மனித எச்சங்களை பகுப்பாய்வு செய்யும் இடம், நிறுவனம் மற்றும் மனிதப் புதைகுழி தொடர்பில் நேற்று கட்டளை பிறப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், நீதி சேவை ஆணைக்குழுவிற்கு செய்யப்பட்டுள்ள மனுவின் அடிப்படையில், ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய அடுத்த கட்ட உத்தரவு பிறப்பிக்கப்படும். என்றார். (ம-112)

## கண்டிக்கு விசேட ரயில் சேவை!

கொழும்பு, ஜூலை 30

கண்டி வரலாற்றுச் சிறப்பு மிக்க தலதா மாளிகையின் எசல பெரஹராவை முன்னிட்டு மேலதிக ரயில் சேவைகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன என்று ரயில் வேத்திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் 3 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இவ்விசேட ரயில் சேவை ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது என ரயில்வே போக்குவரத்துக்குப் பொறுப்பான அதிகாரி விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

## போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டுள்ள சீனி கொள்கலன்கள் சோதனைக்கு!


கொக்கெய்ன் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என சந்தேகிக்கப் படும் சீனி கொள்கலன்களை சோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

கொழும்பு - ஒருகொடவத்த சுங்கப்பிரிவில் காணப்படும் 70 சீனி கொள்கலன்கள் இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் கொள்கலன்களைப் பரிசீலனை செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்ப டுள்ளதுடன், இவை பிரேஸிலிருந்து கொண்டுவரப்பட்டவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த எழுபது சீனி கொள்கலன்களையும் சோதனையிடுவதற்கு ஒரு வார காலம் தேவைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் சீனி கொள்கலன் ஒன்றிலிருந்து 320 கோடி ரூபா பெறுமதியுடைய கொக்கெய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)




## மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்து இருவர் காயம்

நேற்று சனிக்கிழமை மதியம்1.20மணியளவில் சாவகச்சேரிஆதாரவைத்தியசாலைக்கு அருகாமையில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில்இருவர்படுகாயமடைந்தனர்.அவர்கள்சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டனர்.

சாவகச்சேரியில்இருந்து கொடிகாமம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன்,உள்ஒழுங்கைஒன்றில் இருந்து வந்த மோட்டார்சைக்கிள்மோதிக்கொண்டதிலேயே இவ்விபத்துஏற்பட்டுள்ளது. (உ-21)

காலைக்கதிர் Kalaikkathir
சசிகா லேணர்ஸ்
THE SASIKA DRIVING SCHOOL
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7678, 077 614 0361
A/L எடுக்கும் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம் இந்தச் சிட்டையைப் பூர்த்தி செய்து வரும் மாணவர்களுக்கு சாரதியப் பயிற்சிக்கு விசேட கட்டணக் கழிவு வழங்கப்படும்.
பெயர் ..............................................
முகவரி ..............................................
..............................................
தொ.பே.இல..............................................

# இராணுவத் தளபதி நேற்று யாழ்ப்பாணம் விஜயம்









யாழ்ப்பாணம், ஜுலை 30

வடக்குப் படைகளின் முன்னாள் தளபதியும் தற்போதைய இராணுவத்தளபதியுமான ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

2016 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்திலிருந்துஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி ஒன்பது பாடங்களிலும் ‘ஏ’ சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் அவர் பங்கு பற்றினார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர்ரெஜினோல்ட் குரேயும் கலந்து கொண்டார்.

நேற்று பலாலியில் உள்ள படைகளின் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளிலும் அவர் பங்குபற்றினார். (உ)

# வின்ஸ்ரார் – யூனியன் அணிகள் இன்று இறுதியில் பலப்பரீட்சையில்!






(கங்கா)

யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில்நடத்தப்பட்டவலைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் வின்ஸ்ரார்அணியும்யூனியன்அணியும்பலப்பரீட்சையில் ஈடுபடவுள்ளன.

இப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் 3.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை வலைப்பந்தாட்டத்திடலில் நடை பெறவுள்ளது.

மேற்படி சுற்றுப்போட்டியில் 8 அணிகள் பங்குபற்றியிருந்தன. முதற்சுற்று ஆட்டங்கள் முடி வடைந்து, அரையிறுதிக்கு வின்ஸ்ரார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யூனியன் மற்றும் பமிலியன் ஆகிய அணிகள்உள்நுழைந்தன.

முதலாவது அரையிறுதியில் வின்ஸ்ரார் அணி 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியையும், இரண்டாவது அரையிறுதியில் யூனியன் அணி 26:07 என்ற புள்ளிகள் அடிப்படையில் பமிலியன் அணியையும் வென்று இறுதிக்குள் நுழைந்தன.

இறுதிப்போட்டிநிகழ்வில் முதன்மை அதிதிகளாக வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலர் சுபாஜினி மதியழகன், சிவன் அறக்கட்டளை நிறுவுனர் கணேஸ்வரன் வேலாயுதம் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இறுதிப்போட்டியைத் தவிர மூன்றாமிடத்துக்கான போட்டியும் இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. வெல்லாவெளியில் புதிய பொலிஸ் நிலையம்

## நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது

மட்டக்களப்பு, ஜுலை 30

மட்டக்களப்பு–வெல்லாவெளிப் பிரதேசத்திற்கான புதிய பொலிஸ் நிலையம் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

இதுவரை காலமும் வெல்லாவெளிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மண்டூர் பால முனை பிரதேசத்தில் இந்தப் பொலிஸ் நிலையம் இயங்கி வந்தது.

இந்நிலையில், கடந்த 30 வருடங்களுக்கு முன்னர்வெல்லாவெளிபொலிஸ் நிலையம் இருந்த இடத்தில் ஒரு கோடியே பத்து லட்சம் ரூபா செலவில் புதிய பொலிஸ்நிலையம்அமைக்கப்பட்டுதிறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசிர் அகமட், பிரதியமைச்சர்எம்.எஸ்.எஸ்.அமீர்அலி, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான கோ. கருணாகரம், மா.நடராஜா, ஞா. கிருஷ்ணபிள்ளை மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இரண்டு ஹெக்டேயர் நிலப்பரப்பில் பிரதான கட்டடத்தொகுதி, நிலையப் பொறுப்பதிகாரி அலுவலகம், ஆயுதக் களஞ்சியம், கடமை உத்தியோகத்தர் அலுவலகம், தொலைபேசி இயக்குநர்அலுவலகம், இரு சிறைக்கூடங்கள், பொலிஸ் அலுவலர்களுக்கான தனி விடுதி என்பன அமைக்கப் பட்டுள்ளன. (ம)





அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை


எமது சேவை 365 நாட்களும்
விரைவாகவும் பாதுகாப்பாகவும் 72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (EXPRESS SERVICE)
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர்வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 3536

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.